# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 கார்த்திகை 04 வியாழக்கிழமை (20-11-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்-357


✪ சம்பள உயர்வு 10 வீதம் (ஆகக்குறைந்தது ரூ. 1,250) ✪ உரமானிய உயர்வு
✪ ஒய்வூதியமும் பத்து வீதம் அதிகரிப்பு ✪ சுயவிருப்பு ஓய்வு ஊக்குவிப்புத் திட்டம் அமுல்

# சலுகைகள் நிறைந்த பட்ஜட்!

கொழும்பு.நவம்பர்20

**பெருமளவு சம்பள - ஒய்வூதிய அதிகரிப்பு, நிதி உதவியுடன் கூடிய சுய ஓய்வூதியத்திட்ட அறிவிப்பு, உரமானிய உயர்வு மற்றும் புதிய வரி விதிப்புகள் அதிகம் இல்லாத - அதேசமயம் பொதுமக்களுக்கு அதிக சலுகைகளை வழங்கு கின்ற - வகையில் அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை (பட்ஜட்டை) நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி நேற்று நாடாளு மன்றத்தில் சமர்ப்பித்தார்.**



நேற்றுப் பிற்பகல் 2.30 மணிக்கு நாடாளுமன்றம் கூடியதும் பிரதி நிதியமைச்சர் பந்துல குணவர்த்தன சகிதம் நிதியமைச்சர் சொக்ஸி சபைக்குள் பிரவேசித்தார்.

வரவு - செலவுத்திட்ட யோசனைகள் அடங்கிய சிவப்புப் பெட்டியுடன் அவர் சபைக்குள் பிரவேசித்ததும் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் ஆரவாரம் செய்து அவரை வரவேற்றனர். சரியாக 2.32 மணிக்கு தமது பட்ஜட் உரையை அவர் ஆரம்பித்தார். அதில் அவர் குறிப்பிட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு:-

2001 இல் - 1.5 வீதமாக இருந்த எமது பொருளாதார வளர்ச்சி இந்த ஆண்டின் முதல் ஆறுமாதங்களில் 5.6 வீதமாக உயர்ந்திருக்கின்றது. எம்மைப் போன்ற வளர்ந்து வரும் நாடுகளுக்கு இது ஒரு திருப்திகரமான நிலையாகும்.

வங்கி, நிதி, அஞ்சல், தொலைத்தொடர்பு ஆகியவற்றின் பங்களிப்புடன் சேவைகள்துறை 6.8 வீத வளர்ச்சியையும் கைத்தொழில்துறை 5.8 வீத வளர்ச்சியையும் கண்டுள்ளன.

வேளாண்துறையின் வளர்ச்சி தொடர்ந்து 1.7 வீதமாகத் தாழ்ந்த

(16ஆம் பக்கம் பார்க்க)

## பட்ஜட் ஒரே பார்வையில்....

- ★ 10 வீத சம்பள உயர்வு (ஆகக்குறைந்தது ரூ.1,250)
- ★ ஒய்வூதியமும் 10 வீதம் கூடும்
- ★ உரமானியம் அதிகரிப்பு
- ★ விவசாயிகளுக்கு வேளாண்மைக் கடன் நிவாரணம்
- ★ வயதில் மூத்த பிரஜைகளின் வைப்புகளுக்கு உயர்ந்த வட்டி
- ★ மீண்டும் சுயவிருப்பு ஓய்வூதியமுறை
- ★ பெறுமதிசேர் வரி முறை சீரமைப்பு
- ★ அரச ஊழியர்களுக்கு இலகு வீடமைப்புக் கடன்
- ★ வருமான வரி விலக்களிப்புக்கான வருமான மட்டம் உயர்வு
- ★ கைத்தொலைபேசிக்கு ஆண்டுக்கு 300 ரூபா வரி
- ★ மதுபானங்களுக்கு மேலதிக வரி

## வரவு-செலவு-துண்டுவிழும் தொகைகள்

| | |
|---|---|
| உத்தேச வருமானம் | - 33,200 கோடி ரூபா |
| உத்தேச செலவினம் | - 46,900 கோடி ரூபா |
| துண்டு விழும் தொகை | - 13,800 கோடி ரூபா |

(அண்ணளவாக)

இந்தத் துண்டு விழும் தொகையை பின்வரும் வழிகளில் ஈடுசெய்ய நிதியமைச்சர் திட்டமிட்டுள்ளார்:-

| | |
|---|---|
| வெளிநாட்டு மானியம் | - 1,000 கோடி ரூபா |
| வெளிநாட்டுக் கடன் | - 5,000 கோடி ரூபா |
| உள்நாட்டு நிதியளித்தல் | - 6,500 கோடி ரூபா |
| உரிமை துறப்பு வரும்படி | - 1,300 கோடி ரூபா |

## வரவு-செலவுத் திட்டத்தின் முக்கியமான அம்சங்கள்

கொழும்பு,நவ.20

நேற்று சமர்ப்பிக்கப்பட்ட ஐ.தே.மு அரசின் மூன்றாவது பட்ஜட்டின் முக்கிய விடயங்கள் வருமாறு:-

★ அரச ஊழியர்களுக்கு அடுத்த ஜனவரி முதல் கணிசமான சம்பள உயர்வு வழங்கப்படும். அவர்களின் மாதச் சம்பளத்தில் பத்து வீதம் அல்லது ஆயிரத்து இருநூற்றியைம்பது ரூபா - இதில் எது கூடியதோ அந்த அதிகரிப்பு வழங்கப்படும். மேலும் நன்மைகள் 2005 இலும் 2006 இலும் வழங்கப்படும்.

2000 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட 1200 ரூபா இடைக்காலப் படியும் 2001 இல் இடைக்காலப் படியாக வழங்கப்பட்ட பத்து வீத சம்பள அதிகரிப்பும் (இல்லையேல் ஆயிரம் ரூபா அதிகரிப்பும்) 2006ஆம் ஆண்டில் அரச ஊழியரின் அடிப்படைச் சம்பளத்தில் இணைக்கப்படும்.

இந்தச் சம்பள அதிகரிப்பு பொலிஸ் மற்றும் ஆயுதப்படைகள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் ஊழியர்களுக்கும் கிட்டும்.

அரச ஊழியரின் சம்பள அதிகரிப்புத் தொடர்பான தில்ஸ ஜேவேந்திரா ஆணைக்குழுவின் அறிக்கை பரிசீலிக்கப்படுகிறது. அடுத்துவரும் மூன்றாண்டுகளில் கட்டம் கட்டமாக அது நடைமுறைப்படுத்தப்படும். அந்த அறிக்கையின் சிபாரிசுகளை ஆய்வு செய்ய சம்பள மீளாய்வுக் குழு ஒன்று நியமிக்கப்படும்.

★ ஓய்வூதியமும் அடுத்த ஜனவரி முதல் பத்து வீதம் அதிகரிக்கப்படுகின்றது. கடந்த பத்து ஆண்டுகளில் வழங்கப்பட்ட மிகப்பெரிய ஓய்வூதிய

(16ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஆரம்பமே பெரும் கூச்சல், குழப்பத்துடன் முடிவுற்றது

இரண்டு வாரங்களாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த நாடாளுமன்றக் கூட்டத்தொடர் நேற்று மிகவும் பரபரப்பான சூழ்நிலையில் ஆரம்பமானது. முதல்நாள் அமர்வே கூச்சல், குழப்பங்களுடன், சபை அல்லோலகல்லோலப்பட்டது. எதிர்க்கட்சிகளான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி., மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியவற்றைச் சேர்ந்த உறுப்பினர்கள் சபை அமர்வைக் குழப்பியடிக்க முனைந்தனர். அவர்களின் முயற்சிகள் பலன் அளிக்கவில்லை. எனினும், சபை அரைமணி நேரத்தின் பின் ஒத்திவைக்கப்பட்டது.

இடைநிறுத்திவைக்கப்பட்ட நாடாளுமன்றக் கூட்டத்தொடரை மீண்டும் கூட்டுவதற்கான ஜனாதிபதியின் அறிவித்தலை சபாநாயகர் சபையில் வாசித்தார்.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி தன்னிச்சையாக நாடாளுமன்றக் கூட்டத்தொடரை இடைநிறுத்தியது தொடர்பான தனது முடிவை சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா சபையில் அறிவித்தார்.

சபாநாயகரின் அறிவிப்பு எதிரணியினருக்கு ஆத்திரத்தை மூட்டியது. சபாநாயகர் எந்தவிதமான முன் அறி

(16ஆம் பக்கம் பார்க்க)

## அன்ரனா திருப்பியவர் மின் தாக்கி மரணம்!

### மாதகல் பகுதியில் நேற்றுச் சம்பவம்

மாதகல்,நவ.20

மாதகல், சகாயபுரம் பகுதியில் நேற்று மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான யோ.கேதீஸ்வரன்(வயது-29) என்பவரே உயிரிழந்தவராவார். இச் சம்பவம் நேற்று நண்பகல் இடம் பெற்றுள்ளது.

அருகில் உள்ள வீட்டிற்கு புதிதாக மின் இணைப்பு வேலைகள் செய்ததாகவும் அவற்றைப் பரிசோதிப்பதற்கு பலியானவரின் வீட்டில் இருந்து மின்சாரம் பெறப்பட்டிருந்தது.

அவ்வாறு அந்த வீட்டிற்கு மின்சாரம் வழங்கிய வயரில் காணப்பட்ட ஓர் இணைப்பு மூலம் தொலைக்காட்சி அன்ரனாவை இழுத்துக்கட்டி இருந்த கம்பி மீது மின் பாய்ந்துகொண்டிருந்ததாகவும் இதனை அறியாமல் அன்ரனாவை திருப்ப முயற்சித்த போதே மின்சாரத்தினால் தாக்குண்டு அவர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பலியானவரின் சடலம் சங்கானை மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது.

(ஐ-8-48-95)

## 'புலிகளின் குரல்' சேவை நீடிப்பு

கிளிநொச்சி,நவ.20

'புலிகளின் குரல்' வானொலி இன்று தனது 13ஆவது ஆண்டை நிறைவு செய்கிறது. இதனையொட்டி இன்று புலிகளின் குரல் ஒலிபரப்பு காலை 5 மணிக்கு ஆரம்பமாகி இரவு 10 மணிவரை தொடர்ச்சியாகப் 17மணி நேரம் நடைபெறவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை முதல் மாவீரர் வாரத்தை ஒட்டி 'புலிகளின் குரல்' ஒலிபரப்பு தினமும் காலை 5 மணிமுதல் இரவு 10 மணிவரை தொடர்ச்சியாக நடைபெறும் - என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 26ஆம் திகதி விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் பிறந்த நாள் வாழ்த்து சிறப்பு ஒலிபரப்பு காலை 5 மணி முதல் இரவு 10 மணிவரை இடம் பெறும்.

(ஐ-8)

## நாடாளுமன்றை ஒத்திவைத்தது தவறு சபையில் சபாநாயகர் நேற்று அறிவிப்பு

கொழும்பு,நவ.20

நாடாளுமன்றத்தை தன்னிச்சையாக ஒத்திவைப்பதற்கான அதிகாரத்தை அரசமைப்புச் சட்டம் ஜனாதிபதிக்கு வழங்கவில்லை. அரசமைப்பின் 70ஆவது ஷரத்தின்படி நாடாளுமன்ற அமர்வை ஜனாதிபதி ஒத்திவைக்கவேண்டுமானால் அதற்கு நாடாளுமன்றத்தின் இணக்கம் பெறப்படவேண்டும். அரசமைப்பின் 4ஆவது ஷரத்தின்படி நாடாளுமன்றத்தின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் கூட்டத்தொடரைக் கூட்டுவதற்கும் சபாநாயகருக்கு உரிமையுண்டு. இதனை கட்டளையாகவே தெரிவிக்கின்றேன்.

- இவ்வாறு சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார். ஜனாதிபதியால் கடந்த 3ஆம் திகதி நள்ளிரவு முதல் ஒத்திவைக்கப்பட்ட நாடாளுமன்றக் கூட்டத்தொடர் நேற்றுக் காலை 10 மணிக்கு கூடியபோதே சபாநாயகர் இந்த அறிவிப்பை விடுத்தார்.

சபாநாயகரின் இந்த நீண்ட அறிவிப்பின் போது சபையில் எதிர்க்கட்சியினரால் பலத்த குறுக்கீடுகள் ஏற்படுத்தப்பட்டன. பொ.ஐ.மு. மற்றும் ஜே.வி.பியைச் சேர்ந்த எம்.பிக்கள் பலத்த குரலில் கண்டனங்களைத் தெரிவித்தனர். இதனால், நேற்றைய முதலாவது அமர்வு பெரும் பரபரப்புக்குள்ளானது.

நாடாளுமன்றத்தை ஜனாதிபதி ஒத்திவைத்ததை எதிர்த்து 130 அரசு எம்.பிக்களும் அதற்கு ஆதரவாக எதிர்க்கட்சியினரும் தன்னிடம் கையளித்த கடிதங்கள் தொடர்பாகவே சபாநாயகர் இந்த அறிவிப்பை விடுத்தார்.

இது தொடர்பாக தமது கருத்துக்களை வெளியிட்ட சபாநாயகர் மேலும் கூறியதாவது:-

நாடாளுமன்றத்தை ஒத்திவைக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடம் பாரம்பரியமாக ஒப்படைக்கப்பட்டிருந்தாலும் அவர் இது குறித்து பிரதமரினதும் நாடாளுமன்ற உறுப்பினர்களினதும்

(16ஆம் பக்கம் பார்க்க)

## சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

### பொ.ஐ.மு., ஜே.வி.பி. தீர்மானம்

கொழும்பு,நவ.20

சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவதென பொ.ஐ.முன்னணியும் ஜே.வி.பியும் கூடித் தீர்மானித்திருக்கின்றன.

நாடாளுமன்றத்தை ஜனாதிபதி ஒத்திவைத்தமை தொடர்பாக நேற்று நாடாளுமன்றம் கூடியபோது சபாநாயகர் விடுத்த அறிவிப்புக்கு எதிராகவே நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவதென இவ்விரு கட்சிகளும் தீர்மானித்திருக்கின்றன.

நேற்று முற்பகல் நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்ட பின்னர் நாடாளுமன்றக் கட்டடத்தில் கூடிய பொ.ஐ.மு., ஜே.வி.பி. உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட வேண்டுமென்று ஏகமனதாகத் தீர்மானித்திருக்கின்றனர். (எ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# புலிகளின் யோசனை பேச்சுக்கான ஓர் ஆரம்பம்; இந்தியாவின் ஆதரவின்றி முயற்சி வெற்றி பெறாது!

## புதுடில்லியில் நோர்வே அனுசரணையாளர் கருத்து

புதுடில்லி,நவ.20

விடுதலைப் புலிகள் இலங்கை அரசிடம் சமர்ப்பித்திருக்கும் பதில் ஆலோசனை வரைவு இறுதியான தல்ல. பேச்சுக்கான ஓர் ஆரம்பமே என்றும் இலங்கை ஜனாதிபதிக்கு, பிரதமருக்கு, இந்தியாவுக்கு அது ஏற் புடையதல்ல என்பதை அனைவரும் அறிவர் என்றும் நோர்வேயின் விசேட சமாதான அனுசரணையாளர் எரிக் சொல்ஹெய்ம் இந்தியாவில் தெரிவித் திருக்கிறார்.

இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ், சுவராஜ் கௌசல் எம்.பி உட்பட சில அரசி யல்வாதிகள் கலந்துகொண்ட ஒரு பகற்போசன விருந்து நிகழ்ச்சியி லேயே சொல்ஹெய்ம் இவற்றைத் தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளின் பதில் யோசனை குறித்து இந்தியாவின் கவலையைத் தெரிவிக்கும் ஒன்றா கவே இந்நிகழ்ச்சி அமைந்திருந்தது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கடலை, விடுதலைப் புலிகள் கட்டுப்படுத்துவார்களேயா னால் இப்பிராந்தியத்தில் நிரந்தர சமாதானம் இருக்கமுடியாது என்றும்-

அந்த நிலை இந்தியாவுக்கு ஏற் புடையதல்ல என்றும் -

சுவராஜ் எம்.பி. நோர்வே அனு சரணையாளரிடம் கூறினார்.

இந்தியாவின் அச்சத்தைப் போககி கருத்து வெளியிட்ட சொல்ஹெய்ம், "இந்தியாவின் ஆதரவின்றி சமாதான முயற்சி வெற்றியடையாது என்பதை நாம் அறிவோம். சமாதான முயற்சி யில் இந்தியா சம்பந்தப்படாது என்ப தையும் அறிவோம். ஆயினும் சமா தான முயற்சியின் வெற்றிக்கு இந்தியா ஒரு முக்கிய காரணி" என்றும் கூறி னார்.

சமாதானப் பேச்சுக்கள் ஒத்தி வைக்கப்பட்டதற்கான காரணங்களை விளக்கிய அவர், அப்பேச்சுக்களிலி ருந்து நோர்வே முற்றுமுழுதாக வெளியேறவில்லை எனவும் இலங்கை ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடை யிலான கருத்து மோதல்கள் தீர்க் கபபட்டதும் நோர்வேயின் பணி ஆரம் பமாகும் எனவும் கூறினார்.

## சிறிய வேவு விமானம், ஹெலி ஒறுகொடவத்தவில் கண்டுபிடிப்பு!

கொழும்பு, ஒறுகொடவத்தவிலுள்ள கொள்கலன் கூடமொன்றில் கைவிடப் பட்டிருந்த கொள்கலன் ஒன்றிலிருந்து ஒரு சிறிய வேவுவிமானமும், ஹெலிக் கொப்டர் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டன.

இதுதொடர்பாக இறக்குமதி முகவர் ஒருவர் விசாரணைக்காக கைது செய்யப்பட்டிருக்கிறார். இந்த வேவுவிமானங்கள் இரண்டும் சுமார் 55 அங்குலம் நீளமானவை என்று சுங்கப் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தி ருக்கிறார். துபாயிலிருந்து இறக்குமதியான ஒரு கொள்கலனுக்கள் வேவு விமானமும் ஹெலியும் இருந்துள்ளன.

தொலைக்காட்சிப் பெட்டிகள், சவர்க்காரம் ஆகியவை கொண்ட ஒரு கொள்கலன், மீள் ஏற்றுமதி செய்யவிருந்தபோது. அது குறித்து சந்தேகம் கொண்ட சுங்கப்பகுதியினர் அதனை சோதனையிட்டபோதே இந்த விமானங் கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இதுதொடர்பாக மேலதிக விசாரணை நடைபெறுகிறது. (எ)

## ஆவாஎலியவில் கிரனேட் வீச்சு!

நுவரெலியாவில், ஆவாஎலிய என்ற இடத்தில் கைக்குண்டுத் தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதா வது:-

நேற்றுக்காலை ஆவாஎலியவில் உள்ள சைக்கிள் திருத்தும் கடை யருகில் கிரனேட் தாக்குதலொன்று மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலில் எவ்வித சேதமும் ஏற்படவில்லை என்று பொலீஸார் தெரிவித்தனர்.

தாக்குதலுக்கான காரணம் தெரிய வில்லை. தாக்குதல் நடத்திய நபர் கைதுசெய்யப்படவில்லை என்று நுவ ரெலிய பொலீஸார் தெரிவித்தனர்.

## தேசிய அரசு குறித்து தெரிவித்த யோசனை: எனக்கு எதிரான ஒழுங்கு விசாரணை தீர்மானம் இன்னமும் அமுலில் உள்ளதா?

### சு.க. பொதுச் செயலாளரிடம் பௌசி கேள்வி

கொழும்பு,நவ.20

நாட்டின் தேசியப் பிரச்சினையைத் தீர்க்க பிரதான கட்சிகள் இணைந்து தேசிய அரசு அமைக்கவேண்டுமென்று நான் சிறிது காலத்திற்கு முன்னர் யோசனை தெரிவித்திருந்தேன். அதனை அடிப்படையாக வைத்து எனக்கு எதிராக ஒழுங்கு விசாரணை மேற் கொள்ள சுதந்திரக்கட்சி தீர்மானித் தது. இத்தீர்மானம் இன்னமும் அமு லில் உள்ளதா?

இவ்வாறு கொழும்பு மாவட்ட பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.பௌசி, சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவிடம் வினவியிருக்கிறார்.

இதுதொடர்பாக கடிதம் ஒன்றை அனுப்பிவைத்திருக்கும் பௌசி, தேசி யப் பிரச்சினையைத் தீர்க்க சகல கட்சிகளும் இணைந்த தேசிய அரசின் அவசியத்தை ஜனாதிபதியும் இப் பொழுது ஏற்றுக்கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும் எனவும் சுட் டிக்காட்டியிருக்கிறார்.

தேசிய அரசு யோசனை குறித்து தான் பேசியபோது, கட்சி ஒழுங்கை மீறும் செயல் அது என்று கூறி தன் மீது குற்றஞ்சாட்டி ஜனாதிபதியின் கையெழுத்துடன் ஒரு கடிதம் தனக்கு அனுப்பப்பட்டதாகவும் - அந்த குற்றச் சாட்டின் பேரில் தனக்கு எதிராக நட வடிக்கை மேற்கொள்ள இன்னமும் எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதை அறிய விரும்புவதாகவும் பௌசி எம்.பி. அந்தக் கடிதத்தில் வினவியிருக்கி றார்.






யாழ். பல்கலைக்கழக ஊழியர் தின நிகழ்வு நேற்று பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட விவசாய பீடாதிபதி பேராசிரியர் எஸ்.இராஜதுரை, துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகன தாஸ், பதிவாளர் திருமதி சி.அனுஷா, கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர், முகாமைத்துவ பீடாதிபதி எம்.நடராஜசுந்தரம் ஆகி யோர் அமர்ந்திருப்பதையும், அனைத்துப் பல்கலைக்கழகங்களின் தொழிற் சங்கத் தலைவர் லயனல் மல்லவத்த நினைவுப்பரிசிலை யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் சி.தங்கராஜாவிடம் கையளிப்பதையும் படங்களில் காணலாம். *(படங்கள் : அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

## யாழ். தேசிய கல்வியியல் கல்லூரியில் விஞ்ஞானம், கணிதம் அனுமதி நிறுத்தம்

யாழ்ப்பாணம்,நவ.20

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியில் புதிய கல்வி ஆண்டுக் கான அனுமதியில் கணிதம், விஞ்ஞா னம் ஆகிய பாடநெறிகள் திடீரென நிறுத்தப்பட்டிருக்கின்றன.

கல்வி உயர்கல்வி அமைச்சின் இந்தத் திடீர் தீர்மானம் யாழ்.கல்வி யியல் கல்லூரி சமூகத்தை அதிர்ச் சியில் ஆழ்த்தியிருக்கின்றது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியில் கடந்த மூன்று கல்வி ஆண்டுகளுக்கான அனுமதியின் போது விஞ்ஞானம், கணிதம் ஆகிய இருபாடநெறிகளுக்கும் மாணவர்களை சேர்த்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டி ருந்தது. ஆனால், அடுத்த புதிய ஆண்டுக்கான அனுமதிக்கு இந்த இரு பாடநெறிகளும் ரத்து செய்யப் பட்டிருக்கின்றன.

இதனால், மேற்படி இரு பாட நெறிகளுக்கும் இனிமேல் பாட்டக் களப்பு கல்வியியல் கல்லூரியிலேயே அனுமதி பெற்றுக்கொள்ளவேண்டிய நிலைமை யாழ்மாணவர்களுக்கு ஏற் பட்டிருக்கின்றது.

கல்வி அமைச்சின் இந்த முடிவு தொடர்பாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் ஆலோசனை கள் சபை கவலை வெளியிட்டிருக் கின்றது.

யாழ்ப்பாண மாணவர்களின், நன்மை கருதி கல்வி அமைச்சின் இந் தத் தீர்மானத்தை மறுபரிசீலனை செய்யு மாறு கோரும்படி ஆலோசனைச் சபை யினர் தமிழ்க்கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினர்களிடம் கேட்டிருக் கின்றனர்.

இதுவிடயத்தில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரைந்து நடவடிக்கை எடுப்பார்கள் எனத் தாங்கள் எதிர்பார்ப்பதாக கல் லூரியின் ஆலோசனைச் சபை உறுப் பினர் ஒருவர் உதயனுக்கு தெரிவித் தார்.

### விபத்தில் ஒருவர் படுகாயம்!

கிளிநொச்சி பஸ் நிலையத்திற்கு அண்மையில் பிரதான வீதியில் நேற் றுக்காலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - பஸ் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

மோட்டார் சைக்கிளைச் செலுத் திச் சென்றவரான வட்டக்கச்சியைச் சேர்ந்த பாக்கியநாதன் சுரேஷ்குமார் (வயது 24)என்பவரே படுகாயமடைந்த வராவார்.

படுகாயமடைந்தவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு மேலதிக சிகிச்சையின் பொருட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (எ-15-6-7)

## பாதுகாப்பு வலயத்தினுள் இருந்த அம்பன் ஆஸ்பத்திரி வெள்ளியன்று நிர்வாகத்திடம் கையளிக்கப்படும்!

வடமராட்சி,நவ.20

அம்பன் அரசினர் கிராமிய வைத் தியசாலை, பருத்தித்துறை பிரதேச சபையின் குடத்தனை உப அலுவல கம் ஆகியன எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை படையினரால் அந் தந்த திணைக்கள அதிகாரிகளிடம் கையளிக்கப்படவுள்ளன.

இது குறித்து படைத்தரப்பு வட மராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் வி.பி.வேலாயுதபிள்ளைக்கும் குறிப்பிட்ட அலுவலகங்களின் பொறுப் பதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளது.

இந்த அலுவலகங்கள் கடந்த வாரம் ஒப்படைக்கப்பட இருந்தவேளை இறுதி நேரத்தில் நிகழ்வு ரத்துச் செய் யப்பட்டிருந்தமை தெரிந்ததே.

கடந்த 2000ஆம் ஆண்டு படை யினர் நாகர்கோவிலில் உயர் பாது காப்பு வலயம் அமைத்ததைத் தொடர்ந்து வைத்தியசாலையும், உப அலுவலகமும் பாதுகாப்பு வலயத்துக் குள் அடக்கப்பட்டிருந்தமையால் 'இவை இடம்பெயர்ந்து இயங்கி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

(எ-173)

## காரைநகர் விபத்தில் காயமடைந்தவர் மரணம்!

யாழ்ப்பாணம்,நவ.20

காரைநகரில் கடந்த 17ஆம் திகதி இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்- உழவு இயந்திரம் இரண்டும் மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினமிரவு அங்கு மரணமா னார்.

காரைநகரைச் சேர்ந்த எஸ் தபோத னன் (வயது-18) என்ற இளைஞனே மரணமானவராவார். வீதியால் வந்து கொண்டிருந்த உழவு இயந்திரமும் மோட்டார் சைக்கிளும் மோதியதா லேயே இவ்விபத்து இடம்பெற்றுள் ளது. இதில் மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்து பயணம் செய்த இளைஞரே படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டு அங்கு மரணமானார்.

மரண விசாரணைகளை மேற் கொண்ட ஊர்காவற்துறை பதில் நீதி வான் மு.திருநாவுக்கரசு, இது விபத் தினால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப் பளித்தார்.

விபத்தில் சம்பந்தப்பட்ட உழவு இயந்திரத்தின் சாரதி பொலீஸாரி னால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.(ஐ-8)

## மாவீரர் நாளை அனுஷ்டிக்க தமிழர்கள் நாம் தயாராவோம்!

### எழுச்சிநாள் ஏற்பாட்டுக்குழு அழைப்பு

யாழ்ப்பாணம்,நவ.20

எமது விடுதலைப் போராட்டத் தின் நியாயப்பாட்டை உலக அரங் கில் ஒலிக்கச் செய்தவர்கள் மாவீரர் கள். அந்தப் புனிதர்களின் நினைவு நாள்களை உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிப்பதற்கு தமிழ் மக்கள் அனைவரும் தயாராவோம்.

எதிர்வரும் மாவீரர் எழுச்சி நாளை முன்னிட்டு யாழ். மாவட்ட மாவீரர் எழுச்சி நாள் ஏற்பாட்டுக்குழு வெளி யிட்ட அறிக்கையிலே மேற்கண்டவாறு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டி ருப்பதாவது:-

கார்த்திகை (நவம்பர்) 27 தமிழ் பேசும் மக்களின் புனிதமான நாள். சர்வதேசமெங்கும் வாழும் தமிழ்பேசும் மக்களால் நினைவுகூரப்படும் உன் னதமான நாள்.

எமது மண்ணின் விடுதலைக்காக, மக்களின் நல்வாழ்வுக்காக, தங்க ளது இளமைகளை, உறவுகளை பந்தபாசங்களைத் துறந்து தலைவ ரின் வழியில் வீறுநடை போட்டு விடு தலை வேள்வியில் ஆகுதியாகிய புனி தர்களை நினைவுகூரும் நன்நாள் மாவீரர் நாள்.

தமிழீழ விடுதலைப் போராட்டத் தின் நியாயப்பாட்டை உலக அரங் கில் ஒலிக்கச்செய்தவர்கள்தான் இந்த மாவீரர்கள். உடலில் இறுதிச்சொட்டு இரத்தம் உள்ளவரை தமிழீழ தாயக நினைவுகளை இதயத்தில் தாங்கி பேரினவாத வல்லாதிக்க சக்திகளை எதிர்த்து போர்க்கொடி தூக்கியவர் கள் இந்த மாவீரர்கள்.

ஒவ்வொரு மாவீரர்களின் தியாக மும் ஒவ்வொரு வரலாற்றை சுட்டி நிற்கிறது. காலத்தால் அழியாத மாவீரர் தியாகம் உலகிற்கு புதிய அத்தியாயத்தைப் படைத்துள்ளது. தமிழ் இனத்துக்குப் புது உத்வேகத் தைக் கொடுத்துள்ளது.

இந்தப் புனிதர்களை ஈன்ற பெற் றோர்களை இந்நாளில் தமிழ் பேசும் மக்களாகிய நாம் நன்றியுணர்வுடன் போற்ற வேண்டிய கடமைப்பாடு உடையவர்களாக இருக்கின்றோம்.

இன்று தென்னிலங்கையில் ஏற் பட்டுவரும் அரசியல் மாற்றங்கள் சமாதான சூழ்நிலையை கேள்விக் குறியாக்கியுள்ளன.

தென்பகுதியில் வாழும் சிங்களத் தலைமைகள் தமிழ் மக்களின் உரி மைகளை, அபிலாஷைகளை, அரசி யல் பேச்சு ஊடாக வழங்கத் தயா ரில்லை என்ற நிலைப்பாட்டை அவர் களது செயற்பாடு எமக்கும் சர்வ தேச சமுகத்திற்கும் உணர்த்தி நிற் கின்றது.

இவ்வேளையில், தமிழ் பேசும் மக்களாகிய நாம் அனைவரும் கிளர்ந்தெழுந்து எழுச்சிக் கோலம் கொண்டு ஒற்றுமையாக எமது தேசி யத் தலைமையின் கரங்களை பலப் படுத்தவேண்டும்.

அரசியல் பேச்சு ஊடாக எந்த வொரு விட்டுக்கொடுப்புகளும் அற்ற தீர்வை தமிழ் மக்களாகிய நாங்கள் பெற சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்கவேண்டும்.

எங்களுக்காக தமதுயிர்களை அர்ப்பணம் செய்த உறவுகள் உறங் கிக் கொண்டிருக்கும் துயிலும் இல் லங்களை நோக்கி, நடைபோடுமாறு அனைத்து தமிழ் மக்களுக்கும் யாழ். மாவட்ட மாவீரர் எழுச்சி நாள் ஏற் பாட்டுக் குழு வேண்டுகோள் விடுக் கிறது.

இந்நன்நாளில் குடாநாட்டில் இருக் கும் மக்கள் அனைவரும் தங்கள் வீடுகளில், வீதிகளில் சிவப்பு மஞ் சள் கொடிகளை கட்டியும், வீதிகளை அலங்கரித்தும், மாவீரர் நினைவுப் பந்தல்களை அமைத்தும், எழுச்சிப் பாடல்களை ஒலிக்கவிட்டும், மாவீரர் நாளை உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்குமாறு வேண்டுகின்றோம். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ-4)

## கூட்டுப்படையின் பலம் தள்ளாடுகிறது

# ஈராக்கிலுள்ள பிலிப்பைன்ஸ் படையை திருப்பி அழைப்பது குறித்து ஆலோசனை




பிலிப்பைன்ஸ் அதிபர் குளோரியா அரோயாவுக்கு மக்களிடம் இருந்த செல்வாக்கு இப்போது குறைந்துவருகிறது. அவரது பொருளாதார கொள்கைகள் மீதும் மக்களுக்கு அதிருப்தி ஏற்பட்டுள்ளது. இராணுவமும் அடிக்கடி புரட்சியில் ஈடுபட்டு வருகிறது. அவரை பதவி விலகக்கோரி மணிலா நகரில் அதிபரின் எதிர்ப்பாளர்கள் வாயிலும், கண்ணிலும் கறுப்புத்துணியைக் கட்டிக்கொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள காட்சி.

ஈராக்கில் தொடர்த் தாக்குதல்கள் நடத்தப்பட்டுவருவதால் அங்குள்ள பிலிப்பைன்ஸ் படையை வாபஸ்பெறுவது குறித்து அந்நாட்டு அரசு ஆலோசித்து வருகிறது.

''ஈராக்கின் நிலைமையைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். நிலைமை மோசமடைவதாகத் தெரிந்தால் எமது படையை உடனடியாகத் திருப்பி அழைத்துக்கொள்வோம்'' - என்று பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி குளோரியோ அரோயா அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் மொத்தம் 170 பிலிப்பைன்ஸ் படையினர் உள்ளனர். அடுத்த ஆண்டு மேலும் 322 படையினரை அங்கு அனுப்ப பிலிப்பைன்ஸ் திட்டமிட்டிருந்தது.

இந்நிலையில், ஜனாதிபதி குளோரியோ அரோயாவின் அறிக்கை வெளியாகியுள்ளது.

இத்தாலியப் படையினரைக் குறிவைத்து ஈராக்கில் நடைபெற்ற தாக்குதலையடுத்தே பல நாடுகள் ஈராக்கிற்கு படை அனுப்பப் பின்னடித்துள்ளன.

ஜப்பானும், போத்துக்கல்லும் படை அனுப்புவது குறித்து மீள் பரிசீலனை செய்யும் என்று அறிவித்துள்ளன. தற்போது, பிலிப்பைன்ஸ் படையையும் ஈராக்கில் இருந்து வாபஸ் பெறுவது குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளதால் அமெரிக்கா நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையே -

ஈராக்கில் சகஜ நிலை உருவாக ஐநா.சபை முக்கிய பங்கு வகிக்கவேண்டுமென அமெரிக்கா விரும்புகிறது. ஆனால், அங்கு பாதுகாப்பற்ற சூழ்நிலை தொடர்வதால் ஐ.நாவின் பணிகள் மீண்டும் அங்கு ஆரம்பிக்கப்படுமா என்பது கேள்விக்குறியே என்று ஐ.நா.செயலாளர் நாயகம் கோபி அனான் தெரிவித்துள்ளார்.

ஈராக்கின் இன்றைய நிலை குறித்து இடைக்கால நிர்வாக ஆட்சிக்குழு அடுத்தமாதம் 15ஆம் திகதி அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளது.

அதன்பின், ஈராக்கில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு ஒன்றை அமைப்பதற்கான காலக்கெடுவை நிர்ணயிக்கும் தீமானம் ஐநா.பொதுச் சபையில் நிறைவேற்றலாம் என்று கூறப்படுகிறது.



பிரிட்டிஷ் மகாராணியை பக்கிங்ஹாம் அரண்மனையில் அமெரிக்க அதிபர் சந்தித்த போது....

# ஷ்வாஸ்நேகர் பதவியேற்றதும் அதிரடி! கோடிக்கணக்கான டொலர் வரி ரத்து!!

கலிபோர்னியா,நவ.20

அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாண ஆளுநராக நேற்றுமுன்தினம் பதவியேற்ற ஆர்னோல்ட் ஷ்வாஸ்நேகர், உடனடி அதிரடியில் இறங்கினார்.

பதவியேற்ற உடனேயே மக்கள் மீது திணிக்கப்பட்டிருந்த கோடிக் கணக்கான டொலர் வரிகளை ரத்துச் செய்தார்.

கலிபோர்னியாவின் ஆளுநராக இதுவரை பதவி வகித்த கிரே டேவிஸ் பல்வேறு வகையான வரிகளை மக்கள் மீது திணித்தார். இதனால், மக்கள் இவர் மீது வெறுப்படைந்து புதிய ஆளுநரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமெனக் கோரினர்.

அதன்படி, கடந்த மாதம் ஆளுநர் தேர்தல் நடந்தது. தேர்தலில் ஆர்னோல்ட் ஷ்வாஸ்நேகர் மாபெரும் வெற்றியீட்டினார்.

மாகாணத்தின் 38ஆவது ஆளுநராக நேற்றுமுன்தினம் சத்தியப்பிரமாணம் செய்த ஆர்னோல்ட் ஷ்வாஸ்நேகர், மக்களின் நன்மதிப்பைப் பெறும் பொருட்டு அவர்களில் திணிக்கப்பட்டிருந்த வரிகளை உடனடியாக ரத்துச் செய்தார்.

இதுகுறித்த அறிவிப்பை அவர் தனது பதவியேற்பு விழாவில் அறிவித்தார்.

"கலிபோர்னியாவுக்கு இன்று புதிய நாள். மாகாணத்தின் வளர்ச்சி மேம்படும் வரையிலும், நிதி நிலைமை சீராகும் வரையிலும் எனக்கு ஓய்வு இல்லை. கலிபோர்னியாவில் அதிசயங்கள், ஆச்சரியங்கள் நடக்கவேண்டும் எனபதையே நான் விரும்புகிறேன். அந்தளவுக்கு நமது செயற்பாடுகள் இருக்கவேண்டும்.

நான் அரசியலுக்குப் புதியவன். இதில் எந்த இரகசியமும் இல்லை. மக்கள் என்னை நம்பி தேர்ந்தெடுத்துள்ளனர். அவர்களின் நம்பிக்கையை வீணடிக்கமாட்டேன். எனக்குப் பொறுப்புக்கள் கூடியிருப்பதை தற்போது உணர்கிறேன்" - என்று அங்கு உரையாற்றும்போது ஷ்வாஸ்நேகர் தெரிவித்தார்.

# ஈராக் மீதான போர் நியாயமானதே; அமெ.அதிபர் புஷ் பிரிட்டனில் பேச்சு!

அமெரிக்க ஜனாதிபதி புஷ் ஈராக் போரை மீண்டும் நியாயப்படுத்தியுள்ளார். ஈராக் மீது போர்தொடுத்தது எந்த வகையிலும் தவறில்லை என்று அவர் கூறியுள்ளார்.

பிரிட்டனுக்கு நான்குநாள் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி புஷ், பக்கிங்ஹாம் அரண்மனையில் நிருபர்கள் மத்தியில் உரையாற்றும்போதே மீண்டும் ஈராக் போரை நியாயப்படுத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை லண்டனில் உள்ள சர்வதேச விமான நிலையத்தில் ஜனாதிபதி புஷ்ஷும் அவரது மனைவி லாராவும் தரையிறங்கினர். அவர்களை வரவேற்பதற்காக இளவரசர் சாள்ஸ் விமான நிலையத்திற்கு வந்திருந்தார்.

அங்கு ஜனாதிபதி புஷ்ஷையும், அவரது மனைவி லாராவையும் இளவரசர் சாள்ஸ் கைகுலுக்கி வரவேற்றார்.

விமான நிலையத்தில் இருந்து பலத்த பாதுகாப்புடன் அவர்கள் பக்கிங்ஹாம் அரண்மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

நேற்று அரண்மனையில் எலிசபெத் மகாராணி வழங்கிய விருந்துபசாரத்தில் ஜனாதிபதி புஷ் தம்பதியினர் பங்குபற்றினர். பின்னர், அங்கு குழுமியிருந்த நிருபர்கள் மத்தியில் ஜனாதிபதி புஷ் உரையாற்றினார்.

ஜனாதிபதி புஷ்ஷின் விஜயத்தை முன்னிட்டு 14ஆயிரம் பொலஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். தீவிரவாதிகளிடம் இருந்து ஜனாதிபதி புஷ்ஷிற்கு ஆபத்து ஏற்படலாம் என்பதைக் கருதியே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று ஆப்கானிஸ்தான், ஈராக் போர்களில் பங்குபற்றிய பிரிட்டிஷ் வீரர்களை ஜனாதிபதி புஷ் சந்தித்தார்.

அதனையடுத்து, நியூயோர்க் உலக வர்த்தகமையம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் கொல்லப்பட்ட பிரிட்டிஷ் பிரஜைகளின் நினைவாலயத்திற்குச் சென்ற ஜனாதிபதி புஷ் அங்கு அஞ்சலி செலுத்தினார்.

இன்று பிரதமர் பிளேயரை சந்திக்கும் ஜனாதிபதி புஷ், ஈராக் போர் குறித்து விரிவாக ஆராய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க, ஜனாதிபதி புஷ்ஷின் விஜயத்தை எதிர்க்கும் ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் நேற்றுபக்கிங்ஹாம் அரண்மனையை நோக்கி நகர்ந்தனர்.

எனினும், பொலஸார் அவர்களைத் தடுத்து நிறுத்தினர்.

### தண்ணீருக்குள் திருமணம்!

கெய்மன்,நவ.20

பிரிட்டனில் கெய்மன் தீவில் தண்ணீருக்கு அடியில் இருந்தவாறு 13 ஜோடிகள் திருமணம் செய்து சாதனை படைத்துள்ளன.

இதற்காக இந்த ஜோடிகள் தண்ணீருக்கு அடியில் ஒட்சிசன் சிலிண்டர்களைச் சுமந்துகொண்டு இரண்டு வாரங்களுக்கும் மேலாகப் பயிற்சியெடுத்தனர்.

இவர்கள் அனைவருக்கும் திருமணச்சடங்கை நிறைவேற்றிய மதகுரு, தண்ணீருக்கு அடியில் செல்லவில்லை. ஆனால், படகில் இருந்தபடியே அவர் சடங்கை நிறைவேற்றினார்.

தண்ணீருக்கு அடியில் நடைபெற்ற இவர்களின் திருமணத்தை சிறப்பிக்க 5பேர் கொண்ட பாண்ட் வாத்தியக்குழுவும் தண்ணீருக்கு அடியில சென்று இசை நிகழ்ச்சியை நடத்தியது.

2001ஆம் ஆண்டு அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் 38பேர் தண்ணீருக்கு அடியில் ஒரேநேரத்தில் திருமணம் செய்து கொண்டனர். இதுவே கின்னஸ் சாதனையாக இடம்பிடித்துள்ளது.



அமெரிக்கப் போர்க்கப்பலான யு.எஸ்.எஸ். வென்டிகிரிவ்ட் நேற்று வியட்நாமை வந்தடைந்தது. அமெரிக்க-வியட்நாமிய யுத்தத்தின் பின்னர் அமெரிக்க யுத்தக்கலம் ஒன்று வியட்நாம் சென்றிருப்பது இதுவே முதற்தடவை ஆகும். பலம்வாய்ந்த அமெரிக்கா, வியட்நாமிய போரில் தோற்ற நிலையில், மெக்கொங் ஆற்றில் தம்மைக் கடந்து செல்லும் அமெரிக்காவின் பாரிய யுத்தக்கப்பலை, தமது சிறுபடகிலிருந்து சில வியட்நாமியர்கள் பார்க்கின்றனர்.

# சூடானிய விமான விபத்து: பதின்மூன்று பேர் மரணம்

காா்டோம்,நவ.20

சூடானில் விமானம் ஒன்று நடுவானில் வெடித்துச் சிதறியதால், பதின்மூன்று பேர் பலியாகினர்.

தென்பகுதி நகரான காா்டோமில் இச்சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்தது. விமானம் வெடித்துச்சிதறியதற்கு இயந்திரக்கோளாறே காரணம் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அரசுக்குச் சொந்தமான வெடித்துச் சிதறிய விமானத்தில் சூடானிய மத்திய வங்கிக்குப் பணமும், பொருள்களும் எடுத்துச்செல்லப்பட்டன.

காா்டோம் விமான நிலையத்தில் தரையிறங்குவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் விமானத்தின் இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டதை விமானி கண்டுபிடித்தார். உடனடியாக விமானத்தை காா்டோம் விமான நிலையத்தில் தரையிறக்குவதற்கு முயற்சித்த போதே விமானம் நடுவானில் திடீரென வெடித்துச்சிதறியது.

இதனால், அந்த விமானத்தில் இருந்த பதின்மூன்று பேரும் பலியாகினர். உடனடியாக மீட்புப்படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர்.

விமானத்தில் இருந்த பதின்மூன்று பேரில் ஆறு பேர் வெளிநாட்டு மாலுமிகள், ஐந்து பேர் பாதுகாப்பு அதிகாரிகள், ஒருவர் சூடானிய மத்திய வங்கி முகாமையாளர் என்று சூடானிய அரசு அறிவித்துள்ளது.

விமானம் இயந்திரக் கோளாறால் வெடித்துச் சிதறியது என்று முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளபோதும், இதுகுறித்து விரிவான விசாரணை நடத்துமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

# சவூதிக்கு புதிய தூதரை ஜனாதிபதி புஷ் நியமித்தார்

ரியாத்,நவ.20

சவூதி அரேபியாவுக்கு புதிய தூதர் ஒருவரை அமெரிக்க ஜனாதிபதி புஷ் நியமித்துள்ளார்.

பிரபல கச்சா எண்ணெய் விற்பனை நிறுவனம் ஒன்றின் தலைவரான ஜேம்ஸ்ஒபர் வெட் என்பவரே சவூதிக்கான புதிய அமெரிக்கத் தூதராக நியமிக்கப்பட்டவர் ஆவார்.

சவூதி அரேபியாவின் கச்சா எண்ணெய் விற்பனையில் பல்வேறு மாற்றங்களைச் செய்ய அமெரிக்கா விருப்பம் கொண்டுள்ளது.

இதற்கு வசதியாக எண்ணெய்த் துறையில் அனுபவம் வாய்ந்த ஜேம்ஸ்ஒபர்வெட் நியமிக்கப்பட்டுள்ளார் என்று அமெரிக்கா அறிவித்திருக்கிறது.

இவர் ஜனாதிபதி புஷ்ஷுக்கு மிக நெருக்கமானவர். இவரது நியமனத்தை அமெரிக்க செனட் சபை அங்கீகரித்த பின்னரே இவரது நியமனம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும்.

கடந்த மாதம் சவூதியில் இருந்து அமெரிக்கத் தூதரகங்கள் திடீரென இழுத்து மூடப்பட்டன. தீவிரவாதத் தாக்குதல்களுக்கு அஞ்சியே தூதரகங்களை மூடியதாகத் தெரிவித்த அமெரிக்கா, இரண்டுவாரங்களின் பின் மீண்டும் தனது தூதரகங்களை அங்கு திறந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

### அஸாமில் 6 பேர் கொலை!

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான அஸாமில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டனர். பீஹார் மாநிலத்திலிருந்து அஸாமில் குடியேறிய இந்துக்களே கொல்லப்பட்டவர்களாவர். கடந்த வாரம் ரயிலில் வைத்து 5 அஸாமியர்களை பீஹாரியர்கள் கொன்றிருந்தனர். அஸாமில் பீஹாரிலிருந்து குடியேறியவர்கள் தம்மை அடிமைப்படுத்துவதாக அஸாமியர்கள் கருதுவதால் இரு தரப்பினரும் மோதிவருகின்றனர்.

# யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## (வ-து)

## திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்

# பதவி வெற்றிடம்

கீழ்க்குறிப்பிடும் பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சங்கத்தில் ரூபா 10/- செலுத்திப் பெறப்படும் விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பிக்கப்படவேண்டும். விண்ணப்பங்கள்,

"தலைவர்.
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.
திருநெல்வேலி கிழக்கு.
கோப்பாய்"

என்ற முகவரிக்கு 05.12.2003ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் மட்டும் அனுப்பப்பட வேண்டும். சங்கத்தினால் வழங்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும். இதற்கமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். பதிவுத்தபாலின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.

1. பதவி: **பொதுமுகாமையாளர் (நிரந்தரம்) 101/06**
2. பதவி இல: **165/88 இன் படி குறி: 101/06**
3. சம்பளத்திட்டம்: **31/99 இன் படி**
**6000 - 140x10-160x10 - 9000**

### 4. அங்கீகரிக்கப்பட்ட கல்வி மற்றும் தகைமைகள்:

அ) கூட்டுறவுச் சங்க ஊழியர் 7ஆம் சம்பளத்திட்ட பதவி ஒன்றில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 8ஆம் சம்பளத்திட்ட பதவி ஒன்றில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரிச் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான தகைமையுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றின் முகாமைமட்ட பதவி ஒன்றில் 8 வருடங்களுக்குக் குறையாத அனுபவம். இந்த 8 வருட கால அனுபவத்தில் 2 வருடங்களுக்குக் குறையாமல் சிரேஷ்ட முகாமைமட்ட பதவி ஒன்றில் அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவுச் சங்க ஊழியர் (உயர்தரம்) சான்றிதழ்/க.பொ.த (உயர்தரம்) 3 பாடங்களில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமைமட்டப் பதவி ஒன்றில் 10 வருடங்களுக்குக் குறையாத அனுபவம். இப்பத்து வருட கால அனுபவத்தில் குறைந்தளவில் சிரேஷ்ட முகாமைமட்டப் பதவியில் 2 வருட கால அனுபவம்.

### 5. வயது:

விண்ணப்பதாரிகள் 05.12.2003 இல் 18 வயதிற்குக் குறையாதவர்களாயும் 45 வயதிற்கு மேற்படாதவர்களாயும் இருத்தல் வேண்டும்.

### 6. பொது நிபந்தனைகள்:

1. யாழ். மாவட்டத்தில் இரண்டு வருடங்களுக்கு மேலாக வசித்தவராக இருக்க வேண்டும்.
2. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு பிரமாணங்களுக்கு அமைவாக நிர்வாகத்தினால் விதிக்கப்படும் உரொக்கப் பிணையும் ஆதனப் பிணையும் செலுத்துதல் வேண்டும்.
3. ஆள்சேர்ப்புச் செய்யப்படுபவர் இரண்டு வருட கால தகுதிகாண் அடிப்படையில் பதவியில் அமர்த்தப்படுவர்.
4. கல்வித் தகைமைகள், அனுபவம், வயது, வதிவிடத்தை உறுதிப்படுத்துதல், நற்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட போட்டோ பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இதற்கமையாத விண்ணப்பங்களும் சரிவர பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.
5. தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன், அவர்கள் பதவிகளுக்காக விண்ணப்பிக்கும் போது தமது விண்ணப்பங்களைச் சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்பினால் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அது வெளிப்படுமிடத்து நியமனத்தை இல்லாதொழிக்கப்படும்.
6. விண்ணப்பத்தில் காட்டப்படும் தகவல்களும், இணைப்புக்களும் உண்மையானதும் செம்மையானதுமென உறுதிப்படுத்துவதோடு, ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் இதில் ஏதேனுமொன்று பிழையானதெனவோ அல்லது பொய்யானதெனவோ காணப்படுமிடத்து நஷ்டஈடு பெறாது உடனடியாகப் பதவி நீக்கம் செய்யப்படுவீர்கள் என்பதனை தாங்கள் அறிந்துகொள்ள வேண்டும்.
7. நேர்முகப் பரீட்சையின்பொழுது சகல சான்றிதழ்களின் மூலப் பிரதி சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

யாழ். மாவட்ட அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கம்.
திருநெல்வேலி கிழக்கு. - தலைவர்.
கோப்பாய். (சி-31390) (25-13-26)

## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் நடத்தும் 'எய்ட்ஸ்' தின விழா

யாழ்ப்பாணம்,நவ.20

'யுனிசெவ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் நடத்தும் உலக 'எய்ட்ஸ்' தின விழா எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவன தலைவர் அநல்லதம்பி தலைமையில நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார திணைக்கள திட்டமிடல் அதிகாரி டாக்டர் திருமதி சுந்தரலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார்.

உலக 'எய்ட்ஸ்' தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட ஓவியப்போட்டி, வினாவிடைப்போட்டி என்பவற்றில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களும் இந்நிகழ்வில் வழங்கப்படவுள்ளன.

கலை நிகழ்வுகள் வரிசையில் செஞ்சொற் செல்வர் இரா.செல்வவடிவேல் தலைமையிலான பட்டிமன்றம், செயல்திறன் அரங்க இயக்கத்தினர் வழங்கும் 'எய்ட்ஸ்' விழிப்புணர்வு நாடகம் என்பன இடம்பெறவுள்ளன.

(ம-4)

## கடையை சேதப்படுத்திய இருவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,நவ.20

றியோ ஐஸ்கிறீம் விற்பனை நிலையத்தினைத் தாக்கி சேதப்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இருவரை யாழ் நீதிமன்ற நீதிவான் எதிர்வரும் 3 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு யாழ்.நீதிவான இ.த.விக்னராஜா உத்தரவிட்டார்.

நேற்றுமுன்தினம் நல்லூர் ஆலய வீதியில் அமைந்துள்ள மேற்படி நிறுவனத்தில் வேலை செய்யும் ஊழியருக்கும் கடை உரிமையாளருக்கும் இடையே ஏற்பட்ட தகராறு காரணமாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

(ம-5)

# கேள்வி அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்பட்ட திருத்த வேலைகளுக்கான கேள்விகள் சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப்பணிப்பாளர் யாழ்ப்பாணத்தினால் கோரப்பட்டுள்ளது.

1. கூரை திருத்த வேலை, முட்கம்பி வேலி அமைத்தல் (ஏழாலை)
2. களஞ்சிய அறைத் திருத்தம் (வட்டுக்கோட்டை)
3. கழிவு வாய்க்கால் திருத்தம், அறைக் கண்ணாடி பொருத்துதல் (பருத்தித்துறை)
4. கூரைத் திருத்தம் ஏணி அமைத்தல் (பண்டத்தரிப்பு)

அ. கேள்விக்காரர் விண்ணப்பப்படிவத்திற்காக ரூபா 150/- இனையும் மீளளிப்பு வைப்புப் பணமாக ரூபா 250/- இனையும் 28.11.2003 பிற்பகல் 03.00 மணிக்கு முன்பாகப் பணிமனையில் செலுத்தி கேள்விகளை 01.12.2003 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன் பணிமனையில் சமர்ப்பிக்கவும்.

ஆ. மேலதிக விவரங்கள் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**வைத்திய கலாநிதி க.தா.சிவபாதம்.**
பதில் மாகாணப் பிரதிப் பணிப்பாளர். (C/31397)(34-13-26-25)



# ஆலய பரிபாலன சபையினர் பெயர் விவரம்

உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகராலய புதிய பரிபாலனசபை 16.11.2003 இல் நடைபெற்ற மகாசபைக் கூட்டத்தின்போது தெரிவுசெய்யப் பெற்றது.

அதன்படி நடப்புவருட புதிய நிர்வாகிகள் விவரம் வருமாறு.

| | |
|---|---|
| தலைவர்: | இ.நடராசா |
| உபதலைவர்கள்: | திரு. ச.ஏகாம்பரநாதன் |
| | திரு. சி.சிவறாம் |
| செயலாளர்: | திரு. ந.கணேசலிங்கம் |
| உபசெயலாளர்: | திரு. இ.கணேசலிங்கம் |
| பொருளாளர்: | திரு. த.செல்லத்துரை |

நிர்வாகசபை உறுப்பினர்கள்:

1. திரு. வீ.சோமநாதர்
2. திரு. பொ.கருணாகரன்
3. திரு. க.சிவராசசிங்கம்
4. திரு. த.திருநாவுக்கரசு
5. திருமதி பு.கனகரத்தினம்
6. திருமதி தே.நாகேஸ்வரி
7. திருமதி பு.விவேகானந்தம்
8. திரு. பா.சிறிகெங்கபாலன்
9. திரு. இ.இராசதுரை
10. திரு. பா.ஜெகதீஸ்வரன்
11. திரு. ந.ரவீந்திரன்
12. செல்வி மா.யோகேஸ்வரி (செல்வி)
13. திரு. த.தர்மஜோதீஸ்வரர்

தலைவர். (34-13-25-26) - செயலாளர். (C/31398)


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 527 |
| திகதி | 18.11.2003 |

டிக்கட்டின் நிறம் - நீலம்
செல்லுபடியாகும் தொடர் இல.
4339666-4354819

வெற்றி இலக்கங்கள் **03 33 52 54**

லக்கினம்
கன்னி



ஜக்பொட் பரிசு
ரூபா. 4,663,500/-
வெல்லப்படவில்லை.

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **5,402,250/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 330,890 | 10 | 3,308,900 |
| 2 இலக்கங்கள் | 30,387 | 20 | 607,740 |
| 1 இல + லக்கினம் | 30,066 | 30 | 901,980 |
| 2 இல + லக்கினம் | 2,770 | 100 | 277,000 |
| 3 இலக்கங்கள் | 799 | 500 | 399,500 |
| 3 இல + லக்கினம் | 76 | 5,000 | 380,000 |
| 4 இலக்கங்கள் | 05 | 100,000 | 500,000 |
| 4 இல + லக்கினம் | - | 4,663,500 | - |
| மொத்தம் | 394,993 | - | 6,375,120 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா.6,375,120/-

தொடர் இல. 5330135க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2003 நவம்பர் 21ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

4349436-9-34
4347629-1-25
4342786-2-70
4344595-1-65
4348177-2-17

PHOENIX

பொது சன நூலகம்

உதயன்

# தீவிரமடையும் அரசியல் நெருக்கடி

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கையிலிருந்த மூன்று முக்கிய அமைச்சுக்களை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க 'பிடுங்கி' தனது பொறுப்பில் எடுத்துக் கொண்டதை அடுத்து எழுந்துள்ள அரசியல் நெருக் கடிகள் இன்னும் தீர்ந்தபாடாகவில்லை.

இந்த அரசியல் நெருக்கடி காரணமாக இடைநிறுத் தப்பட்ட சமாதான முயற்சிகள் மீண்டும் இப்போ தைக்கு ஆரம்பிக்கும் அறிகுறிகள் - சாத்தியங்கள் - தென்படவேயில்லை.

இந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், பிரதமர் ரணில் விக் கிரமசிங்கவுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இரண்டாவது சுற்று சமரசப் பேச்சுக்களிலும் பெரிய பலன் கிட்டியதாகத் தெரியவில்லை. மீண்டும் இரண்டு வாரங்கள் கழித்து அவர்கள் இருவரும் பேச்சு நடத்துவார்கள் என்று அறிவிக்கப்பட்டிருப்பதால் இப் பிரச்சினைக்கு அதுவரை தீர்வு எட்டப்படுவதற்கு வாய்ப்புகள் இல்லை என்றே கருதவேண்டியுள்ளது.

இந்நிலையில், நாடாளுமன்றத்தை ஒத்திவைத் தமை தொடர்பான ஜனாதிபதியின் அறிவிப்புக் குறித்து சபாநாயகர் நேற்று நாடாளுமன்றத்தில் வழங்கிய தீர்ப்பு தற்போதைய சர்ச்சைகளை - அரசியல் நெருக் கடிகளை - மேலும் மோசமாக்கியிருக்கின்றது.

'அரசு ஒரு கட்சியின் கையிலும், நிறைவேற்று அதி கார ஜனாதிபதி வேறு ஒரு கட்சியைச் சார்ந்தவரா கவும் இருக்கும்போது நாடாளுமன்றத்தின் கருத்தைக் கோராமல் அதனை ஜனாதிபதி ஒத்திவைத்தமை தவறானது. இத்தகைய நிலையில் நாடாளுமன்றத் தின் பெரும்பான்மை உறுப்பினர்களின் விருப்பப்படி அவ்வாறு ஒத்திவைக்கப்பட்ட நாடாளுமன்றத்தைத் தம்மால் கூட்ட முடியும்' - என்ற அறிவிப்பை தனது கட்டளையாக வெளியிட்டிருக்கின்றார் சபாநாயகர்.

அதாவது, இனிமேல் இவ்வாறு தம் இஷ்டப்படி ஜனாதிபதி நாடாளுமன்றத்தை ஒத்திவைத்தால், தாம் எடுக்கக்கூடிய பதிலடி நடவடிக்கையை சூச கமாக வெளியிட்டிருக்கின்றார் சபாநாயகர். இத்தீர்ப்பு பெரும் அரசியல் சர்ச்சையாக உருவெடுத்துள்ளது.

இதற்கிடையில் - பிரதமர் ரணிலின் ஐக்கிய தேசிய முன்னணி அரசு அடுத்த ஆண்டுக்கான தனது வரவு - செலவுத் திட்டத்தை நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தது. இனி வரவு - செலவுத் திட்டத்தின் மீதான இரண்டாம் வாசிப்பு விவாதமும் அதை அடுத்து ஒவ்வொரு அமைச்சுக்குமான ஒதுக்கீடுகள் பற்றிய குழுநிலை விவாதமும் நடைபெறவிருக்கின்றன. குழு நிலை விவாதத்தின்போது அந்தந்த அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சர்கள் தாமே நேரில் பிரசன்ன மாகி தத்தமது அமைச்சுக்குரிய ஒதுக்கீடு மீதான விவாதத்தை ஆரம்பித்து உரையாற்றி, இறுதியில் பதி லும் அளிப்பர். அதுதான் வழமை.

இப்போது ஜனாதிபதி பொறுப்பேற்றுள்ள மூன்று அமைச்சுக்களின் மீதான விவாதத்தின்போது அமைச் சர் என்ற முறையில் யார் பிரசன்னமாகி இக்கடமை யைச் செய்யப்போகின்றார்கள் என்பது தெரியவில்லை. அவரே நேரில் வந்து விவாதத்தில் கலந்துகொள் வாரா என்பதே கேள்வி. ஜனாதிபதி வசமுள்ள பாது காப்பு அமைச்சைப் பொறுத்தவரை ஜனாதிபதிக்கு மாற்றாக அந்தப் பொறுப்பை நாடாளுமன்றில் ஏற் பதற்குப் பாதுகாப்புக்கென ஒரு பிரதி அமைச்சர் கூட இல்லை.

அது மட்டுமல்ல, ஜனாதிபதியின்கீழ் உள்ள அமைச் சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகளுக்கு நாடாளுமன் றத்தில் பெரும்பான்மையாகவுள்ள அரச தரப்பினர் அங்கீகாரமளிப்பார்களா என்பதும் சந்தேகமே. பாது காப்பு அமைச்சைப் பொறுத்தவரை அதற்கு நிதி ஒதுக்க மறுத்தால் அதன் விளைவு தென்னிலங்கை யில் மோசமான அரசியல் குழப்பங்களையும் பாதுகாப் புச் சிக்கல்களையும் ஏற்படுத்தும். எனவே, பாதுகாப்பு அமைச்சுக்குரிய ஒதுக்கீடு தங்குதடையின்றி நிறை வேறும் என எதிர்பார்க்கலாம். உள்துறை அமைச் சும் பொலீஸ் திணைக்களத்தோடு தொடர்புபட்டதால் அது விடயத்திலும் விட்டுப்பிடித்து, நசிந்துகொடுத்து, இணங்கிப் போவதைத் தவிர - அது தொடர்பான ஒதுக்கீட்டுத் திட்டத்தை ஏற்று அங்கீகரிப்பதைத் தவிர - அரசுத் தரப்புக்கு வேறு வழியிருக்காது.

ஆனால், வெகுஜனத் தொடர்பாடல் அமைச்சைப் பொறுத்தவரை அரசுத் தரப்பு முரண்டு பிடிக்கலாம். ஏற்கனவே இந்த அமைச்சின் கீழ் உள்ள ஓர் ஊட கத்திற்கு வங்கிக் கடன் வசதி மறுக்கப்பட்டதால் அது நிதிச் சிக்கலில் சிக்குண்டு தவிப்பதாகத் தக வல்.

தற்போதைய அரசியல் நெருக்கடி சமாதான நட வடிக்கைகளில் ஏற்படுத்திய பாதிப்பு ஒருபுறமிருக்க, இவ்வாறு அன்றாட அரசியல் செயற்பாடுகளிலும் அது மோசமான தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது என் பதே உண்மை.

## காலத்தின் பதிவு



உறைகூட முழுமையில்லை .....

படம் : தீபன்

# மீனவர் 'பாஸ்' முறையை ரத்துச்செய்ய கடற்றொழில் அமைச்சிடம் கோரிக்கை

### திணைக்கள அ.அட்டையை பயன்படுத்தவும் சிபாரிசு

யாழ்ப்பாணம்,நவ.20

கடற்படையினரால் தற்சமயம் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் 'பாஸ்' முறையை ரத்துச்செய்து கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தால் மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டையினை கடற்படையினர் பரிசோதனை செய்ய ஏற்பாடு செய்யவேண்டும்.

- இவ்வாறு இலங்கை கடற்றொழில் அமைச்சின் செய லாளர் ஏ.என்.ஆர்.அமரதுங்கவிடம் நீரியல் வளத்திணைக் களத்தின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் எஸ்.யோசப் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக செயலாளருக்கு அவர் கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளார்.

யாழ். குடாநாட்டு மீனவர்கள் கடற்படையினரின் 'பாஸ்' நடை முறையினால் பெரும் இடர்களைச் சந்தித்து வருகின்றனர்.

நீரியல் வளத்திணைக்கள அடையாள அட்டைகள் வைத் திருப்பவர்களுக்கு 'பாஸ்' நடைமுறைப்படுத்தப்படமாட்டாது என்று கடற்படையினர் முன்னர் தெரிவித்திருந்தனர்.

ஆனால், அனைவருக்குமே 'பாஸ்' நடைமுறை தொடர்ச்சி யாக உள்ளது என்று அவர் தனது கடிதத்தில் தெரிவித்துள் ளார். கடற்படையினரின் 'பாஸ்' நடைமுறையை உடன் ரத்துச் செய்வதற்கு நீரியல் வள அமைச்சு கடற்படையுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை -

யாழ். குடாநாட்டில் 8 ஆயிரம் மீனவர்களுக்கு அடையாள அட்டைகள் நீரியல் வளத் திணைக்களத்தினால் வழங் கப்பட்டுள்ளன - என்றும் அவர் தெரிவித்தார்.

(ம-7)

# மலகூடத்தை துப்புரவு செய்வதற்கு மாணவர்களை அனுமதிக்கலாமா?

### யாழ். செயலக கூட்டத்தில் காரசாரமான விவாதம்

யாழ்ப்பாணம்,நவ.20

எந்தவொரு பாடசாலையிலும் கல்வி கற்கும் மாணவர் களை மலசலகூடம் கழுவுவதற்கோ துப்புரவுசெய்வதற்கோ அனுமதிக்கலாமா? என்ற விடயம் தொடர்பாக யாழ். செயலகத் தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் காரசார மான விவாதம் இடம்பெற்றது.

'யுனிசெவ்' நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட 'சிறுவர் நலன் - 2004' என்ற தலைப்பிலான கூட்டத்திலேயே இந்த விடயம் விவாதத்திற்கு உள்ளானது.

கூட்டத்தில் உரையாற்றிய கல்வி அதிகாரி ஒருவர், சில பாடசாலைகளில் மாணவர்களைக் கொண்டே மலசலகூடங் கள் துப்புரவு செய்விக்கப்படுகின்றன என்றும், இதுவும் கல்வி யின் ஒரு செயற்பாடே என்றும் கூறினார். இதனையடுத்தே சர்ச்சை ஆரம்பமானது.

கூட்டத்தில் கலந்துகொண்ட பெரும்பான்மையானோர் அக் கருத்துக்குக் கடும் மறுதலிப்புத் தெரிவித்தனர்.

மேற்படி கூட்டத்தில் கலந்துகொண்ட அரசசார்பற்ற நிறு வனங்களின் பிரதிநிதிகள், உள் ளூராட்சி சபை பிரதிநிதிகள் மற்றும் யாழ். செயலக திட்ட மிடற்பிரிவு அதிகாரிகள் மேற்படி மாணவரைக் கொண்டு மலசல கூடம் கழுவும் திட்டத்தைக் கண் டித்தனர்.

இவ்வாறான செயற்பாடு களைச் செய்யும் அதிபர், ஆசி ரியர்களுக்கு எதிராக நடவ டிக்கை எடுக்கவேண்டும் என பலராலும் வலியுறுத்தப்பட்டது.

பாடசாலைகளிலோ அன்றி கல்லூரிகளிலோ எந்தவொரு மாணவனையும் மலசலகூடம் மற்றும் கழிவு அறை துப்புர வாக்க அனுமதிக்கக்கூடாது.

இதற்கான பொருத்தமான நடவடிக்கைகளை அவ்வப்பகுதி கல்வியதிகாரிகளும், வலயக்கல்விப் பணிப்பாளர்களும், அதி பர்களும் இணைந்து மேற்கொள்ளவேண்டும்.

பொருத்தமான நியமனங்களை அவ்வப்பகுதி உள்ளூராட்சி சபையைக் கொண்டு மேற்கொள்ளவேண்டும் எனவும் கூட்டத் தில் பலரும் வலியுறுத்தினர். (ம-185)

**நாளை**

கார்த்திகை 05
வெள்ளிக்கிழமை
(21.11.2003)
திதி : துவாதசி
முற்பகல் 11.51 வரை
நட்சத்திரம்: சித்திரை
பின்னிரவு 2.01 வரை
சுபநேரம்: 6.10-07.40
ராகுகாலம்: 10.40-12.10
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

பொருள் ஈட்டும் துறை யில் தூய்மை வேண்டும்.

# இராணுவத்தினர் தண்ணீர் எடுப்பதால் மாநகர சபைக்குப் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம்,நவ.20

யாழ். மாநகரசபை அலுவலகத்தில் அமைந்துள்ள கிணற்று நீரினை இராணுவம் தனது பயன்பாட்டுக்காக எடுத்துவருவதால் மாநகரசபையின் தேவைக்கு போதியளவு தண்ணீர் கிடைக் காத நிலைமை ஏற்படுகின்றது என்று சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சில மாதமாக யாழ். மாநகரசபையின் அலுவலக வளவில் உள்ள கிணற்றிலிருந்து இராணுவத்தினர் ஒரு நாளைக் குப் பல தடவைகள் தண்ணீர் எடுத்துச் செல்கின்றனர் என கூறப்படுகின்றது.

இதனால், மாநகரசபைத் தேவைக்கும் ஊழியர்களின் தேவைக்கும் தண்ணீரைப் பெறுவதில் சிரமங்கள் ஏற்படுவ தாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

மாநகரசபை அலுவலகத்திலிருந்து எடுக்கப்படும் நீரினை இராணுவத்தினர் யாழ்ப்பாண கரையோரப் பிரதேசத்திலுள்ள முகாம்களுக்கு எடுத்துச்செல்லப்படுவதாகவும் கூறப்படுகின்றது. (ம-7)

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்!

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணி தைலம்**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No.:-6382)AR/PR/No.-228

யாழ்.மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல.-021-222-2567

(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்)



# திருமண வாழ்த்து



| வேலம்பிராய் | நெடுந்தீவு |
|---|---|
| திரு.திருமதி முத்துலிங்கம் | திரு. திருமதி கதிர்காமநாதன் |
| தம்பதிகளின் புத்திரன் | தம்பதிகளின் புத்திரி |
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| **அம்பிகேஸ்வரன்** | **தர்சினி** |
| (ஈசன்) | (ராஜி) |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

இன்று (20.11.2003)வியாழன் சென்னை ஆதித்தியா மண்டபத்தில நடைபெறும் திருமண விழா சிறப்புறவும் புதுமணத் தம்பதிகள் பதினாறும் பெற்று பல்லாண்டு வாழவும் வாழ்த்துகின்றோம்.

ஆனந்தராஜா - ராணி குடும்பத்தினர் *நாச்சிமார் கோயிலடி,*
றமேஸ் - கௌரி குடும்பத்தினர் *பிரான்ஸ்*
கௌரி - மதியழகன குடும்பத்தினர் சுகந்தி - *வேலம்பிராய்,*
தேவி. றாபி. கஜ *நெடுந்தீவு,*
கண்ணன் - ஜீவா குடும்பத்தினர் *ஜேர்மனி,* சிவா - *டோகார்,*
பத்மநாதன் சாந்தி குடும்பத்தினர் *திராவியடி.*
பத்தினிப்பிள்ளை (அம்மம்மா) *நெடுந்தீவு.*



# கண்ணீர் அஞ்சலி



*மயிலணி கந்தசுவாமி கோயில் பிரதம குருக்களான*

**சிவஸ்ரீ சர்வேஸ்வரக்குருக்கள்**

**வரதராஜேஸ்வரக்குருக்கள்**

அவர்களின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்திபெற வரியப்புலம் பூந்தோட்ட ஞானவைரவப் பெருமானை இறைஞ்சுகிறோம்.

ஓம் சாந்தி!

- சுன்னாகம் வரியப்புலம் பூந்தோட்ட
ஸ்ரீ ஞானவைரவர் ஆலய அடியார்கள்.

(24869) (25-15-16-21)


# சனசமூக நிலைய நிர்வாகிகளுக்கு!

கைதடி,நவ.20

தென்மராட்சி சனசமூக நிலையங்களின் சமாசத்தில் அங்கம் வகிக்கும் சாவகச்சேரி பிரதேச சபையின் மிருசுவில் உபபணிமனைக்குட்பட்ட நிலையங்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மிருசுவில் உப பணிமனையிலும் -

கச்சாய் உபபணிமனைக்குட்பட்ட நிலையங்களுக்கான கலந்துரையாடல் அன்றைய தினம் காலை 11.00 மணிக்கு கச்சாய் உபபணிமனையிலும் - நடைபெறவுள்ளன.

இப்பிரதேசங்களைச் சேர்ந்த சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர் உள்ளிட்ட நிர்வாக உறுப்பினர்கள் அனைவரையும் இதில் கலந்துகொண்டு தங்கள் கருத்துக்களையும், வேண்டுகோள்களையும் முன்வைக்குமாறு தென்மராட்சி சனசமூக நிலையங்களின் சமாசச் செயலாளர் செ.ஆனந்தராஞ்சன் கேட்டுள்ளார்.

(ஒ-75)

# சைக்கிளில் வந்தவரை மோதிவிட்டு தப்பியது மோட்டார் சைக்கிள்

யாழ்ப்பாணம், நவ.20

சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஒருவரை மோட்டார் சைக்கிளில் வந்த நபர் மோதி வீழ்த்திவிட்டு தப்பிச்சென்ற சம்பவம் நேற்றுமுன்தினம் நல்லூர் பகுதியில் கோயில் வீதியில் இடம்பெற்றுள்ளது.

பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் நல்லூரைச் சேர்ந்த ஆர்.தணிகைநாதன் (வயது50) என்பவர் தலை மற்றும் கை, கால்களில் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

விபத்து நடந்த இடத்தில் தன்னை அப்படியே விட்டு விட்டு மோட்டார் சைக்கிளில் வந்தவர் தப்பிவிட்டார் என்று பொலீஸாரிடம் தெரிவித்துள்ள அவர் குறித்த மோட்டார் சைக்கிளின் இலக்கத்தை யாழ். பொலீஸ் நிலையத்தில் கொடுத்து நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுள்ளார்.

(ம-6)


# புதிய கொம்ப்யூட்டர் பாடநெறிகள்



Diploma in Computer Software Engineering

Professional Diploma in Graphic Design

Diploma in Web Multimedia

Diploma in Visual Programming

அனைத்து பாடநெறிகளுக்கும் இலவச பாடநூல்கள்

**ASIAN COMPUTERS**
2G, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.
Tel : 021-222 5677



## University of Jaffna, Sri Lanka.
**Faculty of Graduate Studies**

**Post Graduate Diploma in Public Administration**

Faculty of Graduate Studies, University of Jaffna will entertain applications from Graduates of recognized Universities up to 2003.12.31 for the above mentioned Diploma Programme.

The Post graduate Diploma programme is of one year duration.

Lectures are conducted on weekdays evenings (from 4.00 p.m. to 6.00 p.m) and Saturdays (from 9.00 a.m. to 1.00 p.m.)

Medium of instruction : English.

**Fees:**

| | | |
|---|---|---|
| Course Fee | : | Rs. 20,000/- |
| Application Fee | : | Rs. 100/- |
| Registration Fee | : | Rs. 750/- |
| Library Fee | : | Rs. 750/- |
| Library Deposit | : | Rs. 1000/- (Refundable) |

Course fee should be paid in full at the time of enrolment.

Those who wish to obtain the application forms in person are required to produce a receipt from the Shroff, Finance Branch of the University of Jaffna on a payment of Rs. 100/- per form. Those who wish to obtain the forms by post are requested to send a Money Order/Postal Order for Rs. 100/- drawn in favour of Bursar, University of Jaffna together with a self - addressed Rs.4.50/- stamped envelope of 23x10cm size.

Completed applications should be submitted to the Dean's Office, Faculty of Graduate Studies, University of Jaffna on or before 2003.12.31.

**Registrar,**
University of Jaffna.
2003.11.18.

(C31371)(34-21-15-16)



# 1999-11-20ஆம் திகதி அன்று அரக்கர்களின் கொடூரத்தால் மடுத்திருப்பதியில் அழிக்கப்பட்ட நான்கு செல்வங்களின் நான்காவது ஆண்டு நினைவலைகள்



| ச.தாட்சாயினி | ச.சுஜிதரன் | ச.சுதாதரன் | ச.பபிதரன் |
|---|---|---|---|
| மண்ணகத்தில்: 07.03.1986 | 02.10.1990 | 02.10.1990 | 13.01.1993 |

விண்ணகத்தில்: 20.11.1999

அன்பான எம் செல்வங்களே!
அழுதான குணங்காட்டும் பாசமுகங்களே!
பண்பான பார்வை எங்கே?
பரிவுடன் நாம் அணைத்த கரங்கள் எங்கே?
நான்கு ஆண்டுகள் சென்றாலும் எந்நாளும்
உங்களை நினைத்தே தினம்தினம் கண்ணீர் வடிக்கின்றோம்!
உங்கள் ஆசை முகங்கள் கண்டு அதிக நாளாச்சே
எம் செல்வங்களே! அன்பு மொழி கேட்டு எத்தனைநாள்?
கள்ளம் கபடம் அற்ற எம்மினிய செல்வங்களே!

கலங்குகின்றோம் நாம் கதிகலங்கி
ஏங்கியே அழுகின்றோம் இங்கே – எம்மினிய
உடன் பிறப்புக்களே! எமைத் தனியே விட்டுவிட்டு
உள்ளம் பதைபதைக்க ஒன்றுமே கூறாமல்
எங்குதான் சென்றீர்களோ எமை விட்டு – உங்கள்
உறவினர்களிடம் இரங்கி ஒருமுறை வாரீரோ?
தமிழினத்தின் சோக நிகழ்வுகளில்
உங்கள் பிரிவால் எமைத் துயரில் ஆழ்த்தி விட்டீர்கள்.


**அப்பா (சந்திரமோகன்), அம்மா (சுகந்தினி),**
**சகோதரன் (விஜிதரன்)**

வதிவிட முகவரி: திருநகர். 409 2/2. கிளிநொச்சி.
நிரந்தர முகவரி: 3ஆம் வட்டாரம். புங்குடுதீவு.

தகவல்: ஆ.சந்திரமோகன்.

# கட்சியின் கொள்கைக்கு மாறாகச் செயற்பட்டிருந்தால் அதனை நிரூபிக்கும் வரை நான் பதவி விலகமாட்டேன்!

## ஆனந்தசங்கரி திட்டவட்டமாகத் தெரிவிப்பு



கொழும்பு,நவ.20

"கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் ஆகியோரின் விருப்பத்துக்கு மாறாகத் தலைவர் பதவியில் தொங்கிக் கொண்டிருக்க மாட்டேன் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

"அதேசமயம், கட்சியின் கொள்கை, இலட்சியங்களுக்கு மாறாக நான் செயற்பட்டேன் என்பதை நிரூபிக்கும் வரை தலைவர் பதவியிலிருந்து விலகும் எண்ணம் எனக்கு இல்லை, எனது இறுதி மூச்சு இருக்கும்வரை தொடர்ந்து கட்சிக்காகத் தொண்டாற்றுவேன்."

- இவ்வாறு மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பரராஜசிங்கத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வி.ஆனந்தசங்கரி குறிப்பிட்டிருக்கிறார்.

தனது கடிதத்தில் ஆனந்தசங்கரி மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

மட்டு. மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளையினரால் நிறைவேற்றப்பட்டதாகக் கூறப்படும் தீர்மானங்களுடன், செயலாளர் நாயகத்திற்கு தங்களால் அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரதியை எனக்குக் கையளித்தமைக்கு நன்றி கூறுகின்றேன்.

எமது பல்வேறு கிளைகள்போல் தங்களது கிளையும் பலகாலம் செயற்படாமல் இருந்தமையால் சிலமாதங்களுக்கு முன்பு உங்கள் கிளையை செயற்படவைக்குமாறு நான் கேட்டேன். அப்பொழுது, அது தற்போது கஷ்டம எனவும், சாத்தியம் இல்லை எனவும் கூறினீர்கள். தங்கள் கிளை மீண்டும் சுறுசுறுப்புடன் செயற்பட ஆரம்பித்ததை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன் ஆனால், அக்கிளை முறைப்படி உருவாக்கப்பட்டதா என்பதையும், அதற்குத் தலைவரை இராஜினாமாச் செய்யும்படி கோரவோ, பதவியிலிருந்து இறக்கவோ கோரும் அதிகாரம் உண்டா என்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

பயங்கரக் குற்றவாளி ஒருவன் அப்பதவியில் ஒட்டிக்கொண்டிருக்கின்றான் என்று மக்களை நம்பவைக்கக் கூடிய அளவுக்கு உங்கள் தீர்மானங்களைப் பெருமளவில் ஊடகங்களின் ஊடாக பிரசாரம் செய்ய வேண்டியதன் அவசியம்தான் என்ன என வருத்தத்துடன் கேட்க விரும்புகின்றேன்.

தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவாளர்கள் என உறுதியாகக் கூறக்கூடிய 36 ஆயிரத்து 217 வாக்காளர்களால் நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட கட்சியின் தலைவருக்கு எதிராக முறைப்படி உருவாக்கப்படாத 21 நபர்கள் கொண்ட ஒரு குழுவால் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்திற்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து பிரசாரம் செய்கிறீர்கள். இந்த 21 நபர்களும் சேர்ந்து தங்களை நாடாளுமன்ற உறுப்பினர் பதிவியிலிருந்தும் சிரேஷ்ட உப தலைவர் பதவியிலிருந்தும் இராஜினாமாச் செய்யும்படி தீர்மானம் நிறைவேற்றினால் இராஜினாமாச் செய்வீர்களா? நான் அமைதியாக இருக்கின்றேன் என்ற காரணத்திற்காக உங்களில் சிலர் கடுமையாக ஓடுகின்றீர்கள். கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் ஆகியோரின் விருப்பத்திற்கு மாறாக நான் தலைவர் பதவியில் தொங்கிக்கொண்டிருக்கமாட்டேன் என்பதை மிகத் தெட்டத்தெளிவாக தங்களுக்கும் என்னைக் கட்சியிலிருந்து வெளியேற்றவேண்டும் என்பதில் மிக அக்கறையுடன் செயற்பட்டுக்கொண்டிருப்பவர்களுக்கும் மிகவும் அழுத்தமாகக் கூறிவைக்க விரும்புகின்றேன்.

### பதில் கூற வேண்டியவன் நான்

நான் எனது பதவியிலிருந்து இறங்குவதற்கு முன்பு அக்கோரிக்கை சுயமாகச் சிந்தித்துச் செயற்படும் எமது கட்சியின் உண்மையான உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் மத்தியிலிருந்து எதுவித நிர்ப்பந்தமும் இன்றி வருகின்றதா என்பதை அறியவேண்டும் எனக்கு வாக்களித்த 36ஆயிரம் 217 வாக்காளர்களுக்கும் உங்களைப் போன்ற தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்களுக்கும், வாக்களித்த பல்லாயிரக் கணக்கான வாக்காளர்களுக்கும் பதில் கூறக்கடமைப்பட்டவன் நான். பல கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்களுள என்னையும் உங்களையும் தேர்ந்தெடுத்தவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிக் கட்சிக்காரர்கள் அல்லவா?

கொழும்பு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைச் செயலகத்தில் ஜூலை மாதம் 6ஆம்திகதி நடைபெற்ற மத்திய செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு 9 மத்திய செயற்குழு உறுப்பினர்கள் உட்பட 21 பேர் உங்கள் தீர்மானங்களுக்கு ஏகமனதாக ஆதரவு அளித்தமை வருத்தத்திற்குரியது. அக்கூட்டத்தில் எனது நிலைப்பாட்டை சகலரின் திருப்திக்கேற்ப பூரணமாக விளக்கி எனது தலைமையில், உறுப்பினர்களுக்கு நம்பிக்கையில்லை எனின் தலைவர் பதவியை இராஜினாமாச் செய்யமுன்வந்தேன். அவ்வேளை, நீங்களும் கட்சியின் செயலாளர்நாயகம் இரா.சம்பந்தனும் எமது கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களின் நாடியைப் பிடித்துப்பார்த்து நிலைமையை உணர்ந்தபடியால் மௌனமாக இருந்தீர்கள். அன்று தலைவர் மீது நம்பிக்கைப் பிரேரணை ஒன்று பிரேரிக்கப்பட்டு, ஆமோதிக்கப்பட்டும் அப்பிரேரணையை நான் சபையின் முடிவுக்கென வாக்கெடுப்புக்கு விட்டிருக்கமுடியும் ஆனால், மாறுபட்ட தீர்மானம் எதுவும் இருக்காதபட்சத்தில் அதற்கு அவசியம் எழவில்லை. இருப்பினும், இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியதெனக் கொள்வதே சரியானதும் நியாயமானதுமாகும் அதுவே, அன்று அநேக உறுப்பினர்களின் நிலைப்பாடாகவும் இருந்தது. பிற சக்திகளின் உதவியை நாடாது அந்த விடயத்தை அத்துடன் நீங்கள் நிறுத்தியிருக்கவேண்டும்.

இங்கு குறிப்பிட்டுள்ள கடிதத்தின்படி 26.10.2003 ஆம் திகதி உங்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு கொழும்புக் கூட்டத்தில் கலந்துகொண்ட மத்திய செயற்குழு உறுப்பினர்களும் வாக்களித்துள்ளனர். இந்த விடயம் ஏற்கனவே ஒரு தடவை எடுக்கப்பட்டுவிட்டது எனத் தெரிந்திருந்தும், எதுவித உதவியுமற்ற நிலையில் உள்ள எமது கட்சியின் அப்பாவி மத்திய குழு உறுப்பினர்கள் கடுமையான அழுத்தத்திற்கு அடங்கி வேறு வழியின்றி உங்களால் எடுக்கப்படும் எந்தத்தீர்மானத்திற்கும் வாக்களிப்பார்கள் என அறிந்திருந்தும் அக்கூட்டத்தைக் கூட்டியதை நியாயப்படுத்தக்கூடிய ஏதாவது காரணங்கள் இருந்தனவா என உங்கள் மனச்சாட்சியைக் கேட்டுச் சொல்லுங்கள் பார்க்கலாம்.

### சகபாடிகளின் செயற்பாடு

நியாயமான முறையில் சொல்லுங்கள். என்னுடைய கருத்துடையவன் நான் ஒருவன் மட்டும்தானா? அன்றி கட்சியில் என் கருத்தை ஒத்த கருத்துடையவர்கள் வேறு சிலரும் இருக்கின்றார்களா? தற்போது அனைவரும் அறிந்த காரணத்தின் நிமித்தம் அவர்கள் கருத்துக்களை மாற்றிக் கொண்டுவிட்டனர். யாரையோ திருப்திப்படுத்துவதற்காக மிகவும் கீழிறங்கி, தேவைக்கதிகமாக எமது சகபாடிகளில் சிலர் நடந்துகொள்ளும் வேளையில் நீங்கள் கொஞ்சம் கண்ணியமாக நடந்துகொள்வதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். அவர்களுக்குத் தயவுசெய்து கூறிவையுங்கள் - அத்தகைய செயல்களால் யாரையும் ஏமாற்ற முடியாதென்று.

உங்களுடைய கூட்டத்தில் மிகக் குறைந்த எண்ணிக்கையுடைய 21 பேர்தான் சமுகம் கொடுத்திருந்தனர். ஆனால், அவர்கள் அனைவரும் கட்சியின் நீண்டகால ஆதரவாளர்கள் மட்டுமல்லாது, தார்மீகக் கடமையும் உடையவர்கள் ஆனால், நம்மவர் சிலர் இத்தகைய கூட்டங்களைத் தேர்தல் கால பிரசாரக் கூட்டங்களைப்போல எண்ணும்போது தாங்கள் மட்டும் இக்கூட்டத்தை கட்சி உறுப்பினர்களை மட்டும் கூட்டி நடத்தியமை மகிழ்ச்சி தருவதாக உள்ளது. எமது சகபாடி ஒருவர் பிரார்த்தனைக் கூட்டமென கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், நலன்விரும்பிகள் ஆகியோரை வரவழைத்து கட்சியின் வரலாற்றில் என்றும் நடக்காதவகையில் வாடகைக்கு ஒழுங்கு செய்த வாகனங்களில் ஆள்களை ஏற்றி, இறக்கி ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்றியுள்ளார்.

அம்பாறையில் ஒரு கார்னிவேல் போல 500 பேர் வரை கலந்துகொண்ட பிரமாண்டமான கூட்டத்தில் ஒரு கட்டுக் கோப்பான கட்சியின் செயற்பாட்டுக்கு விரோதமாக பொதுக்கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாம். பல தியாகங்களைச் செய்து, சிறந்த பல கொள்கைகளை அடித்தளமாகக்கொண்டு செயலாளர் நாயகமாகச் செயற்பட்டு மறைந்து போன அ.அமிர்தலிங்கம் அவர்களின மறைவுக்குப்பின் நம்கட்சி சின்னாபின்னமாகிவிடக்கூடாது. தயவுசெய்து நமது கட்சியின் கொள்கைத் திட்டங்களை ஒருதடவை படித்துப் பாருங்கள் மற்றவர்களுக்கும் அதைப்பற்றிக் கூறுங்கள்.

### காங்கிரஸின் நோக்கம

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி எமது கட்சியை ஒழிப்பதை நோக்கமாகக்கொண்டது. அக்கட்சியின் நியாயமற்ற குற்றச்சாட்டுகளுக்கு நம்மவர் எவரும் ஒருவிரல் கூட அசைக்கவில்லை. நாடாளுமன்றத்தில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரைப் பார்த்து "10 ஆண்டுகள் போராடினாலும் உங்களால் பனையைப் பிடிக்கமுடியாது. ஆனையிறவைப் பிடிப்பதென்பது பகற்கனவு" - என்று கூறியவன் நான் மட்டுமே. ஜப்பானின் விசேட தூதுவரிடம் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் என்ன கூறினார் என்றும், அதில் நான் குறுக்கிட்டு என்ன கூறினேன் என்றும் 100 தடவை விளக்கியிருப்பேன். அ.இ.த.கா.கட்சியின் தலைவர் நான் கூறுவதை விளங்கிக கொள்ளமறுப்பது ஏன் என்று எனக்குத் தெரியும். ஆனால், எனது விளககத்தை உங்களாலும் புரிந்துகொள்ள முடியவில்லை; கட்சியின் செயலாளா நாயகம் அவர்களாலும் புரிந்துகொள்ள முடியவில்லை.

கிளைத் தலைவர் இல்லாமல் மிகக்குறுகிய கால அவகாசத்தில் திருகோணமலைக் கிளையைக் கூட்டி, அவசர அவசரமாக நிறைவேற்றிய இரு தீர்மானங்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றேன். யாரோ ஒருவரின் கற்பனையில் உருவாகிய தீர்மானங்களே அவை. ஆனையிறவு முகாமை மீண்டும் இராணுவத்தினரிடம் கையளிக்க வேண்டும் எனக் கூறும் அளவிற்கு அரசியலில் நான் கற்றுக்குட்டி அல்லன். இடைக்கால நிர்வாகம் பற்றி முதன்முதலில் அபிப்பிராயம் தெரிவித்தவனும் நானே. பி.பி.ஸிக்குக் கூட இது புதிய கதையல்ல. பழங்கதைதான். ஏற்கனவே இரு அரசுகளின் தலைவர்களிடமும் விடுதலைப் புலிகளுக்கு கூடுதல் பிரதிநிதித்துவத்துடன அதனை அவர்களிடமே கையளிக்க வேண்டும் என்று நான் கூறியிருந்தேன்.

கட்சியின் செயலாளர்நாயகம் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க அவரின் முகதாவிலேயே எனது நிலைப்பாட்டிற்கு முற்றிலும் முரணான இரு தீர்மானங்கள் என்னைக் கண்டித்து திருகோணமலைக் கிளையால் நிறைவேற்றப்பட்டன. இத்தகையவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றும் பொறுப்பு யாருடையது?

1998ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலில் யாழ். குடாநாட்டில் போட்டியிடவேண்டாம் என நீங்கள் அனைவரும் அடம்பிடிக்க, போட்டியிடவேண்டும் என உறுதியாக நின்றவனும் நானே! 2சபைகளில் மட்டும் போட்டியிட்டு இரண்டையும் கைப்பற்றினோம். இன்று கூட்டணியைக் காப்பாற்ற தமிழரசுக் கட்சியை புதுப்பிக்கிறார்களாம். அவர்களில் சிலர் அன்று கொஞ்சம் ஒத்துழைப்புத் தந்திருந்தால் குடாநாட்டில் உள்ள அநேகமான அத்தனை சபைகளையும் கைப்பற்றியிருப்போம். அன்று எனது ஆலோசனைகள் நிராகரிக்கப்பட்டிருந்தால் இன்று நாம் யாழ்ப்பாணத்தில் ஓர் ஆசனம் கூடப் பெற்றிருக்கமாட்டோம். அது நாம் அனைவரும் என்றும் மறந்துவிடக்கூடாத கட்சியின் சரித்திரமாகும்.

எனது இப்பதவியை நான் முறையற்ற விதத்திலோ, அசிங்கமான முறையிலோ பெறவில்லை. 30 ஆண்டுகளாக நான் கட்சிக்கு ஆற்றிய சேவையின் காரணமாகவும், கடின உழைப்பாலும் கிடைத்த பதவி. எனக்கு ஒரு புனிதமான கடமையுண்டு. தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் மறைந்த காலத்திலிருந்து எனது முழுநேரத்தையும், கட்சியை அழியவிடாது காப்பதில் செலவுசெய்துள்ளேன். என்னைக் கட்சியிலிருந்து வெளியேற்ற வேண்டும் எனக்கூறுபவர்களில் சிலர் அன்றே கட்சியைக் கலைத்துவிட வேண்டும் எனக் கூறியவர்கள்தான்.

### பொறுப்பு என்னுடையது

வலுவான கொள்கைகளைத் தளமாகக்கொண்டு தந்தை செல்வா, அ.அமிர்தலிங்கம், மு.சிவசிதம்பரம் போன்ற பெருந்தலைவர்களால் உருவாக்கப்பட்டது எமது கட்சி. கிளிநொச்சி நாடாளுமன்ற உறுப்பினராயிருந்தபோது 1972இல் இக்கட்சியை உருவாக்கியவர்களில் நானும் ஒருவன் என்ற பெருமையுடையவன் நான். ஆகவே, இக்கட்சியை வளைத்துக் கொடுத்தேனும் காப்பாற்றவேண்டிய பொறுப்பு பத்துமடங்கு எனக்கு அதிகமாகவே உண்டு.

ஆகவே, எங்களைத் தனியாக விட்டுவிடுங்கள். என்னையும் தனியாகவிட்டுவிடுங்கள். ஏனைய சிலரைப் போல ஒரு நாடாளுமன்ற ஆசனத்துக்காக நான் கட்சியில் தொங்கிக் கொண்டிருக்கவில்லை. 1983 - 1989 காலப்பகுதியில் ஒரு நாடாளுமன்றப் பதவியை துறந்திருந்தவன். மறைந்த அமிர்தலிங்கம், கலாநிதி நீலன் திருச்செல்வம் ஆகியோர் அகாலமரணமடைந்தவேளைகளில் காலியாக வந்த நாடாளுமன்றப் பதவியை விட்டுக் கொடுத்தவன்.

கட்சி என்ன நோக்கோடு ஆரம்பிக்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்கு விரோதமாகச் செயற்படுபவர்களை, பல இன்னல்களுக்கு மத்தியில் நீண்ட 30 ஆண்டுகள் உயர்ந்த இலட்சியத்திற்காக உழைத்த கட்சியை அழிக்காமல், அதற்கு அபகீர்த்தி ஏற்படுத்தாமல், கண்ணியமாக விலகுமாறு வேண்டுகிறேன். கட்சியின் கொள்கை, இலட்சியங்களுக்கு மாறாகச்செயற்பட்டேன் என நிரூபிக்கும் வரை தலைவர் பதவியிலிருந்து விலகும் எண்ணம் எனக்கு இல்லை. எனது இறுதி மூச்சு இருக்கும்வரை தொடர்ந்து கட்சிக்காக தொண்டாற்றுவேன். நல்லதே நடக்கும் என நான் நம்புகின்றேன்.

- இவ்வாறு ஆனந்தசங்கரி குறிப்பிட்டிருக்கிறார்.

# ஜனாதிபதிக்கு எதிரான வழக்கில் அவரை நீதிமன்றுக்கு அழைக்கலாமா?

## 'அப்பீல்' நீதிமன்றில் நேற்றுமுன்தினம் விவாதம்

அரசமைப்பின் 35(1) உறுப்புரையின கீழ் ஜனாதிபதியை நீதிமன்றத்திற்கு அழைக்கமுடியாது.

நேற்றுமுன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதிக்கெதிரான மனுமீதான விசாரணையின்போது அரச தரப்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஐயாத்துரை ஞானதாசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசமைப்புச் சபை சிபாரிசு செய்த உறுப்பினர்களைக்கொண்ட தேர்தல் ஆணைக்குழுவொன்றை அமைக்க ஜனாதிபதி தவறிவிட்டார் எனக் குற்றஞ்சாட்டி இந்த மனுவை பொது நலன்களுக்கான சட்ட அமைப்பு தாக்கல் செய்திருந்தது.

ஜனாதிபதியை நீதிமன்றத்திற்கு அழைக்க நோட்டீஸ் அனுப்பமுடியுமா என்று அரசமைப்பின் 35(3) உறுப்புரையின் கீழ் சட்டமா அதிபரின் ஆலோசனை கேட்கப்பட்டது.

மனுதாரர் சார்பில் சட்டத்தரணி வெலியாமுன ஆஜராகி வாதிடுகையில் - ஜனாதிபதியை நீதிமன்றத்திற்கு அழைக்க சட்டத்தில் இடமிருக்கிறது என்று தெரிவித்தார்.

இந்தப் பூர்வாங்க ஆட்சேபனைக்களுக்கான தீர்ப்பு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 17ஆம் திகதி வழங்கப்படுமென நீதியரசர்கள் உடலகம, ஸ்ரீபவன் ஆகியோர் தெரிவித்தனர்.

மனுவில், ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, சட்டமா அதிபர், சுயாதீன தேர்தல் ஆணைக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனுதாரர் சார்பில் சட்டத்தரணிகள் வெலியாமுன, சான் சேனநாயக்கா, சாந்த ஜயவர்தன ஆகியோர் ஆஜராகினர்.

அரச தரப்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் வி.ஏ.ரத்னாயக்கா, எம்.ஆர்.அமீன், பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஐயாத்துரை ஞானதாசன் ஆகியோர் ஆஜராகினர். (ஓ-5)

# மனைவியை எரித்த கணவன்; வழக்கு மேல் நீதிமன்றத்துக்கு

ஆனைக்கோட்டையில் 2001 ஆம ஆண்டு தனது மனைவியை மண்ணெண்ணை ஊற்றி எரித்துக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஜெயமோகன் என்பவருக்கு எதிரான வழக்கு நேற்றுமுன்தினம் யாழ்.மேல்நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டது.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த ஜெகன்மோகன் லட்சுமி என்பவரை 2001 ஆம் ஆண்டு சித்திரை மாதம் மண்ணெண்ணெய் ஊற்றி எரித்துக் கொலை செய்ததாக அவரின் கணவனான ஜெகன்மோகனுக்கு வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கு யாழ்ப்பாண நீதிவான் திருமதி ஜெ்.இளஞ்செழியன் முன்னிலையில் சுருக்கமுறையற்றவிசாரணை செய்யப்பட்டது. (ம-3)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
# கேள்விப்பத்திர அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு கீழ்வரும் மர/உருக்குத் தளபாடங்கள் வழங்குவதற்கு தகுதிவாய்ந்த உற்பத்தியாளர்கள்/விநியோகத்தர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| விரிவுரை மண்டப ஸ்ராண்ட் | - | 02 |
| கட்டில்கள் | - | 06 |
| கைக் கதிரை | - | 20 |
| பக்க ராக்கை | - | 02 |
| விரிவுரை மண்டபக் கதிரை | - | 45 |
| உயரதிகாரிகள் கதிரை | - | 04 |
| தட்டெழுத்தாளர் மேசை | - | 04 |
| காரியாலய மேசை | - | 10 |
| கண்ணாடி முகப்பிலான அலுமாரி | - | 11 |
| ஸ்ரூல் | - | 160 |
| உருக்கிலான புத்தக ராக்கை | - | 10 |
| உருக்கு அலுமாரி | - | 09 |
| உருக்கு கோவை அலுமாரி | - | 14 |

கேள்விப் பத்திரதாரர் மீளளிக்காத வைப்புப் பணமாக ரூபா 1000/=மும், மீளளிக்கும் வைப்புப் பணமாக ரூபா 5000/=மும், நிதிக் கிளையில் பணமாகச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் சிரேஷ்ட உதவி நிதியாளருடன் (வழங்கல்) தொடர்புகொண்டு கேள்விப் பத்திர ஆவணங்களை 21.11.2003 தொடக்கம் 28.11.2003ஆம் திகதிவரை காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்கள் *நிதியாளர், யாழ்.பல்கலைக் கழகம், திருநெல்வேலி* என முகவரியிடப்பட்டு 05.12.2003 பிற்பகல் 2.00 மணிக்கு முன்பதாக பதிவுத்தபால் மூலமாகவோ அன்றி நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் '*மர/உருக்குத் தளபாடங்கள் வழங்கலுக்கான கேள்விப்பத்திரம்*" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். கேள்விப்பத் திரங்கள் அன்றைய தினம் பிற்பகல் 2.30 மணிக்கு பல்கலைக்கழக சபை அறையில் திறக்கப்படும்.

கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பித்தவர்கள் அல்லது எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட அவர்களது பிரதிநிதிகள் சமுகம் தரலாம்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம். (C31374)(34-21-13-15)


## குழாய்க் கிணறுகள் அமைப்பு.

வலி.வடக்கு,நவ.20

வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் அகதிகளுக்கான ஐ.நா தூதரகத்தின் நிதி உதவியுடன் 9 குழாய்க் கிணறுகள் அமைக்கப்படவுள்ளன.

இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் கடந்த காலங்களில் நீர் பெறுவதில் எதிர்நோக்கப்பட்ட பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு இக் குழாய்க்கிணறுகளை அமைப்பதற்கு வலி.வடக்கு பிரதேச செயலாளர் நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

அளவெட்டி குருவளை நலன்புரி நிலையத்தில் ஒன்றும், அளவெட்டி கிழக்கு கிட்டு நலன்புரி நிலையத்தில் இரண்டும், இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய அருகில் உள்ள நலன்புரி நிலையத்தில் நான்கும், அளவெட்டி மாரியம்மன் கோவிலடி கிராமத்திற்கு ஒன்றும் என இக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்படவுள்ளன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் இக்குழாய்க் கிணறுகளை அமைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன. கிணறுகள் அமைக்கவென ஒரு லட்சத்து 53 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(ம-86)

## டெங்கு ஒழிப்பு தினம்

புத்தளம்,நவ.20

புத்தளம் நகரில் 'டெங்கு' நோயின ஆரம்ப அறிகுறிகள் மீண்டும் தென்பட்டுள்ளதையடுத்து கடந்த 15ஆம் திகதி சனிக்கிழமை அங்கு டெங்கு ஒழிப்பு தினம் பிரகடனம் செய்யப்பட்டது. அன்று முழுநாளும் சிரமதான நிகழ்வுகளும் மக்களுக்கு விழிப்பூட்டும் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

வடமேல் மாகாண சுகாதார சுதேசிய வைத்தியத்துறை, சமூக நலன்புரி அமைச்சர் எம்.எச்.எம் நவாவி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுகளில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்தும் சிரமதான நிகழ்வுகள இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-186)


## வாழ்த்துகின்றோம்; பாராட்டுகின்றோம்

சுழிபுரம் திருவடிநிலை சைவத் தமிழ் கலவன் பாடசாலை அதிபராக விளங்கி ஓய்வுபெற்றவரும், சுழிபுரம் பிரிவு சகல பொது நிறுவனங்களிலும் காலத்துக்கு காலம் தலைமைதாங்கி சிறந்த சமூக, சமயத் தொண்டராக விளங்கி வரும்

# திரு.மு.தம்பியையா

அவர்கள் சமாதான நீதிபதியாக யாழ். மாவட்ட நீதிமன்ற நீதிபதி உயர்திரு. ஆர்.ரி. விக்னராசா முன்னிலையில் (18-11-2003) அன்று சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டதை நாம் வாழ்த்துகின்றோம்; பாராட்டுகின்றோம்.

இவர் நீண்டகாலம் நல்ல சுகதேகியாக வாழ்ந்து மக்கள் சேவை, சமூகப் பணிகள் செய்யவும், குறிப்பாக கந்தரநுபூதி மனனம் செய்விக்கும் பணியில் எம்மோடு ஒருவராக என்றும் விளங்க பறாளை வேலவர் அருளை வேண்டிக் கொள்கின்றோம்.

சுழிபுரம். (சி-31368)(13-15-21) - பஜனைச் சபையார்.



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## பட்டப்பின் படிப்புகள் பீடம்
# பண்பாட்டியல் முதுகலைமாணி - 2002/2003
## இரண்டாம் அரையாண்டுப் பருவத்தேர்வு

**மேற்படி பரீட்சை எதிர்வரும் மார்கழி மாத இறுதிப் பகுதியில் ஆரம்பமாகும். பரீட்சைக்கான விண்ணப்பப் படிவத்தினை பட்டப்பின் படிப்புகள்பீட அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை 05/12/2003 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பீடாதிபதி அலுவலகத்தில் ஒப்படைத்தல் வேண்டும். பரீட்சைக்கான அனுமதி அட்டை, நேர அட்டவணையை 19/12/2003 இலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.**

**பதிவாளர்**
18/11/2003 (C/31370)(35-21-13-15)



## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
# கூறுவிலை கோரல்

2004ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டித் தகடு, மாட்டுவண்டித் தகடு, நாய்த் தகடு என்பவற்றை வழங்குவதற்கு கூறுவிலை கோரப்படுகின்றது.

01. கூறுவிலைப்பத்திரம் வழங்கும் திகதி:- 2003.11.27 வரை
02. கூறுவிலைப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி:- 2003.11.28 ந.ப.12.00 மணிவரை
03. கூறுவிலைகள் திறக்கப்படும் திகதி:- 2003.11.28 பி.ப. 14.30 மணி
04. ஏனைய விபரங்கள் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு: கூறுவிலைப்பத்திரப் பணம் ரூபா 50.00 உம், அதற்குரிய வற்வரி 20%உம் அறவிடப்படும்.

வலிகாமம் மேற்கு பிரதேசசபை,
தலைமையலுவலகம்,
சுழிபுரம்.
2003.11.18. (C/31363)(34-13-15-21)

திருமதி சோ.ஜெயந்தா
செயலாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேசசபை,
சுழிபுரம்.



# தமிழீழ வைப்பகம்
# பணிநிலை வெற்றிடம்

**தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.**

பணிநிலை:- **உத்தியோக உதவியாளர் தரம் - 03**

தகைமைகள்:- **க.பொ.த. (சாதாரணதர) தேர்வில் கணிதம் (கணிதம் 42/ கணிதம் II), தமிழ் உட்பட 05 திறமைச் சித்தியுடன் குறைந்தது 06 பாடங்களில் ஒரே அமர்வில் தேர்ச்சி பெற்றிருப்பதுடன், க.பொ.த. (உயர்தர) தேர்வில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.**

மாதாந்த ஊதிய அளவுத்திட்டம:- **3,670 - 5,070 + 4,000 (7,670 - 9,070)**
**70 X 20**

அகவை எல்லை:- **19 - 25**

**வேண்டுகைகள் யாவும் உரிய படிவத்தில் நிறைவுசெய்யப்பட்டுக் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் "ஆள்சேர்ப்புக்கான வேண்டுகை" எனக் குறிப்பிட்டு 2003/12/15 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்பாகக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைத்தல் வேண்டும். வேண்டுகைப் படிவங்களையும், மேலதிக விளக்கங்களையும் தமிழீழ வைப்பகத்தின் எல்லாக் கிளைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.**

மேலாளர்,
ஆளுகைப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

குறிப்பு:- ☞ நிறைவுசெய்யப்பட்ட வேண்டுகைகளை பதிவுத்தபாலில் (மேலாளர், ஆளுகைப்பகுதி, நடுவப்பணியகம், தமிழீழ வைப்பகம், யாழ். சாலை, கரடிப்போக்கு, கிளிநொச்சி எனும் முகவரிக்கு) நேரடியாகவோ அல்லது தமிழீழ வைப்பகக் கிளைகளினூடாகவோ அனுப்பிவைக்கலாம். (C/31332) (26-15-13-21)



# 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 25 - 12 - 1900



உதிர்வு 19 - 11 - 1995

அமரர் **இளையதம்பி கனகசபாபதி**

(இளைப்பாறிய மருவலபன் பென்சனியர்)

திதி: 20.11.2003


மனிதருள் மாணிக்கமாய் மாந்தருள் திலகமாய்
புனிதமாய் வாழ்ந்து மறைந்த புண்ணிய சீலரே!
வாழ்க்கையில் எம்மை வழி நடத்திய தெய்வமே!
அன்பாய் பேசி ஆதரவாய் அரவணைத்து உலகில்
பண்போடு எமை வாழவைத்த ஆருயிர்த் தந்தையே!
ஆண்டுகள் எட்டுச் சென்றாலும் ஆறுமோ எமது நெஞ்சம்?
*எங்கள் அன்பு அப்பாவை இன்று நினைவு கூர்ந்து அஞ்சலிக்கின்றோம்.*

க.ஸ்ரீபதி (மகன்),
ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (24797)(34-13-15)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# பாடசாலைக்குச் செல்லும் குழந்தைக்கு ஏற்ற உணவு

புட்டிப்பாலும் கடைகளில் விற்கப்படும் வண்ண வண்ண தின்பண்டங்களும் கொடுத்தால் போதும் குழந்தைகள் கொழுகொழுவென்று வளர்ந்து விடுவார்கள் என்று நம்புகிறார்கள் தாய்மார்கள். கொடுக்கும் அளவைவிட ஊட்டச்சத்து மிகுந்த உணவுதான் குழந்தையின் வளர்ச்சிக்கு மிகவும்



தேவை. உணவின் தரத்தைப் பொறுத்துத்தான் குழந்தைகளின் தசை வளர்ச்சி பெறுகிறது. இளம்பிராயத்தில் தான் மூளை வளர்ச்சியும் துரிதமாக நடைபெறும்.

இன்றைய அவசர வாழ்க்கையில் எல்லாமே இயந்திரமயமாகிவிட்டது. குழந்தைகளுக்காக சிறிதுநேரம் ஒதுக்கி நல்ல உணவை தயாரித்துக் கொடுப்பதில் யாரும் அக்கறை காட்டுவதில்லை. இந்தநிலை நீடித்தால் நோஞ்சான் குழந்தையைத்தான் பெற முடியும். சமச்சீரான உணவை சாப்பிடுபவர்களே சமுதாயத்தில் நன்கு வளர்ச்சியடைந்து சிறப்பான அந்தஸ்தை அடையமுடியும்.

### பாடசாலைப் பருவம்

சத்தான உணவு என்பது குழந்தைப் பருவம் முதல் முதுமை வரை அனைவருக்கும் அவசியமானது. உணவின் அளவைப் பொறுத்தவரை அவரவர் வயதிற்கேற்பவும், அவர்கள் செய்யும் வேலையைப் பொறுத்தும் மாறுபடுகிறது. குழந்தைகளின் உணவு எப்படி இருக்கவேண்டும் என்பது குறித்து அறிவது இந்தக் காலகட்டத்திற்கு பொருத்தமாகவிருக்கும்.

சிறுபருவம் என்பது 6வயது முதல் 12வயதுவரை எனலாம். இந்தப் பருவத்தில் குழந்தைகளின் வளர்ச்சி சற்று குறைவாகவே இருக்கும். வளர்ச்சி படிப்படியாக அமையும். உடல் வளர்ச்சியைப்போல் மன வளர்ச்சியும் முக்கியம். இந்தப் பருவத்தில் மற்றக் குழந்தைகளுடன் பழகுவதால் நல்ல மனவளர்ச்சி இருக்கும். மற்றவர்களுக்கு உதவும் மனப்பான்மையும், விட்டுக் கொடுத்து வாழவும் கற்றுக்கொள்வார்கள். தொலைக்காட்சி விளம்பரங்கள் மூலமாகக்கூட பல விஷயங்களை அறிந்துகொள்வார்கள். இந்த சாப்பாடுதான் வேண்டும். இந்த வகை பிடிக்காது... என்றெல்லாம் தங்கள் விருப்பு வெறுப்புகளை வெளிப்படையாகச் சொல்வார்கள்.

பாடசாலைக்கு அனுப்பும்போது அவசர அவசரமாக கடிகாரத்தைப் பார்த்தே புறப்படுவதால், காலை உணவை சரியாக சாப்பிடுவதில்லை. இதனால் அவர்கள் பாடசாலையில் சரிவர கவனம் செலுத்தமுடியாமல் கற்கும் திறன்குறையும். காலை உணவு சத்தானதாக இருந்தால் குழந்தைகளின் நினைவு பசுமையாக இருப்பதுடன், சோர்வின்றி சுறுசுறுப்பாகவும் இருப்பார்கள்.

காலை உணவு எளிதாக செரிக்கக்கூடியதாகவும் இருக்கவேண்டும். பயறு வகைகள், பருப்பு வகைகளிலும் அதிக அளவில் உயிர்ச்சத்துக்கள் உள்ளன. இவை மூளை வளர்ச்சிக்கு ஆதாரமாக விளங்கும்.

### தின்பண்டங்கள்

குழந்தைகளுக்கு சிறு தின்பண்டங்கள் மீதுதான் அதிக ஆர்வமிருக்கும். சாப்பாட்டைவிட இதில்தான் ஆர்வம் காட்டுவார்கள். கேக், சிப்ஸ், பிஸ்கட், சொக்லேட், ஐஸ்கிறீம் ஆகியவற்றைத் தவிர்க்கவேண்டும் என்பதில்லை. ஆனால், அளவாகக் கொடுக்கவேண்டும். விடுமுறையில் வீட்டில் இருக்கும்போது நிறைய தின்பண்டங்கள் கொடுக்கக்கூடாது. தேவைக்கு அதிகமாக கொடுக்கும்போது கொழுப்பு சேர்ந்து, உடல் குண்டாகவும் மாற வாய்ப்புள்ளது. பாடசாலை செல்லும் குழந்தைகளுக்கு ஒரு நாளைக்கு 1600-1950 கலோரிகள் தேவை. புரதம் 30-40 கிராம் தேவைப்படும்.

வெயில் காலத்தில் தோலின் மூலம் அதிக வியர்வை வெளியேறுவதால் அதனோடு உப்பையும் இழந்துவிட நேரிடும். இதனால், உடல் சோர்வடையும். அதுபோன்ற நிலையில் மோரில் உப்புக்கலந்து கொடுக்கலாம். கோக், பெப்ஸிக்கு பதிலாக பழச்சாறு கொடுப்பது நல்லது. காரம் மற்றும் மசாலா அதிகம் உள்ள உணவுகளைத் தவிர்க்கவேண்டும்.

### பாடசாலைக் குழந்தைகளின் ஒரு நாளைய தேவை

பால்-600 மி.லீ.
தானிய வகைகள்-300கிராம்
பருப்பு வகைகள்- 50கிராம்
பச்சைக் காய்கறிகள்- 100கிராம்
பழங்கள்- 50கிராம்
முட்டை- 1

அசைவ உணவு வகைகள் மீன், இறைச்சி 50முதல் 100கிராம் வரை.

**பாமின் முருகேசன்**
**உணவியல் நிபுணர்**

### உணவு கொடுக்கும் முறை

★ ஒரே மாதிரியான உணவைக் கொடுக்காமல் தினமும் மாற்றி மாற்றி வெவ்வேறு வகையாகக் கொடுக்கலாம்

★ சிறிது சிறிதாக அடிக்கடி கொடுப்பது அவசியம்.

★ அனைத்து உணவு வகைகளிலும் குறிப்பிட்ட அளவில் சேர்த்து சமச்சீரான உணவை உட்கொள்ளச் செய்யவேண்டும்.

★ குழந்தைகளை கண்டிப்பு என்ற பெயரில் அடித்து வதைக்காமல் அன்போடு பேசி, அவர்களோடு சேர்ந்தே சாப்பிடலாம்.

★ அவர்களது மனநிலையையும் கவனத்தில் கொள்ளவேண்டும். அழுது கொண்டிருக்கும் போது சாப்பிடு... சாப்பிடு என்று திணிக்கக்கூடாது. ◆

# கிளிநொச்சி நகரப்பகுதியில் சுகாதார நடவடிக்கைகள்

## தொற்று நோய்களைத் தடுக்க முன்னேற்பாடு

கிளிநொச்சி,நவ.20

கிளிநொச்சி நகரப்பகுதியில் சூழலை மாசுபடுத்தக்கூடியதும் நோய்களைப் பரப்பக்கூடியதுமான பொருள்களை இனங்கண்டு அழிப்பதற்கான சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர், பிரதேச செயலர் பிரிவினர் மற்றும் கிளிநொச்சி மாவட்ட தமிழீழ சுகாதார சேவையினர் ஆகியோர் இணைந்து இந்த நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றனர்.

நகரப் பகுதியில் இருக்கும் உணவகங்கள், சந்தை, வர்த்தக நிலையங்கள் மற்றும் சுகாதாரச் சீர்கேடான இடங்கள் இவர்களால் ஆய்வு செய்யப்பட்டன.

சுகாதாரச் சீர்கேடான முறையில் இருந்த உணவகங்கள், வர்த்தக நிலையங்கள் மற்றும் நிறுவனங்கள் என்பவற்றில் பணியாற்றுபவர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

மழை காலத்தில் நீர்தேங்கி நின்று நுளம்புகள் பெருக வாய்ப்பாக இருக்கும் வெற்று தகரப்பாக்கள், ரயர்கள், பொலித்தீன் போன்ற பொருள்களை சேகரித்து அவற்றை அழிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

மழைகாலத்தில் மலேரியா, டெங்கு போன்ற தொற்று நோய்களில் இருந்து பாதுகாக்க ஒவ்வொருவரும் தம்மைச் சூழ உள்ள இடங்களைச சுகாதாரமாக வைத்துக்கொள்ளுமாறு தமிழீழ சுகாதார சேவையினர் கேட்டுள்ளனர். (ம-ரி)

# புலமைப் பரிசில் பரீட்சைக்கு 9,500 மாணவர்கள் தோற்றுவர்

அடுத்தமாதம் 7ஆம் திகதி நடைபெறவுள்ள ஐந்தாம்தர புலமைப்பரிசில் பரீட்சைக்கு யாழ். மாவட்டத்தில் இருந்து 9ஆயிரத்து 500 மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

இதற்கென 80 பரீட்சை நிலையங்கள் யாழ். மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ளன. அத்துடன், 17 பரீட்சை இணைப்பு நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன. இப்பரீட்சைக்கு நாடு முழுவதும் இருந்து 3லட்சத்து 10ஆயிரத்து 942 மாணவர்கள் தோற்றவுள்ளனர். இவர்களில் 2 லட்சத்து 42ஆயிரத்து 493 மாணவர்கள் சிங்களமொழி மூலமும், 68ஆயிரத்து 449 மாணவர்கள் தமிழ்மொழி மூலமும் தோற்றவுள்ளனர். நாடு முழுவதும் மொத்தம் 2ஆயிரத்து 568 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

கடந்த பல ஆண்டுகளாக ஓகஸ்ட் மாதத்தில் நடைபெற்றுவந்த இப்பரீட்சை, இந்த ஆண்டு முதன்முறையாக டிசெம்பர் மாதத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த மே மாதம் தென்பகுதியில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தங்களை அடுத்து இப்பரீட்சை பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-10)

# பாடசாலை மாணவர்களின் தே.அ. அட்டைகள் வந்தன

யாழ்ப்பாணம்,நவ.20

இவ்வாண்டு ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள குடாநாட்டுப் பாடசாலை மாணவர்களின் தேசிய அடையாள அட்டைகள் யாழ். செயலகத்தில் உள்ள ஆள் பதிவுத் திணைக்களத்திற்குக கிடைக்கப்பெற்றுள்ளன.

குடாநாட்டில் உள்ள 72 பாடசாலைகளைச் சேர்ந்த 500 இற்கும் மேற்பட்ட மாணவர்களின் தேசிய அடையாள அட்டைகள் இதில் அடங்கியுள்ளன.

பாடசாலை அதிபர்கள் உடனடியாக யாழ். செயலகத்தில் உள்ள ஆள்பதிவுத் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அடையாள அட்டைகளை பாடசாலை அதிபர்கள் அல்லது அதிபரின் சிபாரிசுடன் பாடசாலை ஆசிரியர்கள் சமுகமளித்து பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-8)

# யானைக்கால் நோயிலிருந்து தப்புவதற்கு நுளம்புகளை ஒழிப்பதே பிரதான வழியாகும்

மழைகாலம் ஆரம்பித்துவிட்டால் நோய்களும் மக்களை வாட்டிவதைக்க ஆரம்பித்துவிடுகின்றன. இவ்வாறு பரவும் நோய்களால் பீடிக்கப்படுவது தவிர்க்கமுடியாத ஒன்றுதான். ஆயினும், சில நோய்கள் தம்மைத் தாக்காது தடுத்துக்கொள்வது நம்கையில் தான் உள்ளது.

அதிலும் நுளம்பினால் பரவும் நோய்களைத் தடுப்பதற்கு, நுளம்புகளை ஒழிப்பதில் நமது முயற்சியே பிரதான இடம்வகிக்கிறது.

ஏனெனில், நமது அஜாக்கிரதையால் நுளம்புபெருகும் வாய்ப்புகளை நாமே ஏற்படுத்துகின்றோம். இதனால், மலேரியா, டெங்கு போன்ற நோய்கள, மட்டுமன்றி யானைக்கால் போன்ற வியாதிகள் பரவுவதற்கு நாமே காரணமாகி விடுகின்றோம். இவற்றில் யானைக்கால் நோயானது ஆரம்பக் கட்டத்தில் மட்டுமே குணப்படுத்தக் கூடியதாகும்.

யானைக்கால் அல்லது பிலறுப்சில் என்ற நோய்க்கான காரணி ஒரு புழுவாகும். இந்நோய் ஏற்படுவதற்குக் காரணமான மூன்று இனப் புழுக்கள் அண்மையில் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றில் "வுச்சேரியா" வர்க்கத்தைச் சேர்ந்த விசேடபுழு இனமொன்று இலங்கையில் கண்டறியப்பட்டுள்ளது.

யானைக்கால் நோயும் நுளம்பின் மூலமாகவே பரவுகிறது. நுளம்புகளால் ஏற்படும் டெங்கு, மலேரியா போன்ற நோய்களைப் போன்றே ஒவ்வொரு இன யானைக்கால் நோய்க்கான புழுக்களுக்கென்றே மிக விசேட உருவமைப்புக்கொண்ட வெவ்வேறு இன நுளம்புகள் உள்ளன.

ஒரு நோய்க்கிருமிக்கென முக்கியமாகக் கருதப்படும் நுளம்பு இனம், அநேகமாக பிறிதொரு நோயூட்டிக்கு




உகந்ததாக இருப்பதில்லை. "வுச்சேரியா" இன யானைக்கால் நோயைக் "கியுலெக்ஸ்" வர்க்கத்தைச் சேர்ந்த நுளம்பினங்களே பரப்புகின்றன.

### நோயூட்டிகளின் வாழ்க்கை வட்டம்

யானைக்கால் நோயை இனங்காண்பதற்கும் அந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கும் யானைக்கால் நோயூட்டிகளின் நீண்ட வாழ்க்கை வட்டத்தைப் பற்றி மேற்கொண்டுள்ள அவதானிப்புகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

இலங்கையில் உள்ள "வுச்சேரியா" நோயூட்டியின் வாழ்க்கை வட்டத்தில் நிகழும் அதன் தொடர்ச்சியான பாதிப்புக்களைக் கண்டறிவதற்கான முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்படும் மருத்துவப் பரிசோதனைகளில் முக்கிய இடம்பெறுகின்றன. யானைக்கால் நோய்த் தாக்கத்தின்போது அதற்குக் காரணமான புழுவின் பல்வேறு வாழ்நிலைகள் ஆய்வுகளின்போது கண்டறியப்பட்டுள்ளன.

### பாரிய பாதிப்பு

வளர்ச்சியடைந்த யானைக்கால் நோய்ப் புழுவொன்று மிக மெலிந்த உருவத்துடன் இருக்கும். மனிதனின் மூடப்பட்டுள்ள தசைப்படலங்களில் சுமார் 17 ஆண்டுகளில் வாழக்கூடிய வளர்ச்சியடைந்த யானைக்கால் நோய்க்கான புழுவினால் ஏற்படும் பாரியபாதிப்பு தசைப்படலங்கள் தடைப்படுதலாகும். புழுவை அழிப்பதற்காக எமது உடலில் தொடர்ச்சியாக உருவாக்கப்படும் ஜீவ அணுக்களின் உருவாக்கத்திற்காக சுரக்கப்படும் இரசாயனத் திரவங்களின் காரணமாக புழுவைச் சுற்றியுள்ள பகுதியில் உருவாகும் தடை (BLOK) அல்லது செறிவு காரணமாக காலப்போக்கில் அப்பகுதி வீக்கமடைந்து யானைக்கால் நோய் உருவாவதாக மருத்துவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர். நுளம்பின் மூலம் மனித உடலுக்குள் சென்று பாதிப்பை ஏற்படுத்தும் சிறிய யானைக்கால் நோயூட்டி சுமார் 9 மாதங்களில் முழு வளர்ச்சியடைந்த புழுவாக மாறுகின்றது. வளர்ச்சியடைந்த இப்புழுவுக்கு எதிராக எவ்வித மருந்தையும் பயன்படுத்தியும் பயனில்லை. ஆகையால், பாதிக்கப்பட்ட ஒருவரின் உடலில் புழு வளர்ச்சியடைவதற்கு முன்னர், பாதிப்பை இணங்கண்டு கொள்வதன் மூலம், இதைக் கட்டுப்படுத்த முடியும் ஆனால், "யானைக்கால்" நோய் முழுமையாக விருத்தியடைந்த பின்னர், குணப்படுத்துவதற்கு சாத்தியமான மருத்துவமுறையொன்று மருத்துவ விஞ்ஞானத்தில் இதுவரையில் அறியப்படவில்லை.

### ஆரம்பத்தில் குணப்படுத்தலாம்

யானைக்கால் நோயூட்டிகளை அவற்றின் ஆரம்பப்பருவத்தில் மாத்திரமே ஒழிக்கமுடியும். இதனால் மருத்துவ ஆய்வுகளும் அவற்றிற்கான மருந்துகளை வழங்கும் முறைகளும சிறிய நோயூட்டிகளை இலக்கு வைத்தே மேற்கொள்ளப்படுகின்றன.

யானைக்கால் நோயாளியின் உடலிலுள்ள வளர்ச்சியடைந்த நோயூட்டிப் புழுக்களால் உருவாக்கப்படும் சிறிய புழுக்கள், நுளம்புகளின் உடலினுள் புகுந்துவிடுகின்றன. விசேட இனமான "கியுலெக்ஸ்" நுளம்புகளின் உடலினுள் மேன்மேலும் விருத்தியடைந்து மனித உடலினுள் விருத்தியடைவதற்கான உபவுறுப்புக்களை அவை உருவாக்கிக்கொள்கின்றன. நுளம்பின் உடலினுள் முறையாக விருத்தியடைந்த சிறுபுழுக்கள் மாத்திரம், மனித உடலினுள் முழு வளர்ச்சியடைந்த நோயூட்டிப் புழுக்களாகும் வாய்ப்பைப் பெறுகின்றன. நுளம்பிலிருந்து மனிதனுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதற்கு முன்னர் பன்றிகள் போன்ற தசைப்பிடிப்பான மிருகங்

**-சரா-**

களின் உடலினுள் தமது இனத்தைப் பெருக்கிக்கொள்ளும் திறன் இச்சிறு யானைக்கால் நோயூட்டிக்கு உள்ளது.

எவ்வாறாயினும், இத்தகைய சகல செயற்பாடுகளுக்கும் நோய்காவிகளாக நுளம்புகளே உலாவித் திரிவதால், நுளம்புகளை ஒழித்தலும் மற்றும் நுளம்புகளிருந்து பாதுகாத்துக்கொள்வதும், யானைக்கால் நோயிலிருந்து தப்புவதற்கான முக்கிய வழியாகும். ✦

# 3ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்

17

09


1921

விண்ணில்

22

11

2000



## என்றும் நீங்காத நினைவில்.....

# அமரர் அருணாசலம் ஆறுமுகம்

(சமாதான நீதிவான், முன்னாள் உப அதிபர், சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை)

பாரினில் நாம் சிறக்க
நற்பணிகள் பல செய்தாய்
சீருடன் வாழ நற்சிந்தனைகள் தந்தாய்
ஊர் போற்ற வாழ்ந்தாய்
நாம் மகிழ நாநிலம் போற்ற
நமனை வெல்ல முடியாத தேனோ?
பாத கமலத்தில் அர்ப்பணித்தோம்.

"ஜெயபதி"
தாமோதரம்பிள்ளை வீதி,
சாவகச்சேரி.

என்றும் நீங்காத
நினைவில்:
குடும்பத்தினர்.

யாழ்ப்பாணம்

# உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பினையடுத்து பல இராணுவ அதிகாரிகள் ஓய்வுபெறவுள்ளனர்

**இராணுவ நிர்வாக விதிகளில் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் மாற்றங்களை மேற்கொண்டதை அடுத்து உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினால் பல உயர் இராணுவ அதிகாரிகள் ஓய்வுபெற வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளனர். 'லக்பிம' பத்திரிகையில் வெளியான விவரங்களின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

சில நாள்களாக, இராணுவத்தின் மத்தியில் உருவாகியுள்ள பிரச்சினை யுத்தம் அல்ல. இராணுவ உயரதிகாரிகளுக்குத் தமது பதவிகளைத் தொடர்ந்தும் தக்கவைத்துக்கொள்ள இயலுமா? அல்லாவிடில், வீட்டுக்குச் செல்லும் நிலை ஏற்படுமா என்பதே அந்தப் பிரச்சினையாகும். அதற்குக் காரணம், அண்மையில் உயர்நீதிமன்றினால் வழங்கப்பட்டுள்ள இராணுவம் சம்பந்தமான தீர்ப்பேயாகும். அத்தீர்ப்பில், இராணுவ சட்டவிதிகளை மீளாய்வு செய்வதற்கான அதிகாரம் பாதுகாப்பு அமைச்சருக்கு இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, பாதுகாப்பு அமைச்சர் மூலம் சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ள இராணுவ உயர் அதிகாரிகளின் நிலை என்ன? இன்று, இராணுவத்திலுள்ள சகலரும் இதைப்பற்றியே பேசுகின்றனர்.

இராணுவச் சட்டங்களை மீளாய்வு செய்வதற்கான அதிகாரம், பாதுகாப்பு அமைச்சருக்கு இல்லை என்பதைச் சுட்டிக் காட்டி அண்மையில் உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு இராணுவத்தில் உயர் பதவி வகிப்போர் மத்தியில் மீண்டும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அத்தீர்ப்பினை அடுத்து இராணுவத்தில் உயர்நிலையிலுள்ள மேஜர் ஜெனரல்களான ஏழு பேருக்கும் தமது பதவிகளில் தொடரமுடியாத நிலை உருவாகியுள்ளது.

இதற்கமைய இராணுவத்தின் பிரதம அதிகாரி மேஜர் ஜெனரல் லொஹான் குணவர்த்தன, கூட்டுப் படையணி பிரதித்தளபதி மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட, பயிற்சிப் படையணியின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சூள சேனவிரத்ன, யாழ். மாவட்ட பாதுகாப்புப்படை கட்டளை அதிகாரியான மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, வன்னிப் பிராந்திய பாதுகாப்புப்படையின் கட்டளை அதிகாரியான மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால, கிழக்குப் பிராந்திய பாதுகாப்புப்படை கட்டளை அதிகாரியான மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி, பட்டலந்த இராணுவப் பயிற்சிக் கல்லூரியின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சிசில் விஜேசூரிய ஆகிய மேஜர் ஜெனரல்கள் இதனால் பாதிக்கப்படவுள்ளனர்.

இராணுவச் சட்டத்திற்கமைய, மேஜர் ஜெனரல்களின் பதவி நிரந்தரமாக்கப்பட்டதன் பின்னர், அவர்கள் கூடிய பட்சமாக மூன்று ஆண்டுகளே அப்பதவிகளை வகிக்க முடியும். அதன் பின்னர், லெப்டினன்ட் ஜெனரலாக (இராணுவத்தளபதி) பதவி உயர்வு பெறமுடியும்.

அவ்வாறு சேவை நீடிப்பொன்று பெறாதவிடத்து அவர் சேவையிலிருந்து ஓய்வுபெறவேண்டும்.

இந்நிலையை மாற்றி, தனக்கு இசைவான அதிகாரிகளைத் தொடர்ந்தும் சேவையில் வைத்திருக்கும் நோக்கில், முன்னாள் பாதுகாப்பு அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட திருத்தம் காரணமாக குறிப்பிட்ட ஏழு மேஜர் ஜெனரல்களுக்கும், தமது மூன்றாண்டு கால சேவை முடிவுற்றுள்ளபோதும், 55வயது வரையிலும் சேவையில் நீடிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது.

## ஜனாதிபதிக்கு நிர்ப்பந்தம்

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர், நடைமுறையில் இருக்கும் சட்ட விதிகள் தொடர்பாக மேற்கொண்ட திருத்தமானது, அரசமைப்புக்கு முரணாக அமைந்துள்ளதோடு அது வலுவற்றதுமாகும். சட்டத்திற்கு அமைய, அந்தத் திருத்தங்களுக்கு எதுவித வலுவுமில்லை என உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது. இந்நிலைப்பாட்டிற்கமைய குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளைத் தொடர்ந்தும் பதவி வகிக்க அனுமதிப்பதா? அல்லது ஓய்வுபெறச் செய்வதா? என்ற பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய நிர்ப்பந்தம் படைகளின் தலைவி என்ற வகையில் ஜனாதிபதிக்கும் ஏற்பட்டுள்ளது.

இந்த அதிகாரிகளுக்குத் தொடர்ந்தும் பணியாற்ற வாய்ப்பு வழங்கப்படாவிடின் ஒரே பதவியில் மூன்றாண்டு காலம் சேவையாற்றிய பின்னரும், தொடர்ந்து சேவையாற்றியுள்ள நாள்களுக்கு வழங்கப்பட்டுள்ள சம்பளத் தொகையையும் மீளச் செலுத்த வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்படலாம்.

இராணுவத்தின் பிரதம அதிகாரியான மேஜர் ஜெனரல் லொஹான் குணவர்த்தன, இம்மாதம் 22ஆம் திகதியன்று தனது 55வயதைப் பூர்த்தி செய்வதன் மூலம் சேவையிலிருந்து ஓய்வுபெறவுள்ளதால், அவருக்கு அது பெரும் பாதிப்பை ஏற்படுத்தமாட்டாது. ஆயினும் மேஜர் ஜெனரல் பதவிக் காலமான மூன்றாண்டு காலம் முடிவுற்ற பின்னர், அவர் பெற்றுக்கொண்டுள்ள சம்பளத்தைக் கையளிக்க வேண்டியநிலை அவருக்கு ஏற்பட்டுள்ளதோடு, மேஜர் ஜெனரலாக 3ஆண்டுகள் பூர்த்தி செய்த பின்னர் அவரால், கைச்சாத்திடப்பட்ட இராணுவ சம்பந்தமான சகல ஒப்பந்தங்களும் செல்லுபடியற்றதாக்கப்படலாம்.

மேஜர் ஜெனரல் லொஹான் குணவர்த்தனவை ஓய்வு பெறச் செய்யாது, இராணுவத் தளபதியாக நியமனம் செய்வதற்கு அரசு முயன்ற போதிலும், ஜனாதிபதியினால் இன்றைய இராணுவத் தளபதியான லயனல் பலகல்லவுக்கு மேலும் ஆறு மாத சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளமையினால், அரசின் எண்ணம் கைகூடவில்லை. ஏற்கனவே லொஹான் குணவர்த்தனவை ஓய்வு பெறச் செய்வதற்கான கடிதங்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இராணுவத் தலைமைப் பதவிக்கான வாய்ப்பிருந்தும், அது கிட்டாது ஓய்வுபெறும் நிலை, லொஹான் குணவர்த்தனவுக்கு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு இராணுவத்தளபதிப் பதவி கைக்கெட்டியும் வாய்க்கு எட்டாது, ஓய்வு பெற்ற மூன்றாவது அதிகாரி இவராவார்.

இவ்வாறு ஓய்வுபெற்ற முதலாவது அதிகாரி மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா ஆவார். 55வயது பூர்த்தியாகியுள்ள நிலையிலும், ஜனாதிபதியினால், லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்லவுக்கு, சேவை நீடிப்பு வழங்கப்பட்டு இராணுவத் தளபதி பதவியைத தொடர வாய்ப்பு வழங்கப்பட்டதால் இராணுவத் தளபதியாகும் வாய்ப்பு கைக்கு எட்டாது ஓய்வு பெறும் நிலை ஜானக பெரேராவுக்கு ஏற்பட்டது. இரண்டாவதாக, மேஜர் ஜெனரல் நீல் டயஸ்க்கும் வாய்ப்பிருந்தும், இராணுவத் தளபதிப் பதவி கிட்டாது ஓய்வு பெற நேர்ந்தது.

## அடுத்த இராணுவத் தளபதி யார்?

மேஜர் ஜெனரல் லொஹான் குணவர்த்தன ஓய்வுபெற்ற பின்னர், ஏனைய அதிகாரிகளுக்கு இராணுவத் தளபதியாவதற்கான வாய்ப்புக்கள் அருகிப் போகலாம். ஆயினும், அடுத்த இராணுவத் தளபதிக்கான போட்டியிடக் கூடியவர்கள் மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொடவும், மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவுமே யாவர். இவர்களுள் மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொடவுக்கு இராணுவத் தளபதிக்கான நியமனத்தை வழங்க, முன்னாள் பாதுகாப்புச் செயலாளரான ஒஸ்டின் பெர்னாண்டோ முயற்சிகள் மேற்கொண்டு வந்துள்ளபோதும், தற்போது உருவாகியுள்ள நிலைமை காரணமாக அந்த எதிர்பார்ப்பு சற்று மந்தமடைந்துள்ளது.

சிரேஷ்ட நிலையிலுள்ள சாந்த கொட்டேகொடவுக்கு இராணுவத் தளபதியாவதற்கான அதிர்ஷ்டம் அண்மித்துவருகிறது.

ஆயினும், அடுத்த இராணுவத் தளபதியை நியமனம் செய்வதில் பல சிக்கல்களை ஜனாதிபதி எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இராணுவத் தளபதியான லயனல் பலகல்லவுக்கு, அண்மையில் வழங்கப்பட்ட சேவை நீடிப்புடன் அவர் தமது பதவியை எதிர்வரும் ஜூன் மாதம் வரையிலும் தொடர முடியும்.

**கே.எஸ்.எம்.**

அடுத்துவரும் இராணுவத் தளபதி பதவிக்கான நியமனத்தின் போது, தகுதியுள்ளவருக்கே நிச்சயமாக வாய்ப்பளிக்கப்படல் வேண்டும். தேவையற்ற அரசியல் நிர்ப்பந்தங்களினால், தொடர்ச்சியாகவே மேற்கொள்ளப்பட்டுள்ள சேவை நீடிப்புகள் மற்றும் தமக்கு இசைவான நபர்களை சேவையில் வைத்திருப்பதற்கும், தாம் விரும்பாதவர்களை ஓய்வுபெறச் செய்வதற்கும் இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளினால், திறமைமிக்க மற்றும் நேர்மையுள்ள பெரும்பாலான அதிகாரிகள் வீட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். பல வித ஊழல்கள் மற்றும் அக்கிரமச் செயல்களில் சம்பந்தப்பட்டு குற்றம் சாட்டப்பட்டுள்ள பெரும்பாலான அதிகாரிகள், இன்று வரையிலும், தகுதியுள்ளவர்களாகக் கருதப்பட்டு உயர் பதவிகளை வகிக்கின்றனர். அடுத்து வரும் இராணுவத் தளபதியாக அவர்களுள் ஒருவர் நியமனம் செய்யப்படுவதற்கான நிலை இன்று உருவாகியுள்ளது.

## மோசடி புரிந்தோர் உயர் பதவிகளில்...

வெளிநாடுகளில் பயிற்சிகளை மேற்கொண்டபோது சீர்கேடாக நடந்து கொண்டுள்ளது சம்பந்தமாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளோரும், சட்ட விரோதமான முறையில் வீர விக்கிரம, விபூஷண பதக்கங்களைப் பெற்றுள்ளோரும், சிப்பாய்களுக்கான உணவுக் கொடுப்பனவுகளில் மோசடி செய்தோரும் இராணுவத்தில் சிரேஷ்ட பதவிகளில் உள்ளனர். அவர்களைத் தொடர்ந்தும் பதவி வகிக்கச் செய்வதா? அல்லது அவர்களின் கீழ் சேவையாற்றும் அதிகாரிகளுக்குச் சந்தர்ப்பமளிப்பதா? என்பதைத் தெரிவு செய்வதற்கான சூழ்நிலை தற்போது உருவாகியுள்ளது.

அடுத்து வரவுள்ள இராணுவத் தளபதிக்கான நியமனத்தின் போது, தமது பணிகளில் திறமைகளைக் காட்டியுள்ள திறமைசாலிகளான அதிகாரிகளை நியமனம் செய்வதில் எதிர்ப்படும் சவால்களைச் சமாளிப்பது ஜனாதிபதியின் கைகளிலேயே தங்கியுள்ளது. அவ்வாறு செயற்படுத்தப்படாவிடில் பலவிதமான ஊழல்கள் மற்றும் அக்கிரமங்களுக்காக குற்றம் சுமத்தப்பட்டுள்ள மேஜர் ஜெனரல்கள் பொறுப்பான பதவிகளில் நிலைத்திருப்பது, அவர்களுக்கு அடுத்துள்ள அதிகாரிகளுக்கும் தவறிழைப்பதற்கான உதாரணங்களாக அமையலாம். சிரேஷ்ட நிலையிலுள்ள மேஜர் ஜெனரல்களான ஏழு பேருக்கும் ஏற்பட்டுள்ள இக்கட்டான பிரச்சினை உருவாகியுள்ள நிலையைக் கருத்தில்கொண்டு, சட்ட விதிகளுக்கு ஏற்ப அவர்கள் தமது பதவிகளில் நிலைப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு, இராணுவத்தளபதி புதிய பாதுகாப்புச் செயலரான சிறில் ஹேரத்துக்கு ஏற்கனவே கடிதமொன்றும் அனுப்பிவைத்துள்ளார். மேஜர் ஜெனரல்களான இவர்களுக்கு, அவர்களது கடந்த கால செயற்பாடுகளைக் கவனத்தில் கொண்டு சேவை நீடிப்பொன்று வழங்குமாறு இராணுவத்தளபதி கோரியுள்ளார்.

மேஜர் ஜெனரல் குணவர்த்தன 1997 டிசெம்பர் 04ஆம் திகதி மேஜர் ஜெனரல் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டதோடு, அவருக்கு 2000 டிசெம்பர் 04ஆம் திகதியோடு அப்பதவியின் காலக்கெடு முடிவடைந்துள்ளது. அதைத் தொடர்ந்து அவருக்கு மேலும் சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேஜர் ஜெனரல் கொட்டேகொட, 1999 பெப்ரவரி 24இல் தனது பதவியில் நிரந்தரமாக்கப்படடதோடு, 2002 பெப்ரவரி 24இல் அவரது பதவிக்காலம் நிறைவுற்றுள்ளது. மேஜர் ஜெனரல் சூள சேனவிரத்னவுக்கு 1999 பெப்ரவரி 24ஆம் திகதியன்று அவரது பதவி நிரந்தரமாக்கப்பட்டதோடு, அவருக்கு 2002 பெப்ரவரி 24ஆம் திகதியுடன் பதவிக்காலம் நிறைவுபெறும்.

மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா 1999 ஏப்ரல் 02இல் தமது பதவியில் நிரந்தரமாகியதோடு, 2002ஏப்ரல் 02இல அவரது பதவிக்காலம் நிறைவுபெற்றது.

மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால 2000 மார்ச் 01ஆம் திகதி தனது பதவியில் நிரந்தரமாகியுள்ளதோடு அவருக்கு 2003 மார்ச் முதலாம் திகதியுடன் பதவிக்காலம் முடிவுற்றது.

மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி 2000 மார்ச் 24 ஆம் திகதி தனது பதவியில் நிரந்தரமாக்கப்பட்டதோடு 2003 மார்ச் 24ஆம் திகதி அன்று அவரது பதவிக்காலம் முடிவுற்றுள்ளது.

மேஜர் சிசிர விஜயசூரிய 2000 ஜூன் 15 இல் பதவியில் நிரந்தரமாகியதோடு 2003 ஜூன் 15 இல் அவரது பதவிக்காலம் முடிவுற்றுள்ளது.

இதற்கமைய, இவ்அதிகாரிகள் தமது பதவிகளில் நிலைத்திருக்கக்கூடிய அதிஉச்ச காலவரையறையை நிறைவு செய்துள்ளதோடு, 55வயது வரையிலும் சேவையாற்றுவதற்கு பாதுகாப்பு அமைச்சரால் வழங்கப்பட்டுள்ள காலக்கெடுவுக்கு அமைய, அவர்கள் இன்று வரையிலும் தமது பதவிகளை வகித்துள்ளனர். இன்றைய நிலையில், வழங்கப்பட்டுள்ள உயர்நீதிமன்ற தீர்ப்பினால், இராணுவ மேஜர்கள் எழுகின்ற பிரச்சினைகளுக்கு மத்தியில் உள்ளனர்.

இனிவரும் காலங்களிலும் இதற்கான தீர்வொன்று எட்டப்படாதவிடத்து, விமானப் படையிலும், கடற்படையிலுமுள்ள சிரேஷ்ட அதிகாரிகளுக்கும் அவர்கள் பதவி வகிக்கக்கூடிய அதிகபட்ச காலவரையறைகள் முடிவுற்ற பின்னர், ஓய்வு பெறவேண்டிய நிலை ஏற்படும்.


லயனல் பலகல்ல


சரத் பொன்சேகா


சாந்த கொட்டேகொட


சுசில் சந்திரபால


ஏ.சி.குணவர்த்தன

## குடும்பஸ்தரை காணவில்லையென முறைப்பாடு

யாழ்ப்பாணம்,நவ.20

கொழும்புக்குச் சென்ற குடும்பஸ்தர் ஒருவரைக் காணவில்லையென மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொக்குவில், தலையாழியைச் சேர்ந்த பொன்னுத்துரை சரவணபவன (வயது 49) என்பவரையே காணவில்லையென அவரது மனைவி முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த முதலாம் திகதி கொழும்பில் உள்ள உறவினர் வீட்டுக்குச் சென்ற இவர், 14 ஆம் திகதி காலையில் வெளியேபோய் வருவதாகக் கூறிச் சென்றார் எனவும் பின்னர் இவர் வீடு திரும்பவில்லையெனவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சட்டவிரோதமாக மணல் ஏற்றிவந்த 3 லொறி உரிமையாளர்களுக்கு அபராதம்

வலி.வடக்கு,நவ.20

அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிவந்த மூன்று லொறிகளின் உரிமையாளர்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதம் 9 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் ஏற்றிவரப்பட்ட மணலைப் பறிமுதல் செய்யும்படியும் உத்தரவிட்டார்.

நேற்றுமுன்தினம் அச்சுவேலிப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் மாவட்ட நீதிமன்றின் முன் ஆஜர் செய்யப்பட்ட சுன்னாகம், மயிலங்காட்டைச் சேர்ந்த பசுபதி நடேஸ்வரன், ஊரெழு, சுன்னாகத்தைச் சேர்ந்த செல்லையா இராசரெத்தினம் மற்றும் ஊரெழு, சுன்னாகத்தைச் சேர்ந்த இராசையா ரவீந்திரன் ஆகிய லொறி உரிமையாளர்களுக்கே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பறிமுதல் செய்யப்பட்ட மண்ணில், வசாவிளான் குட்டியபுலம் பாடசாலைத் தேவைக்கு ஒரு லொறி மண்ணை வழங்கும்படியும் கூறப்பட்டுள்ளது.

(ப-86)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### புறொயிலர் தேவை

தரமான புறொயிலர்கள், கல் பேட்ஸ் கோழிகள் தொகையாகத் தேவைப்படுகின்றன. விற்க விரும்பு வோர் கீழ்வரும் தொலைபேசி இலக்கத் துடன் தொடர்புகொள்ளவும். S.குமரன், T.P. 077-6035415. (24879)

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima, Broiler குஞ்சுகள் ரூபா 50/=, அதிவிசேட Prima பேட் டுக்குஞ்சுகள் ரூபா 62/= என்பன 24.11.2003 பிற்பகல் விநியோகிக்கப் படும். முன்கூட்டியே பதிவு செய்யவும். பருத்தித்துறைக் கிளையிலும் பெற் றுக்கொள்ளலாம். தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகே சர் ஒழுங்கை, முத்திரைச சந்தை யடி, நல்லூர். (24876)

தரமான பேட்டுக்குஞ்சுகளும், புறொயிலர் குஞ்சுகளும் இன்று (20.11.2003) விநியோகிக்கப்படும். பதிவுசெய்தவர்களும் தேவைப்படு வோரும் தொடர்பு: மதுரா, 221, கஸ் தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.(24862)

### மருந்துகள் வந்தன

தென்மராட்சி,நவ.20

சாவகச்சேரி மாவட்ட வைத்திய சாலைக்கான நான்காம் காலாண்டிற் குரிய மருந்துகள் சுகாதார திணைக் களத்தினால் நேற்று முன்தினம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ம-117)

### பதிவுசெய்யக் கோரிக்கை

கடந்த காலங்களில் உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா கற்கை நெறியினைப் பூர்த்திசெய்த மாண வர்கள் தமது பெயர் விபரத்தை மேற படி நிறுவனத்தில் பதிவு செய்யும்படி கோரப்பட்டுள்ளது.

இன்று வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 30ஆம் திகதிக்குள்ளாக யாழ்ப்பாண உயர் தொழில்நுட்ப நிறு வனத்தில் பதிவுசெய்துகொள்ளு மாறு மேற்குறிப்பிட்ட மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ஓ)

### விவசாயிகளுக்கு ரூ.20 ஆயிரம் உதவி

வலி.வடக்கு,நவ.20

சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபையினால் நல்லூர் பிரதேச செய லாளர் பிரிவுக்கு உட்பட்ட ஐந்து விவ சாயிகளுக்கு தலா 20 ஆயிரம் ரூபா வீதம் வழங்க ஒருலட்சம் ரூபா ஒதுக் கப்பட்டுள்ளது.

இதில் கடனாக வழங்கப்படும் 10 ஆயிரம் ரூபாவை விவசாயிகள் மாதாந்த அடிப்படையில் திருப்பிச் செலுத்தி முடிக்கவேண்டும் எனவும்-

மிகுதிப் பத்தாயிரம் ரூபா மானி யமாக வழங்கப்படுவதாகவும் -

தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட பயனாளிகளை தெரிவுசெய வதில் சமுர்த்தி முகாமையாளர்களும சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோ கத்தர்களும் நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளனர். (ஓ-86)

### ஜி.சீ.ஈ. சாதாரணதர மாணவர்களுக்கு!

கைதடி,நவ.20

கைதடி மத்தி வளர்மதி கல்விக் கழகம் இவ்வருடம் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றும் மாணவா களின் நன்மைகருதி நடத்திவரும் பயிற்சிக்கருத்தரங்கில் கணிதம், விஞ் ஞானம் ஆகிய பாடங்களுக்கான இறு திப் பயிற்சிக் கருத்தரங்கு எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கைதடி விக்கினேஸ்வரா வித் தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மாணவர்களை இதில் கலந்து கொண்டு பயன்பெறுமாறும் -

இப்பயிற்சிநெறியில் அச்சடிக்கப் பட்ட இலசை பாடக்குறிப்புக்கள் வழங் கப்படவுள்ளதாகவும் -

வளர்மதி கல்விக் கழகச் செயலா ளர் த.பாஸ்கரன் கேட்டுள்ளார்.(ஓ-75)


சோலருடனும், சோலர் இல்லாமலும் இரண்டு மோட்டறோலா தொலைபேசிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
தம்பி,
மோட்டார் சைக்கிள் திருத்துமிடம்,
முடவேம்படி, K.K.S. வீதி,
சுன்னாகம் வடக்கு.
T.P.- 0777/281676
(24857)


## ஓராண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 27 - 08 - 1926 | | 30 - 11 - 2002 |



### அமரர் முத்தையா கனகரட்ணம்

கனகரத்தினம் என்கின்ற கனவான் கண்களை மூடி
காலமும் ஒன்றாயிற்றோ? கண்ணீர் விடுகின்றோம்
துயர் தாழாது விழி மீதும் துளிநீரை விரல் கொண்டு
துடைத்திட நீ இல்லையே எம்முன் இன்று?

9, காரைக்காட்டு ஒழுங்கை,
கேசாவில் பிள்ளையார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

-அன்பு மனைவி.

(24878)(35-15-12-21)

## ஈரவிழிகளுடன் முதலாம் வருட அஞ்சலி

தோற்றம்
22-11-1940



மறைவு
20-11-2002

அமரர்

### தேவசகாயம்பிள்ளை பிரான்சிஸ் தேவராஜா

*உள்ளம் துடிக்குதப்பா*
*உம்மோடு பேசிப் பழக*
*ஆனாலும் முடியவில்லையே*
*ஓராண்டு சென்று விட்டதோ?*
*என்றவுடன் எம் நெஞ்சம் துடிக்குது*
*உம் ஓரன்புப் பார்வைக்காக*
*பாவி நாம் காத்திருக்கின்றோம்.*
*எம் தனிமையுணர்வு என்று விலகுமோ?*
*நாமும் உம்மிடம் வரக் காலமில்லையோ?*
*உமது வரவுக்காக விழிமூடாமல்*
*காத்திருக்கின்றோம் வருவீர்களாப்பா?*
ஆத்மா சாந்தி அடைவதாக!

*இல. 115, 3ஆம் குறுக்குத்தெரு,*
*யாழ்ப்பாணம்.*

பிரிவால் வாடும்:
- குடும்பத்தினர்.

(24874) (26-15-12-21)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| அன்னை மடியில் | | ஆண்டவன் அடியில் |
|---|---|---|
| 03 - 05 - 1985 | | 22 - 10 - 2003 |



### செல்வன் புவனேந்திரன் பாலமுரளி (முரளி)

(வல்வெட்டித்துறை)

கண்ணின் மணிபோலக் காத்து வளர்த்தெடுத்து
கல்வியறிவூட்டி காலமெல்லாம் பார்த்திருந்து
மண்ணின் மைந்தனாய் மாநிலம் போற்ற வாழ்வாயென
காத்திருந்தோம் நாம், அந்தக் காலனவன் கெடுத்தானே!
விண்ணுலகுக்குன்னை வேண்டுமென அழைத்துச் சென்று
கண்ணுக்குள் ஈரத்தைக் காயவே மறுத்தானே!
வெண்ணிலவு போன்ற கனிமுகத்தை இனி எப்போது காண்போம்?
வேலவன் தாள் சேரப் பணிந்து பிரார்த்திக்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தி அடைவதாக!

நாளை (21.11.2003) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனை, நண்பகல் மதியபோசனம் ஆகிய வற்றில் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*நறுவிலடி ஒழுங்கை,*
*வல்வெட்டித்துறை.*

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:
அன்பு அம்மா, அப்பாச்சி, பெரியம்மா, அண்ணா,
அக்காமார், அத்தான்மார், ஆசைத் தம்பிமார்,
மருமகன் மற்றும் நண்பர்கள்.

(24875)(34-21-12-15)

## மனதார வாழ்த்துகின்றோம்



### திரு.சி.சோமேஸ்வரபிள்ளை

B.A. Dip.in Ed.

*(அதிபர், யா/ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்)*

அவர்கள் சமாதான நீதிவானாக இன்று (2003.11.20) வியாழன் மல்லாகம் மாவட்ட நீதிபதி ச.இளங்கோவன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொள்வதை மன தாரப் பாராட்டி அவரின் சேவை தொடர்ந்து மேலோங்க வாழ்த்துகின்றோம்.

உப அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாகக் குழுவினர்
(யா/ஆனைப்பந்தி மெ.மி.வி.).

(24866) (25-12-15-21)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

| குணபால் | | குடபால் |
|---|---|---|
| 27 - 11 - 1929 | | 21 - 10 - 2003 |



திருமதி

### இராசரத்தினம் சிவஞானசுந்தரி

*எங்கள் இல்லத்தரசியாக வாழ்ந்து எம்மை வழிநடத்திச் சென்ற குலவிளக்கே!*
*நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்து சிட்டாய்ப் பறந்து சென்று விட்டீர்களே!*
*நாங்கள் கண்டது கனவோ என விழிக்கிறோம்*
*உங்கள் இனிய வார்த்தைகள் ஒருமாதமல்ல எத்தனை மாதங்கள் சென்றாலும்*
*எங்கள் காதில் ஒலித்துக் கொண்டேயிருக்கும்*
*எங்கள் உற்ற துணையை எப்பிறப்பில் காண்போம் இனி?*

அம்மா உங்கள் ஆன்மா சாந்தியடைய
எங்கள் குலதெய்வத்தைப் பிரார்த்திக்கிறோம்.

அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு இன்று (20.11.2003) வியாழக கிழமை முற்பகல் 11.00மணி முதலாக எமது இல்லத்தில் நடைபெறும். இந்த ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்பர்கள் அனைவரையும் வேண்டுகின்றோம்.

*உசன்,*
*மிருசுவில்.*

கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(24865)(34-21-12-15)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சரஸ்வதி ராஜேஸ்வரி பெனடிக்ற் (ராஜேஸ்)

திருமதி சரஸ்வதி ராஜேஸ்வரி பெனடிக்ற் 18-11-2003 செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற லீனஸ் பெனடிக்றின் அன்பு மனைவியும் எட்றி யன் அஜந்தா (கனடா), நொயல் றொசான் ஆகியோரின் பாசமிகு தாயா ரும் காலஞ்சென்ற சோமஸ்கந்தன், திரேசம்மாவின் அன்பு மகளும் ராஜ்குமார் (பெற்றோலிய கூட்டுத்தாபனம், கொழும்பு), சாந்தகுமார் (சுவிஸ்), காலஞ் சென்ற சாந்தி ஆகியோரது சகோதரியும் காலஞ்சென்ற லீனஸ், மேரிமாகிரேட் ஆகியோரின் மருமகளும் காலஞ்சென்ற எஸ்.ஏ.போல், திருமதி திரேசா போல் (ஆஸ்திரேலியா), அல்பேட் லீனஸ், பியாட்டிஸ் (கனடா) ஆகியோ ரது மைத்துனியும் அருட்திரு.ஜீவா போல் (OMI), எமில் போல் ஆகியோ ரது மாமியுமாவார்.

இவரது நல்லடக்கம் எதிர்வரும் (22.11.2003) சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு புனித மரியாள் பேராலயத்தில் இரங்கற்திருப்பலியுடன் நடை பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

51/1 பழையபூங்கா வீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

*தகவல்:*
றொசான் மகன்
அருட்திரு. ஜீவேந்திரா போல் OMI

### திருமதி வசந்தகுமாரி யோகலிங்கம்

(ஆசிரியை, யா/ஈவினை அ.த.க.பாடசாலை)

புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி வசந்த குமாரி யோகலிங்கம் 18.11.2003 செவ்வாய்க்கிழமை இரவு காலமாகி விட்டார்.

அன்னார் யோகலிங்கத்தின் அன்பு மனைவியும் தர்மிளா (வசாவிளான் ம.ம.வி. மாணவி) அவர்களின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் இரத்தினம்மாவின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான துரைராஜசிங்கம் நாகம்மாளின் அன்பு மருமகளும் சிவகுமாரி, இராசகுமாரி, சிவஞானகுமார், ஜெயக்குமார், நந்தகுமார், சந்திரகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் மஞ்சுளா, செல்வலிங்கம், குகமாலினி, சொக்கலிங்கம், சத்தியபரமேஸ்வரன், ரவிச்சந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் சுஜித்கண்ணா, ரமேஸ்கண்ணா, சிந்துஜா, திரேசி, நிதுன் (கனடா) ஆகி யோரின் அன்புச் சித்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2003) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு புன்னாலைக்கட்டுவன் தெற்கிலுள்ள நந்தகுமாரின இல்லத்தில் (சிந்து கொமினிக்கேஷன்) நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக ஈவினை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

சிந்து கொமினிக்கேஷன்,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு.

தகவல்:
து.யோகலிங்கம் (கணவர்),
சி.நந்தகுமார் (சகோதரர்).

(24880)(34-15-12-21)

# அரசியல் கட்சிகள் சுயலாபங்களுக்காக சமாதான முயற்சியை குலைக்கக்கூடாது!

## மக்கள் சமாதான அரங்கு வேண்டுகோள்

கொழும்பு,நவ.20

தமது குறுகிய அரசியல் லாபங்களுக்காக அரசியல் கட்சிகள் சமாதான முயற்சிகளுக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடாது.

கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் மக்கள் சமாதான அரங்கு இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

அரசியல் கட்சிகளுக்கிடையேயான அதிகாரப் போட்டிகள், முரண்பாடுகள், பழிவாங்கல்கள் என்பவற்றால், யுத்தத்தை ஒரு முடிவிற்குக் கொண்டுவரவும், அதனால் ஏற்படக்கூடிய இழப்புகள் மற்றும் பாதிப்புக்களுக்கு முடிவுகட்டவும் இயலாமற் போயுள்ளது. பொ.ஐ.மு. அரசினால் 1995இல் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

அதேபோன்று, ஐ.தே.மு.அரசும் சமாதான முயற்சியில் ஈடுபடுகின்றது. அதனால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள பல நன்மைகளை சர்வதேச சமூகம் பாராட்டியுள்ளது.

விடுதலைப் புலிகளினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகம் குறித்த வரைவில் தமக்கு எவ்விதத்தில் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதனை அவர்கள் தெளிவாகக் காட்டியுள்ளனர்.

மேலும் சமாதான நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு அரசாங்கத்திற்கு புலிகளினது வரைவு உதவியாக அமைந்துள்ளது. அத்தோடு, தொடர்ந்து பேச்சை முன்னெடுத்துச் செல்வதற்கு இதன் மூலம் எழுத்துருவிலான வரைவு ஒன்று இப்போது கிடைத்திருக்கின்றது.

எனினும், ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களை தன்வசம் எடுத்துக் கொண்டமை, தற்போது ஒரு புதிய பிரச்சினையாக உருவாகியுள்ளது. யார் அதிகாரத்தைக் கைப்பற்றுகின்றனர் என்பது பிரச்சினையல்ல. இனப்பிரச்சினை சகல இனமக்களாலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் தீர்க்கப்படவேண்டும் என்பதே முக்கியமாகும்.

ஆகவே, அரசியல் கட்சிகள் அனைத்தும் தமது குறுகிய அரசியல் இலாபங்களுக்காக முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளுக்கு குந்தமாக இருக்கக்கூடாது. குறுகிய அரசியல் இலாபத்தைக் கருதும் மனப்பான்மையைக் கைவிடவேண்டும் என்பதை மக்கள் சமாதான அரங்கு அவர்களுக்கு தனது வேண்டுகோளாக விடுக்கின்றது.

சமாதான முயற்சிக்கான சுமுகமான சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டுள்ள இந்தவேளையில், எதிர்க்கட்சிகள் உட்பட அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து அனைத்து மக்களாலும் - இனங்களாலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதான ஒரு நிலையான சமாதானத்தை ஏற்படுத்தவேண்டும் எனவும் இந்த அரங்கு வேண்டிக்கொள்கிறது. அத்தோடு, மேற்படி சமாதான அரங்கு கீழ்க்காணும் ஆலோசனைகளையும் முன்வைக்கிறது.

விடுதலைப் புலிகளின் கோரிக்கைகள் புறக்கணிக்கப்படக் கூடாது.

தற்போதைய அரசியல் சூழ்நிலை மீண்டும் யுத்தம் ஆரம்பமாவதற்கான ஒரு பின்னணியை உருவாக்கியுள்ளது. இது பொதுமக்களிடையே பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளது. ஆகவே, மீண்டும் போர் ஏற்படக் கூடாது என அரசிடமும் விடுதலைப் புலிகளிடமும் எதிர்க்கட்சிகளிடமும் ஆணித்தரமாக இந்த அரங்கு கேட்டுக்கொள்கின்றது.

யுத்தநிறுத்த உடன்படிக்கை மீறப்படக்கூடாது. சமாதான நடவடிக்கைகளுக்கான முயற்சிகள் வலுப்படுத்தப்படவேண்டும்.

இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படும் போது வடக்கு - கிழக்கில் உள்ள சிங்கள, முஸ்லிம் மக்களின் உரிமைகளும், அபிலாஷைகளும் பாதுகாக்கப்படவேண்டும்.

இன்னொரு பொதுத்தேர்தல் நாட்டில் அரசியல் வன்முறைகளை ஏற்படுத்தும். அத்தோடு, தேர்தலுக்காகப் பெருந்தொகை நிதி செலவாகும். அந்த நிதியை நாட்டு அபிவிருத்தி வேலைகளுக்கு பிரயோகிக்கலாம். ஆகவே, தேர்தல் தவிர்க்கப்படவேண்டும் - என்றுள்ளது.

## தெங்கு செய்கையாளர் சங்கத்துக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், நவ.20

குடாநாட்டின் தென்னை அழிவுகள் தொடர்பாக பேச்சு நடத்த வருமாறு தெங்கு அபிவிருத்திச் சபையின தலைவர் லிங்கோலின் பெர்னாண்டோ (Lingolin Pernando), வடமாகாண தெங்கு செய்கையாளர் சங்கம் மற்றும் தெங்கு அபிவிருத்திச் சபைப் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்தகால யுத்த நடவடிக்கைகளினால் குடாநாட்டில் அழிவடைந்த தென்னந்தோட்டங்களின் உரிமையாளர்களுக்கு உரிய நஷ்டஈடுகளை வழங்குமாறும், அவற்றின் மீள்நடுகைக்கு உதவுமாறும் வடமாகாண தெங்கு செய்கையாளர் சங்கம் விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்தே மேற்படி சந்திப்புக்கான அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது.

எனினும், வடமாகாண தென்னந்தோட்ட உரிமையாளர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு தெங்கு அபிவிருத்திச்சபை ஏற்கனவே கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்திருக்கின்றபோதிலும் வழங்கப்படவுள்ள நஷ்டஈட்டின் முழுமையான விவரம் இன்னமும் அறிவிக்கப்படவில்லை.

இதுதொடர்பாக பேசி இழப்பீட்டுத் தொகைகள் மற்றும் மீள்நடுகைக்கான உதவிகள் என்பவற்றை உறுதி செய்வதற்காகவே இச்சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ம-4)

# திருமணச் செலவை பரிசாக வழங்கும் பெயாரோஸ் சுபமாங்கல்யம்!

இலங்கையின் அழகியல் ஒப்பனைத்துறையில் முன்னோடிகளான ஹேமாஸ் மார்க்கட்டிங் நிறுவனம் கடந்த ஆண்டில் சந்தைக்கு அறிமுகம் செய்த 'பெயாரோஸ் பெயார்னஸ்' கிறீம் மூலம் எமது நாட்டின் வரலாற்றில் என்றுமில்லாதவாறு தமது வாடிக்கையாளர்களுக்கு விலைமதிப்பற்ற ஓர் அரியவாய்ப்பை பெற்றுக் கொடுத்துள்ளது. அது பெயாரோஸ் சுபமாங்கல்யம் போட்டியாகும். இப்போட்டியில் மிகவிரைவில் திருமண பந்தத்தில் இணைந்துகொள்ள இருக்கும் இளம் பெண்கள் மட்டும் கலந்து கொள்ளலாம். இதில் வெற்றிபெறும் இளம் பெண்ணின் திருமணச் செலவில் பெரும் பகுதியை ஹேமாஸ் நிறுவனத்தின் பெயாரோஸ் சுபமாங்கல்யம் ஏற்றுக்கொள்ளும் மணப்பெண்ணின் புடைவை, தங்கச் சங்கிலி, பாதணிகள், தோழியர் இருவரின் புடைவைகள், ஆபரணங்கள், முக அலங்காரம், தலையலங்கார ஆலோசனைகள், மலர் அலங்காரம், மணமேடை அலங்காரம், மேசை அலங்காரம், திருமண அழைப்பிதழ் அல்லது திருமண கேக் பெட்டி,



இறுதி சுற்றில் வெற்றியாளர் தெரிவு செய்யப்படுகிறார்.

இசை நிகழ்ச்சி, புகைப்படங்கள் அல்லது வீடியோ படங்கள், 150 பேருக்கான விருந்து உபசாரத்துடனான மண்டபச் செலவுகள் இவை அனைத்தையும் ஏற்கவும் இறுதி சுற்றுக்குத் தெரிவான மேலும் 10 பேருக்கு ஆறுதல் பரிசாக 10 தங்க நாணயங்கள், சகல செலவுகளையும் பெயாரோஸ் சுபமாங்கல்யம் ஏற்றுக்கொள்ள உள்ளது.

'பெயாரோஸ்' சுபமாங்கல்யத்தின் முதல் போட்டி இவ்வாண்டு இடம்பெற்றது. தமது வருங்காலத் துணைவருடனான மறக்கமுடியாத சம்பவம் ஒன்றை எழுதி, இருவரும் அண்மையில் எடுத்துக்கொண்ட புகைப்படத்துடன் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டையின் இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு, 25 கிராம் அல்லது 50கிராம் பெயாரோஸ் வெற்றுறையுடன் இணைத்து ஹேமாஸ் மார்க்கெட்டிங் நிறுவனத்துக்கு, திருமணம் புரிய உள்ள இளம் பெண்களிடம் கோரப்பட்டது. இதன்படி ஏராளமானவர்கள் 'பெயாரோஸ்' சுபமாங்கல்யம் போட்டியில் கலந்துகொண்டனர். கடந்த ஏப்ரல் முதலாம் திகதி முதல் ஓகஸ்ட் 31ஆம் திகதி வரை போட்டிக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக கொள்ளப்பட்டன.

இப்போட்டியில் வெற்றியாளர்களை தெரிவு செய்யும் முதலாவது சுற்று 2003 செப்ரெம்பர் 17ஆம் திகதி ஹேமாஸ் மார்க்கட்டிங் நிறுவனத்தில் நடைபெற்றது. இதற்கு உள்துறை அமைச்சின் ஏ.ஏ.அஸ்ஹர் ஹேமாஸ் மார்க்கட்டிங் நிறுவனத்தின் 'பெயாரோஸ்' விற்பனை முகாமையாளர் திருமதி ருக்கி மென்டிஸ் மற்றும் பீனிக்ஸ் விளம்பர நிறுவனத்தின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். இறுதிச் சுற்றுக்காக 11பேர் அங்கு தெரிவு செய்யப்பட்டனர்.

இறுதிச் சுற்றில் பெயாரோஸ் சுபமாங்கல்யம் வெற்றியாளரை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை 2003 செப்ரெம்பர் 30ஆம் திகதி நடைபெற்றது. இதில் திருமணம் செய்து கொள்விருக்கும் மணப் பெண், மணமகனுடன் அவர்களின் பெற்றோரும் பங்குபெற்ற வேண்டும் என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டிருந்தது. இவ்விருவருக்கும் இடையில் ஏற்கனவே இடம்பெற்ற மறக்கமுடியாத சுவையான சம்பவம் ஒன்றை எழுதியிருந்தமையும் போட்டி நிபந்தனைகளுக்கு உடன்பட்டமையும் நேர்முகப் பரீட்சைக்கு சிறப்பாக முகங்கொடுத்தமையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னர் பெயாரோஸ் சுபமாங்கல்யத்தினால் ஐ-எல் ஏகலைவ வசிப்பிடமாக கொண்ட செல்வி நிலங்கா பெரேரா அநுராதபுரத்தைச் சேர்ந்த துஷார் கருணாரத்தினவும் வெற்றிபெற்ற ஜோடியாக தெரிவுசெய்யப்பட்டனர். ஏனைய பத்து இறுதிச் சுற்று போட்டியாளர்களுக்கு தங்க நாணயங்கள் பரிசாக வழங்கப்பட்டன.

இதன்படி துஷார் - நிலங்கா தம்பதிகளின் திருமணச் செலவில் பெரும் பகுதியை பெயாரோஸ் சுபமாங்கல்யம் ஏற்றுக்கொள்ளும். இவர்களின் திருமணம் 2004 ஆண்டு ஜனவரி 17 ஆம் திகதி சனிக்கிழமை கட்டுநாயக்க விமானநிலைய ஹோட்டலில் நடைபெறும். இதற்கான மலர் அலங்காரத்துக்கு ஸ்டேர்லிங் பிளவர்ஸ் பிரைவட் லிமிட் பூரண அனுசரணை வழங்கும். சிகை அலங்காரத்துக்கான பூரண அனுசரணையை சலூன் நயனா வழங்கும். ரூ.68000 பெறுமதியான அமெரிக்க வைரக்கல் பதிக்கப்பட்ட மூன்றரை தங்க பவுண் எடையுடைய நெக்லஸை வழங் வோக் ஜீவலர்ஸ் அனுசரணை வழங்குகின்றது. பெயாரோஸ் சுபமாங்கல்யம் நடத்தும் இந்த திருமண வைபவம் பற்றி 30 நிமிட தொலைக்காட்சி நிகழ்ச்சி பின்னர் ஒளிபரப்பு செய்யப்படும்.

தற்போது அடுத்த ஆண்டுக்கான பெயாரோஸ் சுபமாங்கல்யம் போட்டியில் கலந்துகொள்ள இளம்யுவதிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது. ஹேமாஸ் நிறுவனம் விரைவில் திருமணம் புரிய உள்ள இளம் பெண்கள், தமக்கு வாழ்க்கைத்துணையாக வர உள்ளவருடன் இடம்பெற்ற நிகழ்வை சுவைபட எழுதி, பெயாரோஸ் 25 அல்லது 50கிராம் வெற்றுப்பக்கெட் ஒன்றையும் இணைத்து பெயர், முகவரி இருவரின் தேசிய அடையாள அட்டை இலக்கங்கள், சமீபத்தில் இருவரும் எடுத்துக் கொண்ட புகைப்படம் ஆகியவற்றை கொழும்பு பரிஸ்டல் வீதியில 36ஆம் இலக்கத்தில் உள்ள ஹேமாஸ் மார்க்கெட்டிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்கு பெயாரோஸ் சுபமாங்கல்யம் என்று குறிப்பிட்டு அனுப்பி வைக்கலாம். அடுத்த ஆண்டு ஜூலை மாதம் 31ஆம் திகதி வரை இப்போட்டிக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன.

# கடன்பொறுப்புப் பத்திரம் வழங்கும் பணி இலங்கைவங்கியின் மேற்றரக் கிளையில்

இறக்குமதி நடவடிக்கைகளின் உயிர்நாடியாக விளங்கும் கடன்பொறுப்புப் பத்திரம் (Letter of Credit) வழங்கும் நடவடிக்கையை இலங்கை வங்கி குடாநாட்டில் மீண்டும் ஆரம்பித்துள்ளது. யாழ் நகரில் உள்ள இலங்கை வங்கியின் மேற்றரக்கிளை மூலம் கடன்பொறுப்புப் பத்திர நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும்.

இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபடும் குடாநாட்டு வர்த்தகர்கள் கடன்பொறுப்புப்பத்திரம் ஒன்றைத் திறப்பதற்கு இதுவரை காலமும் கொழும்பு சென்று வந்தார்கள். இவர்களின் நலன்கருதி இலங்கைவங்கியின் மேற்றரக் கிளை மூலம் கொடுப்பனவுகளை மேற்கொண்டு இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபட வசதியாக கடன்பொறுப்புப் பத்திரம் வழங்கப்படுகிறது.

இந்த நடைமுறை குறித்து மேற்றரக் கிளையின் முகாமையாளர் சி.விக்னேஸ்வரன் தெரிவித்ததாவது:-

கடன்பொறுப்புப் பத்திரம் வழங்கும் நடைமுறை சுமார் 20 வருடங்களுக்குப் பின்னர் தற்போதுதான் குடாநாட்டில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் எமது வர்த்தகர்கள் இத்தகைய வசதியை கொழும்பில்தான் பெற்றிருக்கின்றார்கள். ஆனால், இனிமேல் இதனை இலங்கை வங்கி மேற்றரக் கிளையில் பெற்றுக் கொள்ளமுடியும். வெளிநாட்டில் இருந்துபொருள்களை கொள்வனவு செய்யும் வர்த்தகர்களுக்கு இந்த நடைமுறை மிகவும் நன்மையளிக்கக்கூடியது.

கடன்பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதன் மூலம் வங்கியின் ஊடாகத் தமது கொடுப்பனவுகளை மேற்கொள்ளுவது அதிக நம்பகத்தன்மை உடையது - என்றார் அவர். (ஓ-4)



மக்கள் வங்கி கிளைகளில் 10 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகையினை தீபாவளி தினத்தன்று வைப்புச் செய்த வாடிக்கையாளர்களுக்கு அழகிய தீபவிளக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது.

மக்கள் வங்கியின் அச்சுவேலி கிளையில் இடம்பெற்ற நிகழ்வில் கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம் வாடிக்கையாளர் ஒருவருக்கு தீபவிளக்கை அன்பளிப்புச் செய்வதைப் படத்தில் காணலாம். அருகில் மக்கள் வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளர் க.ஆனந்தராஜாவும் காணப்படுகிறார். (ம-9)

### நல்லூர் பிரதேச செயலர் பிரிவில்

# தொழில் முயற்சியில் ஈடுபடுவோருக்கு கடன் வழங்கவென நிதியுதவி


வலி.வடக்கு,நவ.19

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் சந்தைப்படுத்தல் தொழில் முயற்சியில் ஈடுபடுவர்களுக்குக் கடன் வழங்கவென சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபையினால் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதியில் இருந்து நடமாடும் வண்டில் வியாபாரத்தில் ஈடுபடும் நால்வருக்கும் வீடுகளுடன் சேர்த்து அமைத்துள்ள சிறிய கடைகளை நடத்தும் ஐவருக்கும் கடன்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான பயனாளிகளை சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் தெரிவு செய்வர்.

(ம-86)



# கணனிப் போதனாசிரியர் தேவை

சபையால் நடத்தப்படும் கணனிப் பயிற்சிநெறிக்கு போதனாசிரியர்கள் தேவை. தகைமையுடையவர்கள் சகல கல்வி அனுபவ, கணனிப் பயிற்சி தொடர்பான சான்றிதழ்களுடன் 21.11.2003 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு சபை அலுவலகத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கவும்.

**- மாவட்டச் செயலாளர்.**

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை,
வீரசிங்கம் மண்டப கட்டடத் தொகுதி 2ஆம் மாடி,
இல.12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(C31396)(35-12-16-32)

# சேவை நலன் பாராட்டுவிழா

ஓய்வுபெற்ற வங்கிச் சேவை முகாமையாளர்
(வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம்)

**திரு.நல்லையா கணேசலிங்கம்**

அவர்களுக்கு
இன்று **சேவைநலன் பாராட்டுவிழா**
நடைபெறுகின்றது.

காலம் :- இன்று (20-11-2003) வியாழக்கிழமை
பிற்பகல் 3.30 மணி.

இடம் :- வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.ச., நீர்வேலி.

இன்று பாராட்டுப் பெறும் உரும்பிராய் வடக்கு திரு. ந.கணேசலிங்கம் அவர்கள், வலி. கிழக்கு தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் வங்கிச் சேவை முகாமையாளராக 28 ஆண்டுகளும், அதற்கு முன் 10 ஆண்டுகள் ஊழியராகவும் மொத்தம் 38 ஆண்டுகள் பணிபுரிந்தார் என்பதை அறியும்போது மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

10.04.2003 இல் தமது சேவையில் இருந்து ஓய்வுபெற்ற இவர், உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய பரிபாலன சபையின் கௌரவ செயலாளராகவும், உரும்பிராய் சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோயில் பரிபாலன சபையின் கிளைச் செயலாளராகவும், உரும்பிராய் வடக்கு விவசாய சம்மேளனத்தின் தலைவராகவும், உரும்பிராய் வடக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தின் உறுப்பினராகவும், உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாக சபை உறுப்பினராகவும், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கோப்பாய்ப் பிரதேசத்தின் தலைவராகவும், நெறியாளர் குழு உறுப்பினராகவும், யா.மா.வி.நு. கூட்டுறவுப் பொதுச் சபையின் பிரதிநிதியாகவும், கமநல கேந்திர நிலைய நிர்வாக உறுப்பினராகவும் கோப்பாய் பிரதேச கிராம மகளிர் அபிவிருத்திச் சமாசச் செயலாளராகவும் பணிபுரிந்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. அவரது சேவையைப் பாராட்டுவதுடன் மனமார வாழ்த்துகின்றோம்.

(24873)(30-12-16-32) **-அன்பர்கள், நண்பர்கள்.**

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,நவ.20

மாவீரர் தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் தலைவர், பொதுமுகாமையாளர் மற்றும் ஏனையோருக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று வியாழக்கிழமை காலை 11 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் அமைந்துள்ள மாகாண கூட்டுறவு சபையில் இடம்பெறவுள்ளது.

இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மாகாண கூட்டுறவுச் சபைத் தலைவர் கேட்டுள்ளார்.

(ம-6)

## உதைபந்தாட்டம்

வலி.வடக்கு,நவ.20

எல்லைப்படை மாவீரர் நினைவாக தமிழீழ விளையாட்டுத் துறையால் யாழ். மாவட்ட உதைபந்தாட்ட லீக் அணிகளுக்கு இடையே நடத்திவரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை 3.00 மணி முதல் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

அராலி சில்வெஸ்ரார் விளையாட்டுக்கழகம் எதிர் பாசையூர் சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம்.

சுன்னாகம் லம்போதரா விளையாட்டுக் கழகம் எதிர் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் (ம-86)

## குடத்தனையில் இடம்பெயர் சேவை

வடமராட்சி,நவ.20

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியான குடத்தனையில் எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெயர் சேவை நடைபெறவுள்ளது.

யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இடம்பெயர் சேவையின்போது மாவட்ட மட்டத்திலான திணைக்களத் தலைவர்கள் பலரும் கலந்துகொள்வர்கள்.

அம்பன், குடத்தனை, மணல்காடு ஆகிய இடங்களை உள்ளடக்கிய 5கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் தத்தமது பிரச்சனைகள் தொடர்பாக இடம்பெயர் சேவையில் எடுத்துக்கூறி நிவாரணத்தை பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-173)

# அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



கொடிகாமம், கச்சாய்ப் பிரதேசத்தில்,
வெள்ளாம்போக்கட்டியைச் சேர்ந்த
ஓய்வுபெற்ற ஆயுர்வேத வைத்திய உத்தியோகத்தர்
**திரு.இ.கந்தையா** அவர்கள் நீதி
அமைச்சினால் சமாதான நீதிவானாக நியமனம்
செய்யப்பட்டுக் கடந்த 31.10.2003 அன்று யாழ். மாவட்ட
நீதமன்றில் மேலதிக நீதிவான்
**திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன** முன்னிலையில்
சத்தியப்பிரமாணம்
செய்துகொண்டார்.

அவரின் சமூகப்பணிகளும், வைத்திய சேவையும் சிறப்புற வேண்டுமெனப் பாராட்டி அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

திரு.த.கந்தையா குடும்பத்தினர்.
(ஓய்வூதியர்)
லலிதா வாசம், வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

திரு.சி.எம்.சண்முகநாதன் உடையார்
(ஓய்வூதியர், பத்திரிகையாளர்)
2ஆம் குறுக்குத் தெரு,
மிருசுவில்.

(24882)(35-12-16-32)

# துயர் பகிர்கின்றோம்



சண்டிலிப்பாய் பிரதேச செயலக இளைப்பாறிய காவலாளி

**நாகமுத்து பாலசேகரம்**

அவர்கள் 19.11.2003 இல் காலமானதையிட்டு துயருறும் குடும்பத்தினருடைய துயரத்தை நாமும் பகிர்ந்துகொள்வதோடு, ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
**பூ.சிவராசா,**
*சண்டிலிப்பாய்.*

**- அன்பு நண்பர்களும், உறவினர்களும்.**

(24887)(34-12-16-32)

# மரண அறிவித்தல்

## நாகமுத்து பாலசேகரம்

(இளைப்பாறிய காவலாளி, பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்)

முள்ளானையைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து பாலசேகரம் நேற்று (19.11.2003) புதன்கிழமை காலை காலமானார்.

அன்னார் கமலாவதியின் அன்புக் கணவரும் சோபனா, கவிதா (பிரான்ஸ்), இராசாதிவி (சுவிஸ்) ஆகியோரின் அருமைத் தந்தையாரும் சந்திரகாந்தன், விஜயகுமார் (பிரான்ஸ்), சுமி (சுவிஸ்), மலேஷியாவில் இருப்பவர்களான குமாரசிவன், புஷ்பராசலிங்கம், ஈஸ்வரி, அம்பிகா ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற பொன்னம்மா மற்றும் செல்லம்மா, முத்தம்மா, தையல் நாயகி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2003) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் காலை 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*சண்டிலிப்பாய்.* (24888)(34-12-16-32) **கமலாவதி (மனைவி).**





உங்களின் சகல தொலைபேசி அழைப்புக்களுக்கும் எந்நேரமும் டயலொக் உடன்

டயலொக்கின் புதிய சேவை நிலையங்கள் இல. 141 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். இல. 47, மத்திய வீதி, திருகோணமலை.

கட்டணங்களை செலுத்துதல், புதிய இணைப்புகளை ஏற்படுத்துதல் (முன்னர் செலுத்தப்பட்ட - கார்ட் மற்றும் பின்னர் செலுத்தும் ... ), புதிய தொலைபேசி கருவிகளை வாங்குதல், சார்ஜ் அட்டைகளை (Charged Cards) வாங்குதல், CLI, SMS உட்பட ஏனைய கட்டணத்துக்கான சேவைகளை இங்கே பெற்றுக்கொள்ளமுடியும்.

GSM

எதிர்காலம் இன்றே.

# அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேசசபை - 2004ஆம் ஆண்டிற்கான சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் ஆகியவற்றிற்கான கேள்விப்பத்திரம் வழங்கும் கால எல்லை நீடித்தல்

மேற்கூறப்பட்டவற்றிற்கான கேள்விப்படிவம் வழங்கும் கால எல்லை கீழ்க்குறிப்பிட்டவாறு நீடிக்கப்பட்டுள்ளது.

குத்தகை சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்படிவம் வழங்கப்படும் திகதி :
2003.12.01, பி.ப.14.00 மணிவரை

கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :
2003.12.02, ந.ப.12.00 மணிவரை.

கேள்விப்படிவம் திறந்துபார்க்கப்படும் திகதி :
2003.12.02, பி.ப.14.30 மணிக்கு.

வலி.தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்,
2003.11.19.

திருமதி ச.சொக்கலிங்கம்,
செயலாளர்,
வலி.தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

(சி-31402)(31-14-18)

# இரங்கல் அஞ்சலி

வன்னிப் பகுதியில் நேரகாலம் பாராது மகத்தான மருத்துவ சேவை ஆற்றிக்கொண்டிருக்கும்


## டாக்டர் கெங்காதரன்

அவர்களின் அன்புத் துணைவியார் யாழ்ப்பாணத்தில் நேற்று (19.11.2003) புதன்கிழமை இரவு 8.30மணிக்கு காலமான செய்திகேட்டு மிகவும் ஆழ்ந்த கவலை அடைந்துள்ளோம். இதனால் ஆழ்ந்த துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நடுவப் பணியகம்,
தமிழீழ சுகாதார சேவைகள்,
தமிழீழம்.

(சி-31404)(31-14-18)

# DADI ஜெனரேட்டர்



■ 10KW
■ நிசப்தமானது
■ மின்சக்தியில் இயக்கப்படுவது

ஜெனரல் அருந்ஸ் கொன்சலிடேட்டட் லிமிட்டெட் II
316, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு -10
தொலைபேசி 2337296, 2337283-5, 2324261-5

# Furnace Blower



ஜெனரல் இக்விப்மென்ட்ஸ் லிமிட்டட்

316,400, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 2345046, 2327264, 2343822, 2343823, 2430799 பக்ஸ்: 2434637.

## திருமறைக் கலாமன்ற நாடகவிழா

இளவாலை,நவ.20

இளவாலை திருமறைக் கலாமன்றம் நடத்தும் நாடகவிழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இளவாலை கன்னியர்மடம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இளவாலை திருமறைக் கலாமன்றச் செயலாளர் கு.சிவலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக வலி. வடக்கு பிரதேச செயலர் க.குணராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார்.

இந்நாடக விழாவில் தாவடி ஸ்ரீகாளி அம்பாள் மன்றம் வழங்கும் 'கதிரை யாருக்கு' என்ற நாடகமும் -

தேவர்கட்டு இளைஞர், யுவதிகள்மன்றம் வழங்கும் 'அவர்களுக்கு...' என்ற நாடகமும் -

இளவாலை புனித யூதாதேயு இளைஞர்மன்றம் வழங்கும் 'சமாதானத்தை அழிக்காதே' என்ற நாடகமும் - இடம்பெறும்.

பிரதமவிருந்தினர் உரையைத் தொடர்ந்து மாதகல் வளர்பிறை கலாலயம் வழங்கும் 'மாயவலை' என்ற நாடகம் இடம்பெறும். மேற்படி நான்கு நாடகங்களில் சிறந்த நாடகங்கள் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

தொடர்ந்து இளவாலை திருமறைக்கலாமன்ற கவின்கலைப் பயிலக மாணவர்கள் வழங்கும் நடனம், திருமறைக் கலாமன்றங்களின் பிரதி இயக்குநர் யோ.ஜோண்சன் ராஜ்குமாரின் நாடகங்கள் பற்றிய கண்ணோட்டம், இளவாலைத் திருமறைக் கலாமன்ற இளைஞர் அவை வழங்கும் 'நாமே தீர்மானிப்போம்' என்ற நாடகம் ஆகியன இடம்பெறவுள்ளன.(எ-9-48)

### நிறைஞ்சனாஸ் சங்கானை

ராஜேஸ், ஸ்ருதிகா நடித்த
அல்பம் (தமிழ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (ப.ப.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
DOUBLE JEOPARDY

### ராஜா யாழ்ப்பாணம்

விக்ரம், சூர்யா, லைலா நடித்த
பிதாமகன்
காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (ப.ப.)
ஆஞ்சநேயா



### லிபேட்டி அச்சுவேலி

சரத்குமார், தேவயானி, வடிவேல், மணிவண்ணன் நடித்த
ஒருவன்
காட்சி நேரம்: 3.00, 7.00.
(C/31234)

### லஷ்சுமி சினிமா இணுவில்

பகவதி
10.30, 2.30, 6.30. (ப.ப.)



### நாகம்ஸ் சுன்னாகம்

இளைய தளபதி விஜய், ஜோதிகா, கிரண், விவேக் நடித்த
திருமலை
பார்த்திபன் கனவு



# G.A.Q. 2004 [யாழ்.]

✱ஆங்கில இலக்கியம், ✱ மொழியியல்

விரிவுரைகள் ஆரம்பம்: 22.11.2003 (8 மணி)

விரிவுரையாளர்: சோ.பத்மநாதன்

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்..

# துயர் பகிர்கின்றோம்



யா/ஈவினை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை உப அதிபர்

## திருமதி வசந்தகுமாரி யோகலிங்கம்

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பகிர்ந்து கொள்வதோடு, எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
(278860)(31-14-18) யா/ஈவினை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை.

# கண்ணீர் அஞ்சலி



குருமார் ஒன்றியத்தின் உறுப்பினரும், எமது ஆலயத்தில் இலட்சார்ச்சனையில் கலந்து சிறப்பித்தவரும், மயிலணி கந்தசுவாமி கோயில் பிரதம குருக்களுமாகிய

## சிவஸ்ரீ சர்வேஸ்வரக் குருக்கள் வரதராஜேஸ்வரக் குருக்கள்

அவர்களின் திடீர் மறைவினால் நாம் பெரிதும் கவலையடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஸ்ரீ விஸ்வேஸ்வரப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

சிவன் கோயிலடி,
இணுவில் கிழக்கு,
சுன்னாகம்.

தர்மகர்த்தா, சிவரத்தினம் - பரமேஸ்வரன் குடும்பம்,
(இணுவில் ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வேஸ்வர சுவாமி கோயில்)

(24392) (31-14-18)

# கண்ணீர் அஞ்சலி



குருமார் ஒன்றியத்தின் உறுப்பினரும், மயிலணி கந்தசுவாமி கோயில் பிரதம குருக்களுமாகிய

## சிவஸ்ரீ சர்வேஸ்வரக் குருக்கள் வரதராஜேஸ்வரக் குருக்கள்

அவர்களின் திடீர் மறைவினால் நாம் பெரிதும் கவலையடைகிறோம். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல முத்துமாரி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

சிவன் கோயிலடி,
இணுவில் கிழக்கு,
சுன்னாகம்.

சுப்பிரமணியம் - மகேஸ்வரலிங்கம் குடும்பத்தினர்
(முன்னாள் செயலாளர், சூராவத்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் பரிபாலன சபை).

(24893) (31-14-18)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பாலசிங்கம் பரமேஸ்வரி

புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் வாகீஸ்வரிலேன், கோண்டாவில் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசிங்கம் பரமேஸ்வரி 16.11.2003 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சீனியர் - இலட்சுமி தம்பதியரின் மூத்தமகளும் பாலசிங்கத்தின் அன்பு மனைவியும் சிறி, சேகர், மதியழகன், அன்பழகன், சாந்தி, சுமதி, பாலேஸ்வரி, றஜந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2003) வியாழக்கிழமை காலை 10.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.
(24891)(31-14-18)

தகவல்:
பாலசிங்கம் (கணவர்).

## சின்னப்பொடியர் கந்தையா

(ஓய்வுபெற்ற அதிபர்)

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வவுனியாவைத் தற்காலிக வதிவிடமாகவும்கொண்ட சின்னப்பொடியர் கந்தையா 18.11.2003 அன்று வவுனியாவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2003) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் வவுனியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

166A, வியாசர் வீதி, பண்டாரி குளம்,
வவுனியா.
(24889)(31-14-18)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

## திருமதி ரூத் மகேஸ்வரி பாலசிங்கம்

கரவெட்டி மத்தி, கரவெட்டியைச் சேர்ந்த சட்டத்தரணி B.C. பாலசிங்கத்தின் அன்பு மனைவி திருமதி ரூத் மகேஸ்வரி பாலசிங்கம் அவர்கள் நேற்று (19.11.2003) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் சாந்தினி (லண்டன்), செறினா (ஆசிரியை, உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்), சாம் (பொறியியலாளர், சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சத்தியமூர்த்தி (ஆசிரியர், லண்டன்), தேவநேசன் (மதகுரு, கிறிஸ்தவ இறையியல் கல்லூரி, மருதனார்மடம்), செல்வினி (கணக்காளர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் அர்ச்சனா, பிரசன்னா, லிண்டர், மோலி, யோஷ் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் கணபதிப்பிள்ளை, இரத்தினம், திருச்செல்வம், சிவப்பிரகாசம், பரமேஸ்வரி, சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"பெத்தேல்"
கரவெட்டி மத்தி, கரவெட்டி.
(24877)(31-14-18)

தகவல்:
B.C.பாலசிங்கம்
(கணவர்).

# மானிப்பாய் றோட்டரக்ட் கழகம் நடத்தும் க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான இலவச பரீட்சை வழிகாட்டிக் கருத்தரங்கு -2003

இடம் :- சங்கானை சைவப்பிரகாச வித்தியாலயம்

நேர அட்டவணை

| | | | | |
|---|---|---|---|---|
| 21-11-2003 | வெள்ளி | விஞ்ஞானம் | மாலை 3-6 | திரு. கஜன் |
| 22-11-2003 | சனி | தமிழ் | காலை 9-12 | திரு. குமரன் |
| | | சமூகக்கல்வி | மாலை 1-5 | திரு. R.S.சந்திரன் |
| 23-11-2003 | ஞாயிறு | ஆங்கிலம் I | காலை 9-10.30 | திருமதி ரட்ணசிங்கம் |
| | | தமிழ் I | 10.45-12.15 | திரு. மகேந்திரன் |
| | | ஆங்கிலம் II | மாலை 1-3 | திருமதி ரட்ணசிங்கம் |
| | | தமிழ் II | 3.15 - 5 | திரு. மகேந்திரன் |

பரீட்சைக்கு தோற்றும் அனைத்து மாணவர்களும் கற்று பயன்பெறவும்

அனுசரணை : பிரகாஷ் அக்கடமி

"கல்வியே எதிர்காலத்தை நிர்ணயிக்கும்"

தரம் 1 முதல் 10 வரை சகல பாடங்களும் நடைபெறுகின்றன. யாழ். முன்னணி தலியார் கல்வி நிறுவன ஆசிரியர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் கல்வி கற்பித்தலில் ஈடுபடுவர்.

ஆழங்குளாய் வீதி,
சண்டிலிப்பாய் வடக்கு.

(சி-31403)(31-14-18)

# சலுகைகள் நிறைந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மட்டத்திலேயே உள்ளது.

2001 இல் வரவு - செலவுத்திட்டப் பற்றாகுறை 10.8 வீதமாக இருந்தது. நாம் பதவி ஏற்ற முதல் வருடத்தில் - 2002 இல் - 8.9 வீதமாகக் குறைக்கப்பட்டது.

இவ்வாண்டில் குறிப்பிட்ட சில சர்வதேச நிகழ்வுகள் மற்றும் கடந்த மே கடைசியில் இடம்பெற்ற வெள்ளப்பெருக்கு போன்ற பாதகமான அம்சங்களுக்கு மத்தியில் வரவு - செலவுத் திட்டப் பற்றாகுறையை 7.8 வீதத்துக்கு நாம் கட்டுப்படுத்தியுள்ளோம்.

அரச கடன் 2001 இல் 105 வீதமாக இருந்தது. இவ்வாண்டில் அதை 100 வீதத்துக்கு குறைப்பதில் நாம் வெற்றிகண்டுள்ளோம். வெளிநாட்டுக் கடன்பழு தீர்ப்பனவு வீதம் 9.2 இற்குக் குறைக்கப்பட்டுள்ளது.

ஏற்றுமதி வருவாய் வலுவான மீட்சியைக் காட்டியுள்ளது. ஈராக் போர் மற்றும் சர்வதேச பொருளாதாரத்தில் மெதுவான போக்கு ஆகியவற்றுக்கு மத்தியில் கடந்த ஆண்டைவிட பத்துவீதம் ஏற்றுமதி அதிகரித்துள்ளது. கைத்தொழில் ஏற்றுமதி 22 வீதம் வளர்ச்சியுள்ளதே இதற்கு முக்கிய காரணம்.

நாட்டின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 290 கோடி அமெரிக்க டொலராக அதிகாரித்துள்ளது. இவ்வாண்டு இறுதியில் அது 300 கோடி அமெரிக்க டொலராக உயரும். இது சுமார் ஐந்து மாதங்களுக்குக் கூடிய இறக்குமதிச் செலவை ஈடுசெய்யக் கூடியதாக இருக்கும். அத்தோடு, கடந்த ஆறு ஆண்டுகளில் அடையப்பட்ட உயர்ந்த மட்டம் இதுவாகும்.

2001 இல் எட்டுக்கோடி 20 லட்சம் டொலராக இருந்த வெளிநாட்டு நேரடி முதலீடுகள் இவ்வாண்டில் 23 கோடி டொலராக உயர்ந்தன. இது எமது செயற்பாட்டில் வெளிநாடுகளின் நம்பிக்கையைக் காட்டுகின்றது.

இம்மாற்றம் கைத்தொழில் உற்பத்தி அதிகரிப்பு, வேலைவாய்ப்பு அதிகரிப்பு, தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் தேர்ச்சி போன்ற பரிமாற்றங்களின் மூலம் நாடு நன்மை பெற வழி செய்கிறது. சர்வதேச நாணயச் சந்தையில் இலங்கை ரூபாவின் மதிப்பு கடந்த ஆண்டில் உயர்ந்தமை குறிப்பிடத்தக்கதொன்று.

2001 இல் 14.2 வீதமாக இருந்த பணவீக்கம், 2002 இல் 9.6 வீதமாகவும், 2003 ஒக்ரோபரில் 7.2 வீதமாகவும் வீழ்ச்சியடைந்தமை ஒரு சாதகமான போக்கு. இது பொருளாதாரம் முழுவதிலும் மிகச் சிறந்த - பாரிய நன்மைகளைத் தரும். இது முதலீடுகளை ஊக்குவித்து குறைந்த வட்டி வீதங்களைத் தோற்றுவித்து, எதிர்கால வளர்ச்சிக்கு உதவும்.

சந்தை உறுதிப்பாடும், பணவீக்க வழிவகைக் கட்டுப்படுத்தப்பட்டமை ஆகியவை 2003 இன் முதல் பத்து காலப்பகுதியில் நான்கு தடவைகள் மத்திய வங்கி அதன் கொள்கை வட்டி வீதங்களைக் குறைக்க வழி செய்துள்ளன. இதன் மூலம் வியாபாரம் கைத்தொழில் என்பன நன்மையடைந்தன. முதன்மைக் கடன் வழங்கல் வீதம் 2001 இல் 22.4 வீதமாக இருந்து இவ்வாண்டுத் தொடக்கத்தில் 12 வீதமாகக் குறைக்கப்பட்டது. கடந்த செப்ரெம்பரில் அது மேலும் குறைக்கப்பட்டு 9.3 வீதத்துக்குக் கொண்டுவரப்பட்டமை சாதனையாகும்.

அரச கடன்பாடுகள் குறைக்கப்பட்டன. இது வர்த்தக வங்கித் தொழில்துறையில் தனியார் துறையினர் அதிக கடன்பெற வாய்ப்பளித்தது.

இந்த அரசு பதவியேற்றபோது இரு அரச வங்கிகளிலும் 4 ஆயிரம் கோடி ரூபா அரசு மேலதிகப் பற்றாகவைத்திருந்தது. இதனால் கணிசமான தொகையை வட்டியாகச் செலுத்த வேண்டியிருந்தமை வரவு - செலவுத் திட்டத்தில் பிரதியலித்தது.

எனது முதலாவது வரவு - செலவுத்திட்ட உரையில் நான் உறுதியளித்தபடி இந்த மேலதிகப் பற்றுபூஜ்ஜமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

பங்குச் சந்தையில் பங்கு விலைச் சுட்டெண்ணிலும் மொத்தப் புரள்விலும் முன்னெப்போதும் இல்லாத உயர்ந்த மட்டத்தை அடைந்துள்ளோம். உலகின் இரண்டாவது மிகச் சிறந்த - செயலாற்று - பங்குச் சந்தை என்ற சர்வதேச அங்கீகாரத்தை ஈட்டியுள்ளோம்.

மற்றவர்கள் செய்தது போன்று சந்திரனிலிருந்து அரிசியைக் கொண்டு வருவோம் என்றோ அல்லது உற்பத்திச் செலவிலும் பார்க்க குறைந்த விலையில் பாணைத் தருவோமென்றோ நாம் வாக்குறுதியளிக்கவில்லை. ஆரவாரமற்ற விதத்தில், எமது பொருளாதாரத்தின் அடிப்படையை வலுப்படுதுவதில் கவனம் செலுத்தி வருகின்றோம். எனவே, எமது முன்னேற்றம் வலுவான அத்திவாரமொன்றின் மீது கட்டியெழுப்பப்பட்டு வருகின்றது. அரசியல் நோக்கம் கொண்ட தவறான பிரச்சினைகளினால் அதனை ஆட்டங்காணச் செய்யமுடியாது.

எங்கள் நம்பிக்கைக்கு மக்களைப் பாத்திரமாக்கியுள்ளதுடன், சிறந்த எதிர்காலம் கருதி அரசியல் ரீதியில் விரும்பப்படாத தீர்மானங்களை நாம் மேற்கொள்ளவேண்டியிருந்தது. நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப இன்னும் காலம் எடுக்குமென்று அப்பொழுது நாம் சொன்னோம். அவர்கள் எங்கள் மீது நம்பிக்கை வைத்து ஒத்துழைத்தார்கள். இந்த வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் அவர்களது கஷ்டத்துக்குப் பலன்களைப் பெறுவர்.

1994-2001 காலப் பகுதியில் இழக்கப்பட்டிருந்த நம்பிக்கை மீண்டும் அடையப்பட்டுள்ளது. துரதிர்ஷ்டமாக இது நவம்பர் மாதத்தின் முதல் வாரத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளின் மூலம் ஆட்டங்காணச் செய்யப்பட்டிருக்கிறது. உருவாக்கப்பட்ட - நிச்சயமற்ற - தன்மையானது கொழும்புப் பங்குச் சந்தையிலும் செலாவணி வீதத்திலும் வீழ்ச்சியையும் பெருமளவு தளம்பல்களையும் விளைவித்திருக்கிறது.

மேலும், டோக்கியோ மாநாட்டில் சர்வதேச சமூகத்தினால் அரசின் கொள்கைகள் மீது வைக்கப்பட்டிருந்த நம்பிக்கையும் தற்போது உருவாக்கப்பட்ட அரசியல் குழப்ப நிலைமைகளின் மூலம் சேதமடைந்துவிட்டது. அவசரகாலச் சட்டத்தின் அவசியமின்றி இரு ஆண்டுகள் நாம் அரசினை நடத்தியிருககின்றோம். நாம் எமது வீதிகளில் ஆயுதப்படைகளையும் பொலீஸாரையும் கொண்ட துரதிர்ஷ்டமான காட்சியை மீண்டும் பார்க்கிறோம். முதலீட்டாளர்கள் மற்றும் தனியார் துறை அபிவிருத்திகளின் மீதான மோசமான தாக்கத்தின் காரணமாக, இது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நம்பிக்கைகளைத் தானாகவே சிதைத்துவிட்டது. வாய்ப்பு நிறைந்த, உயர்ந்த, வெற்றிகரமான சுற்றுலாப் பருவகாலம் இடருக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

20 ஆண்டுகளுக்குப் பின்னர் அரசாங்கத்தினால், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு மேற்கொள்ளப்பட்டமையும் யுத்த நிறுத்தம் வெற்றிகரமாக எய்தப்பட்டமையும் பொருளாதாரத்தின் புத்தெழுச்சிக்கு குறிப்பிடத்தக்களவிற்கு பங்களித்தன. இச்செயற்பாட்டினை தற்பொழுது முன்னெடுத்துச் செல்லமுடியாமலிருப்பது இன்னொரு எதிர்மறைக் காரணியாகவுள்ளது.

அரச முறைப் பயணமாக பிரதமர் வெளிநாடு சென்றிருந்த வேளையில் எடுக்கப்பட்ட அவசரமான நடவடிக்கையானது பொருளாதாரத்தின் மீது கடுமையான பாதிப்புக்களையும் பின்னடைவுகளையும் தோற்றுவித்துள்ளது. கடந்த இரு ஆண்டுகளுக்கு மேலாக ஒன்று சேர்க்கப்பட்ட வேகத்தினை நிறுத்துவதற்கும் அதற்குப் பதிலாக சேதங்களைக் கட்டுப்படுத்துவதில் எமது கவனத்தைத் திசை திருப்புவதற்கும் நாம் நிர்பந்திக்கப்பட்டுள்ளோம். எனினும், அரசு இதற்கு அச்சமுறாது. எமது பாதையில் ஏற்படுத்தப்பட்ட நெருக்கடிகளை நாம் வெற்றிகண்டு நடுத்தர கால அபிவிருத்தித் திட்டமான 'மீண்டெழும் இலங்கையை' நடைமுறைப்படுத்துவதனை முன்னெடுத்துச் செல்வோம் - என்றார் நிதியமைச்சர். (ஐ)


## தவறிவிட்டன!

ஊாலை வடக்கைச் சேர்ந்த தர்மலிங்கம் ரகுதரன் என்பவருடைய பாஸ்போட், விமான பயண ரிக்கெட் என்பன நேற்று மல்லாகத்துக்கும் உப்புமடச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் அல்லது தொலைபேசி இல. 0777 297961, 0777 217143 இல் தொடர்புகொள்ளவும்.

(24890)(22-14-17)



எமது புதிய வீடியோ CD வெளியீடு

மாதவன், ரீமாசென்

ஜே! ஜே!

(பிரதிகள் உடன் பெறலாம்)

வீடியோ விமல் யாழ்ப்பாணம்.


# வரவு - செலவுத் திட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதிகரிப்பு இதுவாகும்.

★ ஜனவரி முதலாம் திகதியிலிருந்து சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படும்.

இதன்படி சுயவிருப்பு ஓய்வு பெறும் ஒருவர் தமது ஓய்வூதியச் சம்பளம் மற்றும் 2000, 2001ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட படிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய - ஓராண்டுக்குச் சமனான - முற்கொடுப்பனவு ஒன்றைப் பெறுவார். அத்துடன், அவருடைய சம்பளத்துடன் 2000 மற்றும் 2001 ஆம் ஆண்டுகளில் பெற்ற படிகளையும் கூட்டிய தொகைக்குச் சமனான மாதாந்தக் கொடுப்பனவை அவரின் ஓய்வூதிய வயதான 55வயதை அடையும் வரை அவர் பெறுவார். அதன் பின்னர் பொருந்தத்தக்க ஓய்வூதியம் அவருக்கு தொடர்ந்து கிட்டும்.

அத்துடன், ஓய்வூதியம் பெறும் காலத்தில் அவர் நிலுவையாகச் செலுத்தவேண்டியிருக்கும் இடருதவிக் கடனில் 24 ஆயிரம் ரூபா நிவாரணமாக வழங்கப்படும். அத்தோடு நிலுவையாக நிற்கும் ஏனைய கடன்களும் ஓராண்டு சலுகை வழங்கப்படும். அதன் பின்னரே எதிர்கால மாதாந்தக் கொடுப்பனவுகளிலிருந்து அது கழிக்கப்படும். அதேசமயம், கடன் நிலுவை செலுத்த வேண்டியவர்களாக இல்லாத நிலையில் சுயவிருப்பு ஓய்வில் செல்வோருக்கு 24 ஆயிரம் ரூபாவும் -

24 ஆயிரம் ரூபாவுக்குக் குறைந்த தொகையை நிலுவையாக செலுத்த வேண்டி உள்ளோருக்கு இடைப்பட்ட அந்த எஞ்சிய தொகையும் -

அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு மாதாந்தக் கொடுப்பனவில் பங்கிட்டு வழங்கப்படும்.

இந்த சுயவிருப்பு ஓய்வுத்திட்டத்தின் கீழ் 2004 ஆம் ஆண்டில் ஒரு லட்சம் அரச ஊழியர்களையும், 2006ஆம் ஆண்டில் மேலும் இரண்டு லட்சம் அரச ஊழியர்களையும் அரச சேவையிலிருந்து குறைக்க முடியும் என அரசு திட்டமிட்டுள்ளது.

★ உரமானியம் இருநூறு கோடி ரூபாவிலிருந்து முந்நூறு கோடி ரூபாவாக அதிகரிக்கப்படுகின்றது. இதன்படி, யூரியாப் பை ஒன்றுக்கு அரசு வழங்கும் உதவுத்தொகை 300 ரூபாவிலிருந்து 450 ரூபாவாகக் கூடுகின்றது.

கடந்த தசாப்தத்தில் உரத்துக்கு வழங்கப்பட்ட மிக உயர்ந்த மானியம் இதுவாகும்.

அரச வங்கியிலிருந்து விவசாயக் கடன் பெற்ற விவசாயிகள் பயிர் இழப்பு மற்றும் ஏனைய நியாயமான காரணங்களினால் கடனைச் செலுத்துவது கடினமானது எனக் கண்டறியப்பட்டால் அவர்களுக்கு அக்கடன் முறையில் நிவாரணம் வழங்கும் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டிருக்கின்றது.

★ வைப்புகள் மீதான வட்டிகள் குறைக்கப்பட்டுள்ளன. ஓய்வு பெற்ற மற்றும் மூத்த பிரஜைகள் இதனால் பல இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றனர். இவர்களது வைப்புகளுக்கு உயர்ந்த வட்டி வழங்கும் திட்டம் ஒன்று அரச வங்கிகள் ஊடாக அறிமுகப்படுத்தப்படுகின்றது.

★ பெறுமதிசேர் வரிமுறை சீரமைக்கப்படுகின்றது. இதுவரை காலமும் இரு பிரிவுகளில் இந்த வரி அறவிடப்பட்டு வந்தது. ஒரு பிரிவின் கீழ் 20 வீதமும், மற்றைய பிரிவின் கீழ் 10 வீதமும் வரியாக அறவிடப்பட்டது. இந்த 20 வீத வரிப் பிரிவிலேயே நுகர்வோரினால் பயன்படுத்தப்படும் பெருமளவு எண்ணிக்கையான பொருள்கள் அடங்கியுள்ளன.

அடுத்த ஜனவரியிலிருந்து இரு பிரிவு முறை ஒன்றாக்கப்படுகின்றது. 15 வீதவரியே சகலவற்றுக்கும் - ஒற்றை வீதத்தில் - அறவிடப்படும்.

மருந்துப் பொருள்கள், குழந்தைகள் பால்மா, பழவகைகள் போன்ற பொருள்களுக்கு பெறுமதிசேர் வரியில் விலக்களிக்கப்படும்.

பெறுமதிசேர் வரி விதிப்புக்கான - காலாண்டுக்குரிய - மொத்த புரள்வின் அடிமட்ட அளவு 5 லட்சம் ரூபாவிலிருந்து ஏழரை லட்சம் ரூபாவாக அதிகரிக்கப்படுகின்றது.

★ வருமான வரி விலக்களிப்புக்கான மட்டம் 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபாவிலிருந்து மூன்று லட்சம் ரூபாவாக அதிகரிக்கப்படுகின்றது.

★ கைத்தொலைபேசிகளுக்கு வாடிக்கையாளர் வருடாந்தம் 300 ரூபா தீர்வை செலுத்தவேண்டியிருக்கும் இது அடுத்த ஜனவரி முதல் நடைமுறைக்கு வருகின்றது.

★ பியர் மீதான காலால் தீர்வை 1998ஆம் ஆண்டிலிருந்து மாறவில்லை எனினும், இப்போது அதற்கு புதிய வரி விதிக்கப்படுகிறது.

இதன்படி, 5 வீதத்திற்குக் குறைவான மதுசாரச் செறிவைக் கொண்ட பியருக்கு ஐந்து ரூபாவும் -

5 வீதத்திற்குக் கூடிய மதுசாரச் செறிவைக் கொண்ட பியருக்கு பத்து ரூபாவும் வரி விதிக்கப்படுகின்றது. இது உடனடியாக நடைமுறைக்கு வருகின்றது.

தூய மதுசாரம் மீதான காலால் தீர்வை லீற்றர் ஒன்றுக்கு 36 ரூபாவில் இருந்து 200 ரூபாவாக உடனடியாக அதிகரிக்கப்படுகிறது.

★ அரச ஊழியருக்கு வீடமைப்புக் கடன் வழங்குவதற்காக தற்போதுள்ள திட்டத்திற்கு மேலதிகமாக புதிய திட்டம் நடைமுறைக்கு வருகின்றது. வீடு கட்டுமானம், கொள்வனவு விரிவாக்கம், திருத்தம் மற்றும் வீடு கட்டுவதற்கு நிலக்கொள்வனவு போன்றவற்றுக்காக ஆகக்கூடியது பத்து லட்சம் ரூபாவினை 9.5வீத வட்டியுடன் 20 ஆண்டு காலப்பகுதியில் மீளச் செலுத்தக்கூடியதாக அரச ஊழியர்கள் பெற்றுக்கொள்ளமுடியும்.

★ நமது நாட்டில் முதலீடும், வைப்பும் செய்பவர்களுக்கு 49 வருடகால வதிவு விசா வழங்கப்படும்.

## நாடாளுமன்றை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தும் கருத்துக்களை அறிந்த பின்னர் ஒத்திவைப்பு நடவடிக்கையை மேற்கொண்டிருக்கலாம்.

நாடாளுமன்ற அமர்வை நிறுத்துகின்ற செயல் ஜனாதிபதியின் தனிச் சிறப்புரிமையாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. எனினும், எந்தவொரு நாட்டிலும் நாடாளுமன்றத்தின் விருப்புக்கெதிராக அதன் அமர்வு நிறுத்தப்படுவதில்லையென்பது நடைமுறை மரபினால் நன்கு நிறுவப்பட்டுள்ளது. பிரிட்டனில் நாடாளுமன்ற அமர்வை நிறுத்துகின்ற உரிமை மகாராணிக்கு இருந்தபோதிலும் நடைமுறை மரபின்படி அவர் தமது தத்துவங்களைப் பிரயோகிக்கையில் எப்போதும் அமைச்சரவையினதும் பிரதம அமைச்சினதும் ஆலோசனையைக் கோருகின்றார்.

ஆஸ்திரேலியாவில் அப்போதைக்குள்ள அரசின் ஆலோசனையைப் பின்பற்றி அமர்வு நிறுத்தத்துக்கான முடிவு எடுக்கப்படுகின்றது. இந்தியா, நியூஸிலாந்து, பிரெஞ்சுக் குடியரசு ஆகியவற்றிலும் இந்த நடைமுறையே பின்பற்றப்படுகிறது.

இலங்கையிலும் கூட நாடாளுமன்ற அமர்வு அரசின் பெரும்பான்மையின் அடிப்படையில் அதன் ஒப்புதலின்றி ஒருபோதும் நிறுத்தப்பட்டதில்லை. இச்சந்தர்ப்பத்தில், நாடாளுமன்ற அலுவல்கள் குழுவின் ஒப்புதலுடன் அதன் அலுவல்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளவேளையில், முறைப்படியான எவ்வித காரணத்துக்கான ஆதாரமுமின்றியும் ஒத்திவைக்கப்பட்டிருப்பது நாடாளுமன்றம் உரிய முறையில் செயற்படுவதை வேண்டுமென்றே திட்டமிட்டுத் தடுக்கின்ற ஒரு செயலாகவே கருதப்படுகிறது.

எந்தவொரு நாட்டிலும் நாடாளுமன்றம் அதன் விருப்புக்கெதிராக அமர்வு நிறுத்தப்படுவதில்லை.

- என்று தெரிவித்தார். (எ)

## நாடாளுமன்றக் கூட்டத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வித்தலும் இன்றி திடீரென இப்படி ஒரு தீர்ப்பை வழங்க முடியாது என்று அவர்கள் கூச்சலிட்டனர்.

மேசைகளைத் தட்டியும், ஆசனங்களில் இருந்து எழுந்து நின்றும் கூச்சலிட்டனர்.

இருப்பினும், அவர்களின் கூச்சலுக்கு மத்தியிலும் அரசின் அலுவல்கள் தொடர்ந்து இடம்பெற்றன. நிதி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட சில மதிப்பீடுகள், பிரதி நிதி அமைச்சர் பந்துல குணவர்த்தனவினால் சபையில் சமர்பிக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து சபை அமர்வு பிற்பகல் 2.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

(எ)

# மரண அறிவித்தல்கள்

## சீதாதேவி கெங்காதரன்

வணணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சீதாதேவி கெங்காதரன் காலமானார்.

அன்னார் Dr.T.கெங்காதரன் அவர்களின் அன்பு மனைவியும் Dr.சந்திரிகா தங்கராஜா (ஆஸ்திரேலியா), திருமதி சுலோஜனா குகானந்தன், ஹரிச்சந்திரன், நாகேந்திரன்(சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கலாநிதி J.சிதம்பரநாதன், சிவபாக்கியம், பசுபதி, பத்மநாதன், திருமதி கமலாதேவி சண்முகராஜன், J.விஷ்வநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் தங்கராஜா, காலஞ்சென்ற குகாநந்தன், திருமதி சுலோஜனா ஹரிச்சந்திரன், திருமதி இரஞ்சினி நாகேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும் சொருபினி அர்ச்சுனா, சஞ்சீவன், ஹேமலதா, நிருஜன், கணேஎஸ், அருண், சிவகாமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
Dr.T.கெங்காதரன்
VANWEST HOSPITAL
VANNARPANNAI

(24902) (36-14-17)

## சொலமன்பிள்ளை டோமினிக்

புலோலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழில் வசித்தவரும், கண்டியில் தற்போது வசித்தவருமான சொலமன்பிள்ளை டோமினிக் நேற்று (19.11.2003) புதனன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜெர்மன் அம்மாவின் அன்புக் கணவரும் அருட்தந்தை றோகான் (கிளறீசின் சபை), றீனி, றோணி ஆகியோரின் அன்புத் தந்தையும் திரேசம்மா கிறிஸ்தோப்பர், றேமன் இவர்களின் பாசமிகு சகோதரரும் பென்சமின் பிலிப்பு, செல்வராசா, செபஸ்தியாம்பிள்ளை ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
அருட்திரு. றோகான்
(கிளறீசின் சபை - கண்டி)

(24898)(31-14-17)

## கனகரத்தினம் இராசதுரை

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் இராசதுரை அவர்கள் நேற்று (19.11.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் பரமேஸ்வரன், இரவீந்திரன், சாந்தினி, குகேந்திரன் ஆகியோரின் தகப்பனாரும் செல்வகுமார், கமலநாயகி, யசோமதி, சயீலா ஆகியோரின் மாமனாரும் லக்சன், சாயித்தியா, பவித்திரா, தர்மினி ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற ஞானசுந்தரம், சிவபாக்கியம், சண்முகசுந்தரம் ஆகியோரின் சகோதரனுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கோண்டாவிலில் உள்ள அவரது இல்லத்தில இன்று (20.11.2003) வியாழக்கிழமை பி.ப. 3 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனத்துக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

*சைவப்பாடசாலை வீதி,*
*கோண்டாவில் மேற்கு.*

தகவல்:
கி.குகேந்திரன்

(24901) (30-14-17)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.11.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.